# பொருளியல் நோக்கு

மே
1987



# உதவி வழங்கும் நாடுகள் குழுவில் நிதியமைச்சர் ரொனீ டி மெல் ஆற்றிய தொடர்ச்சியான பத்தாவது உரை



கௌ. ரொனீ டி மெல்

பாரிஸ், ஜூன் 25

## தங்கு தடையின்றி செயல்படும் அபிவிருத்தித் திட்டம்

"இலங்கையில் மீண்டும் சமாதானமும் ஸ்திர நிலையும் தோன்ற வேண்டும் என நாம் அனைவரும் எதிர்பார்க்கும் இவ்வேளையில் நாம் ஓர் உண்மையைப் புறக்கணித்து விடலாகாது. அதாவது, நான்கு ஆண்டுகளாக நடைபெற்றுவரும் உள்நாட்டுப் போர், அதிகரித்துவரும் இராணுவச் செலவு என்பவற்றின் விளைவாக, சென்ற பத்தாண்டு காலமாக நாம் இலங்கையில் பேண முயன்று வரும் விவேகமிக்க பொருளாதார, நிதி முகாமையின் உயர் தரம் நலிவடைந்துவிடவில்லை என்பதாகும். எவ்வித இடைவெளியுமின்றி நாம் எமது அபிவிருத்தித் திட்டத்தை நிறைவேற்றி வந்துள்ளோம். தற்போதைய இனப்பிரச்சினை எவ்வாறிருப்பினும் நாம் எதிர்காலத்திலும் எமது உயர்ந்த பொருளாதார, நிதி முகாமையின் தரத்தைத் தொடர்ந்து பேணுவோம் என நான் எமது அரசாங்கத்தின் சார்பில் உறுதியளிக்க முடியும். நான் ஏற்கனவே உங்களுக்கு விளக்கிய எமது 1987 - 1989 ஆம் ஆண்டுக் காலப் பிரிவின் நடுத்தர நிதி உபாயத்தினால் இது உறுதிப்படுத்தப்படுகிறது."

"மேலதிக வருமான வளங்கள் திரட்டப்பட்டால் அல்லது பிற துறைகளில் செலவினச் சேமிப்புகள் செய்யப்பட்டால் மட்டுமே மிக முக்கியமான செலவினங்கள் அனுமதிக்கப்படும். இந்தப் பொருளாதாரச் செம்மைப்பாடு காரணமாக, சென்ற காலத்தில் அடையப் பெற்ற உயர்ந்த பொருளாதார வளர்ச்சி மட்டம் தொடக்கத்தில் ஓரளவு தாழ்த்தப்பட வேண்டிய நிலையை ஏற்படுத்தும் என்பதில் ஐயமில்லை. எவ்வாறாயினும் தனியார்துறைக்கு அதிகரித்த பொருளாதார வளங்கள் கிடைக்கச் செய்வதனாலும் கொள்கைச் சீர்திருத்தங்களால் அடையப் பெற்ற உற்பத்திப் பெருக்கத்தினாலும் சென்ற பத்தாண்டுகளில் சாதிக்கப்பெற்ற உள்ளமைப்பு அபிவிருத்தியினாலும் சென்ற காலத்தில் நாம் அடைந்திருந்த அபிவிருத்தி வேகத்தை மீண்டும் அடையலாம் என எதிர்பார்க்கலாம். எனினும் இது, தற்போதைய அரசியல் சூழ்நிலை சீரடையும் என்ற ஊகத்தை அடிப்படையாகக் கொண்டதாகும். வன்செயலால் பாதிக்கப்படாத நாட்டின் பிறபகுதிகளில் மேற்கொள்ளப்பட்டு வரும் பொருளாதார நடவடிக்கைகளின் பயனாக எதிர்வரும் ஆண்டுகளில் எல்லாமடங்கிய பொருளாதார வளர்ச்சி வீதம் ஏறத்தாழ 3.4 சதவீதமாக இருக்குமென நான் நம்புகின்றேன்."

## நடுத்தர பொது முதலீட்டுத் திட்டம்

"உங்களுக்கு அளிக்கப்பட்டுள்ள 1987 - 1991 நடுத்தர அரசாங்க முதலீட்டுத் திட்டம், இந்த முழுமையான சட்டகத்தின் வரையறைக்குள்ளேயே வகுக்கப்பட்டுள்ளது. 1987, 1988 ஆம் ஆண்டுகளில் பொருளாதாரத்தை ஸ்திரப்படுத்துவது முக்கிய நோக்கங்களில் ஒன்றாகும். எமது வெளிநாட்டுச் செலாவணி மாற்றுக் கொள்கை இலங்கையின் வெளிநாட்டுப் போட்டித் தன்மையைப் பேணுவதை நோக்கமாகக் கொண்டிருக்கும் அதேவேளையில், எமது பணக்கொள்கை, பணவீக்கத்தை மட்டுப்படுத்தி உற்பத்தித்துறைக்குக் கடன் கிடைக்கத்தக்க நிலையை விருத்தி செய்யக்கூடியதாக இருக்கும். அதே வேளையில், இந்தச் செம்மையாக்கல் பளுவை, நிதிச் செம்மையாக்கல் தாங்கிக் கொள்ளும்."

## புது எதிர்பார்ப்புகளை உருவாக்கல்

"நாம் எமது மக்களின் வருமானத்தை இருமடங்காக்கினோம்; வறுமையையும் வேலையில்லாமையையும் குறைத்தோம். மிக வறியவர்களைப் பாதுகாத்தோம். நலிவடைந்திருந்த பொது வசதிகளை சீர்திருத்தினோம்: இலட்சக் கணக்கானோருக்கு வருமானம் உழைப்பதற்கான வாய்ப்புக்களை ஏற்படுத்தினோம். அதேவேளையில் எமது ஜனநாயக ஆட்சி முறையையும், ஜனநாயக வாழ்க்கை முறையையும் பாதுகாத்தோம். இவ்வாறாக நாம், ஒரு ஜனநாயக அமைப்புக்குள்ளும், சுதந்திர பொருளாதார முறைக்குள்ளும் துரித பொருளாதார அபிவிருத்தியை அடையலாம் என்பதோடு, வறியவர்களிலும் வறியவர்களின் வாழ்க்கைத் தரத்தைப் பாதுகாக்கவும் முடியும் என்ற புதிய நம்பிக்கையையும் எதிர்பார்ப்பையும் நாம் உருவாக்கியுள்ளோம்."

## அபிவிருத்திக்குத் தடங்கல்கள்

"மிகவும் குறிப்பிடத்தக்கது யாதெனில் எந்த நாடும் எக்காலத்தும் எதிர்நோக்காத மிகச் சங்கடமான சூழ்நிலைகளில் நாம் இம்முன்னேற்றத்தை அடைந்துள்ளோம் என்பதாகும். இத்தகைய பயங்கரமான தடங்கல்களை எதிர்த்துப்போராடிக்கொண்டே சென்மதி நிலுவை நிலைமைகளைச் சீர்படுத்தி, போட்டிகள் நிறைந்த திறந்த பொருளாதாரத்தை வளர்ப்பதற்கு நாம் துணிகரமான, தீர்க்கமான முயற்சிகளை மேற்கொண்டுள்ளோம். இதனால் வருமானம் வளர்ச்சியடைந்திருப்பதுடன் எமது மக்களுக்கு நல்லதொரு எதிர்காலம் உண்டு என்ற நம்பிக்கையையும் சுடர்விடச் செய்துள்ளோம். 1977 முதல் எமது பொருளாதார முறையையும் கொள்கைகளையும் முற்றாக மாற்றியமைத்திராவிட்டால் இலங்கை எதிர்நோக்கியிருக்கத்தக்க தாங்கமுடியாத கஷ்டங்களை நினைக்கவே நான் அஞ்சுகிறேன்."

## அரசாங்கத்துறை நுகர்வைக் குறைத்தல்

"செலவினங்களைப் பொறுத்தவரை, அரசாங்கத்துறை நுகர்வைக் குறைப்பதற்கு இடமிருக்கிறது. நிர்வாக முறையைச் சீரமைப்பதற்கு நிர்வாகச் சீர்திருத்தம் பற்றிய ஒரு குழு சிபாரிசு செய்துள்ளது. அரசாங்க முயற்சிகளைக் கூடிய காரண - காரியத் தொடர்புடையதாக ஆக்குவதன் மூலம் வரவு செலவுத் திட்டச் சேமிப்புகளை ஏற்படுத்தலாம். இலங்கைக் கம்பெனிச் சட்டத்தின் கீழ் அரசாங்க முயற்சிகளைக் கம்பனிகளாக மாற்றுவதற்கு ஏற்கனவே சட்டங்கள் ஆக்கப்பட்டுள்ளன. ஏற்கனவே நட்டத்திலியங்கும் பல முயற்சிகள் மூடப்பட்டுவிட்டன. வேறு சில தனியார் துறை முகாமையின் கீழ் கொண்டுவரப்பட்டுள்ளன. இப்பொழுது நாம் தொலைத் தொடர்புச் சேவை, அரச வடிசாலைக் கூட்டுத்தாபனம், இலங்கை சீனிக் கூட்டுத்தாபனம் என்பவற்றைத் தனியார் துறைப்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளோம். வேறுபல அரசாங்க கூட்டுத்தாபனங்கள் உரிய காலத்தில் தனியார் துறைப்படுத்தப்படும். எதிர்கால தனியார் மயமாக்கலுக்கான உபாயத்தையும் திட்டத்தையும் வகுப்பதற்கு உயர்தர ஜனாதிபதி ஆணைக்குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது. மீதியாகவுள்ள அரசாங்க முயற்சிகளின் முகாமையைச் சீர்செய்து அவற்றின் செயலாற்றுகையை விருத்தி செய்வதற்கு உலக வங்கி உதவியுடன் பல நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. அரசாங்க ஏகபோக உரிமைகளை நீக்கி சமமான நியதிகளில் தனியார் துறையுடன் போட்டியை ஊக்குவிப்பதன் மூலம் அரசாங்க முயற்சிகளைக் கூடிய பயனுள்ளவையாக ஆக்குவதற்கு எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கை முக்கியமானதாகும்."

"அரசாங்க முயற்சிகள் தொடர்பாக நாம் நடைமுறைக்கேற்ற அணுகுமுறை ஒன்றைப் பின்பற்றுகின்றோம். எமது கொள்கை பொருத்தமான விடங்களில் தனியார் துறையிடம் கையளித்து முகாமையையும் செயல்திறனையும் விருத்தி செய்து அவற்றினால் வரியிறுப்போருக்கும் வரவு செலவுத் திட்டத்திற்கும் ஏற்படும் பளுவைக் குறைப்பதாகும்."

(33 பக்கம் பார்க்க)

# பொருளியல் நோக்கு

மலர் 13 இதழ் 2 மே 1987



மக்கள் வங்கியின்
ஆராய்ச்சிப்பகுதி வெளியீடு:
தலைமைக்காரியாலயம்,
11 வது மாடி,
கொழும்பு 2,
இலங்கை


## நிரல்கள்


| | | |
|---|---|---|
| வெளிநாட்டுத் தொகுப்பு | 21 | இந்தோனேஷியா பற்றிய உலக வங்கி குறிப்புக்கள் |
| விளைபொருள்கள் | 23 | தேங்காய் உற்பத்தி வீழ்ச்சி |


## விசேஷ அறிக்கை


| | | |
|---|---|---|
| | 3 | இலங்கையின் பொருளாதாரம் 1978 – 1987 |
| | 2 | இலங்கையின் பொருளாதாரம் பற்றி உலக வங்கி |
| | 4 | பொருளாதாரத்தின் தற்போதைய நிலை |
| திலக் சமரநாயகா | 6 | 1986 ல் பொருளாதாரம் பற்றிய மீளாய்வு |


## சிறப்புக் கட்டுரைகள்


| | | |
|---|---|---|
| லால் டி அல்விஸ் | 24 | மீன் பற்றுக்குறையை நிவர்த்தி செய்வதற்கான சர்ச்சைக்குரிய வழிகள் |
| திலக் முனசிங்க | 28 | இலங்கையில் இதயக்கலன் நோய்களின் பூர்வீகத் தடுப்பு முறைகள் |


பொருளியல் நோக்கு கருத்துக்களையும், அறிக்கைகளையும், புள்ளிவிவரத்தரவுகளையும், உரையாடல்களையும் பல்வேறு கோணங்களிலிருந்து அளிப்பதன் மூலம் பொருளாதாரத்திலும் பொருளாதார அபிவிருத்தியிலும் ஆர்வத்தை உண்டாக்கி அறிவினை வளர்ப்பதைக்குறிக்கோளாகக் கொண்டது.

பொருளியல் நோக்கு மக்கள் வங்கியின் ஒரு சமூகப் பணித்திட்டமாகும். எனினும் அதன் பொருளடக்கம் பல்வேறு ஆசிரியர்களால் எழுதப்பட்ட கட்டுரைகளைக் கொண்டதாயிருக்கும். அவை வங்கியின் கொள்கைகளையோ உத்தியோக பூர்வமான கருத்துக்களையோ பிரதிபலிப்பவையல்ல. எழுத்தாளரின் பெயருடன் பிரசுரிக்கப்படும் சிறப்புக்கட்டுரைகள் அவ்வாசிரியர்களின் சொந்தக்கருத்துக்களாகும். அவை அவர்கள் சார்ந்துள்ள நிறுவனங்களைப் பிரபலிப்பனவுமாகா. இத்தகைய கட்டுரைகளும், குறிப்புக்களும் வரவேற்கப்படுகின்றன.

பொருளியல் நோக்கு மாதந் தோறும் வெளியிடப்படும். அதனை சந்தா செலுத்துவதன் மூலமோ, விற்பனை நிலையங்களிலிருந்தோ பெற்றுக் கொள்ளலாம்.

## அடுத்த இதழில்

★ கைத்தொழில்கள்: கைத்தொழில் துறையின் தற்போதைய நிலையும் அதன் வளர்ச்சியையும் அபிவிருத்தியையும் எதிர்நோக்கும் பிரச்சினைகளும்

★ தனியார் மயப்படுத்தல் – பிரிட்டனின் அனுபவம்

★ சுற்றுலாத்துறையின் சமீபத்திய போக்குகள்

★ நெல் உற்பத்தி வீழ்ச்சி – 1986

அட்டைப்படம்
சேபாலிக்கா பெர்னாண்டோ

# இலங்கையின் பொருளாதாரம் பற்றி உலக வங்கி

உலக வங்கியின் பாரிஸ் அலுவலகத்தில் ஜூன் மாதத்தில் நடைபெறவிருக்கும் இலங்கைக்கான உதவிக்குழு நாடுகளின் கூட்டம், நாட்டின் பொருளாதார முன்னேற்றத்தை மீளாய்வு செய்வதுடன், வரும் ஆண்டில் இலங்கைக்குத் தேவைப்படும் வெளிநாட்டு உதவித் தேவைகள் குறித்தும் கலந்துரையாடும்.

இலங்கையின் சமீப கால பொருளாதார அபிவிருத்தி, அதன் தற்போதைய நிலை, எதிர்கால வாய்ப்புக்கள் என்பன பற்றிய உலக வங்கியின் மதிப்பீடு 1987 ஆம் வருடத்துக்கான அதன் ஆண்டறிக்கையிலிருந்து பெறப்பட்டு இங்கு கீழே சுருக்கித்தரப்படுகிறது.

இலங்கையின் பொருளாதாரம் 1977ல் தாராளமயமாக்கப்பட்டதையடுத்து நாட்டின் பொருளாதார வளர்ச்சி முன்னெப்போதுமிருந்திராத விதத்தில் வருடாந்தம் 5. 6 சத விகிதமாக இருந்து வந்திருக்கிறது. மெய் வீதங்களில் மொத்த உள்நாட்டு உற்பத்தி இப்பொழுது 40 சதவீதம் வரை உயர்வாக இருப்பதுடன், வேலையின்மை வீதம் ஒரு தசாப்தத்துக்கு முன்னர் இருந்ததைவிட மிகக்குறைந்த மட்டத்திலேயே இருக்கிறது. ஆனால், சமீப வருடங்களில் சில எதிரிடையான மாற்றங்கள் நிகழ்ந்தன. வளர்ச்சி மந்தமாகி, வேலையின்மை விகிதம் உயர்ந்து வந்த அதே வேளையில் சென்மதி நிலுவை நிலைமை மோசமாகிக் கொண்டு வந்தது.

வெளிச் சக்திகளின் கடுமையான தாக்கத்தினாலேயே பொருளாதாரம் மிக மோசமாக பாதிக்கப்பட்டது. 1980 களின் ஆரம்பத்தில் எழுச்சியடைந்து வந்த பேரண்டப் பொருளாதார சமனின்மைகளைச் சீர்செய்வதில் பொருளாதாரக் கொள்கை மாற்றங்கள் போதிய தாக்கமுடையவையாக இருக்கவில்லை. மேலும், 1983ன் இனக்கலவரம் நிலைமையை இன்னும் கஷ்டமாக்கியது.

இலங்கையின் பாரம்பரிய ஏற்றுமதிப்பண்டங்களான தேயிலை, இறப்பர், தேங்காய் என்பவற்றின் விலைகள் இரண்டாவது உலக யுத்தத்துக்குப் பின்னர் மிகக்குறைந்த மட்டங்களை அடைந்துள்ளன. இது தவிர, இலங்கையின் வர்த்தக நியதிகளில் ஏற்பட்ட சீர்குலைவு (1978 ன் பின்னர் 30 சதவீதம்) உடுதுணி ஏற்றுமதிகளுக்கு அபிவிருத்தியடைந்த நாடுகளில் விதிக்கப்பட்டு வரும் கோட்டா கட்டுப்பாடுகள், சமீபத்திய எண்ணெய் விலை வீழ்ச்சியை அடுத்து மத்திய கிழக்கில் பணிபுரியும் தொழிலாளரின் பண அனுப்பீடுகளில் காணப்பட்ட தேக்க நிலை என்பன நாட்டின் சென்மதி நிலுவையை மேலும் பலவீனப்படுத்திய காரணிகளாகும். இனப்பிரச்சினை காரணமாக சுற்றுலாப் பயணிகளின் வருகை குறைந்ததனால் பிரதானமான ஒரு வெளிநாட்டு நாணய சம்பாத்திய மூலத்தை நாடு இழக்கத் தொடங்கியிருக்கிறது. மறுபுறத்தில், உயர்ந்த பாதுகாப்புச் செலவுகள் இறக்குமதிச் செலவுகளை கடுமையாக அதிகரிக்கச் செய்துள்ளன.

உள்நாட்டு மூலவளங்களைத்திரட்டுதல், பொதுத்துறைப் பற்றுக் குறைகள், நடைமுறைக் கணக்கு பற்றுக்குறை ஆகிய மூன்று பிரதான துறைகளிலும் கொள்கை மாற்றங்கள் போதிய தாக்கமுடையனவாக இருக்கவில்லை. தற்பொழுது கிடைக்கக் கூடியதாயிருக்கும் குறைந்த அளவிலான உள்நாட்டு, வெளிநாட்டு மூலவளங்களுக்கேற்ப, பொருளாதாரம் நுகர்வு, முதலீட்டு மாதிரிகளை மாற்றியமைத்துக் கொள்ள வேண்டும். வளர்ச்சியைத் தடங்கல் செய்யாமலும், பொருளாதாரத்தை மந்தமொன்றுக்குள் இட்டுச் செல்லாமலும் இதனைச்சாதிக்க முடியுமா என்பது சந்தேகத்துக்குரியதாகும்.

பேரண்டப் பொருளாதார சமனின்மைகளை குறைப்பதற்கும், பொருளாதார வளர்ச்சியை தொடர்ந்து பிடித்து வைத்திருப்பதற்குமென அரசாங்கம் 1987-89 காலத்துக்கான ஒரு நிகழ்ச்சித்திட்டத்தை பாராளுமன்றத்தில் சமர்ப்பித்துள்ளது. (அ) 1986ல் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 32.5 சத வீதமாக இருந்த பொதுச் செலவினை 1989 க்குள் 28.5 சதவீதத்துக்கு குறைப்பதற்கும், (ஆ) அரசாங்க வருமானங்களை மொ. உ. உ. யில் 20 சத வீதத்துக்குள் வைத்திருப்பதற்கும், (இ) யதார்த்தமானதும், நெகிழ்ச்சியுடையதுமான ஒரு செலாவணி விகிதக் கொள்கையை பேணுவதற்கும் இந்நிகழ்ச்சித் திட்டம் எதிர்பார்க்கிறது. இந்நிகழ்ச்சித் திட்டத்தை அரசாங்கம் உடனடியாக அமுல் நடத்த வேண்டும்.


சாதகமான சென்மதி நிலுவை நிலையொன்றை அடைவதே முதல் முன்னுரிமையாக இருத்தல் வேண்டும். இரண்டாவதாக, பொதுத்துறைச் செலவுகளில் காணப்படும் பற்றுக்குறைகளை குறைப்பதற்கும் பொதுச் செலவுகளை திறமையான விதத்தில் செய்வதற்கும் இக்கொள்கை மாற்றங்கள் வழி வகுக்க வேண்டும். இறுதியாக, பொருளுற்பத்தித்துறையின் ஆற்றலை விருத்தி செய்வதற்கும், இத்துறையின் ஏற்றுமதிப் பங்களிப்பை உயர்த்துவதற்குமென கைத்தொழில் கொள்கைகள் மாற்றியமைக்கப்படுதல் வேண்டும்.


இலங்கையின் ஏற்றுமதி அடித்தளத்தை நடுத்தர காலத்திலும், நீண்ட காலத்திலும் விஸ்தரிப்பதே நாட்டின் சென்மதி நிலுவைப்பிரச்சினைகளுக்கான ஒரே தீர்வாகும். இந்நோக்கங்களை எய்துவதற்காக செலாவணி விகிதங்களை பொருத்தமான ஒரு மட்டத்தில் வைத்திருப்பது அத்தியாவசியமாகும். மேலும், பொதுச் செலவுகளை விவேகமான முறையில் நெறிப்படுத்துவதும், முதலீட்டு முன்னுரிமைத்துறைகளை மீளாய்வு செய்வதும் நாடு எதிர் நோக்கும் அவசரப்பணிகளாகும்.

இவ்வாண்டு பெப்ரவரி மாதம் மந்திரி சபையினால் அங்கீகரிக்கப்பட்ட கைத்தொழில் கொள்கை ஆக்க கமிட்டியின் அறிக்கையானது, இலங்கையின் கைத்தொழிலையும் கைத்தொழில் ஏற்றுமதிகளையும் தீவிரமாக அதிகரிப்பதற்கு இலங்கை எடுக்கும் முதலாவது பிரதான முயற்சியாகும். மிதமான 50 சதவீத பாதுகாப்புடன் கூடிய தாக்கமான தீர்வைய்மைப்பொன்றை இக்கொள்கை அறிமுகஞ்செய்து வைக்கும்.

தேயிலை, இறப்பர், தென்னை என்பவற்றுக்கான நிச்சயமற்ற எதிர்காலம், ஏற்றுமதித்துறை குறைவாகவே பன்முகப்படுத்தப்பட்டிருத்தல் என்பவற்றின் காரணமாக ஏற்றுமதிகளை அதிகரிக்கச் செய்வதில் இக்கொள்கைச் சீர்திருத்தங்களின் தாக்கம் நடுத்தர காலத்தில் மட்டுமே உணரப்படும். உடனடி எதிர்காலத்தில் எதிர்பார்க்கப்படும் குறைவான மொத்த உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சி விகிதம், அதன் விளைவான குறைவான இறக்குமதி வளர்ச்சி விகிதம் என்பவற்றுக்கு மத்தியிலும் கூட 1987-89 மூன்றுண்டு காலத்தில் வருடமொன்றுக்கு 73 கோடி டொலர் மூலதன உட்பாய்ச்சல் நாட்டுக்குத் தேவையாக இருக்கும். திட்ட நிதிப்படுத்தல் பண்ட உதவி என்ற வகையில் 1987-89 காலப்பகுதியில் 59 கோடி டொலர் கிடைக்கக் கூடியதாக இருக்கும்.

அரசாங்கத்தின் முதலீட்டுத் திட்டத்தில் செய்யப்படும் வெட்டுகளுக்கு ஈடு செய்யும் விதத்தில் உதவி வழங்கும் நாடுகள் பண்ட உதவியையும், திட்டமல்லாக் கொடுகடன்களையும் அதிகரிக்க முடியுமாயின் வெளிநாட்டு நிதித்தேவைகளில் 41.5 கோடி டொலர்கள் மட்டுமே நிதிப்படுத்தப்பட வேண்டியிருக்கும். அரசாங்கம் வெற்றிகரமான ஒரு நிகழ்ச்சித்திட்டத்தை அமுல் செய்யுமாயின் உதவி வழங்கும் நிறுவனங்களிலிருந்து இத்தொகையைப் பெறுவது அவ்வளவு கஷ்டமானதாக இராது.




# இலங்கையின் பொருளாதாரம் 1987

கடந்த ஒன்பது வருடகால (1978–1986) இலங்கையின் பொருளாதார அனுபவம் பல வழிகளிலும் சுவாரஷ்யமானதாகும். 1977ன் பொருளாதார சீர்திருத்தங்களை அடுத்து சுதந்திரத்துக்குப்பிற்பட்ட காலத்தில் பின்பற்றப்பட்டு வந்த இறக்குமதிப் பிரதியீட்டு பொருளாதார உபாயம் பெருமளவுக்கு மாற்றியமைக்கப்பட்டது. இதற்குப் பதிலாக சந்தைச் சக்திகளின் பங்களிப்பினை அதிக அளவில் வேண்டி நிற்கும் ''வெளிநோக்கிய பார்வை' என்ற உத்தி அறிமுகப் படுத்தப்பட்டது. தீர்வைகளும் ஏனைய கட்டுப்பாடுகளும் அகற்றப்பட்டதுடன் தனியார் துறை கூடிய பங்காற்ற வேண்டுமென எதிர்பார்க்கப்பட்டது.

பொருளாதார வளர்ச்சி, வேலை வாய்ப்பு என்ற துறைகளைப் பொறுத்த வரையில் இப்புதிய கொள்கைத்தொகுதி தொடர்பான ஆரம்ப எதிர்விளைவு சாதகமானதாகவே இருந்தது. எனினும், சமீபத்தில் பொருளாதாரத்தில் சில கவலையூட்டும் அம்சங்கள் தென்படத் தொடங்கியுள்ளன. ஆரம்பத்தில்—அதாவது 1978ல்— 8.8 சதவீதமாக உயர்ந்து காணப்பட்ட வளர்ச்சி வீதம் 1986ல் 4.5 சதவீதமாக குறைந்துவிட்டது. 1977ல் 24 சதவீதமாக இருந்து 1981ல் 12 சதவீதமாக வீழ்ச்சியடைந்த வேலையில்லாதோர் விகிதம் 1986ல் மீண்டும் 17 சதவீதமாக அதிகரித்துள்ளது. பணவீக்கம் 1985ல் 1.5 சதவீதமாக மிகக்குறைந்த மட்டத்திலிருந்து 1986ல் 8 சதவீதம் வரையில் அதிகரித்துவிட்டது. வரவு செலவுத்திட்டப் பற்றுக்குறை இப்பொழுது 2600 கோடி ரூபா வரையில் வந்துவிட்டது. கடன் சேவைச் சுமை 1984ல் மொத்த தேசிய உற்பத்தியின் 17.5 சதவீதமாக இருந்து 1986ல் 22.4 வீதம் வரையில் உயர்ந்து சென்றிருக்கிறது.

பிரதம விளைபொருள்களின் சர்வதேச விலை மட்டங்கள் வீழ்ச்சியடைந்தமை சமீபத்திய வறட்சி, இனக்கலவரங்கள், அதிகரித்த பாதுகாப்புச் செலவினம் என்பன பொருளாதாரத்தின் வளர்ச்சி ஆற்றலை பெருமளவுக்கு மட்டுப்படுத்திய காரணிகளாகும். நாட்டின் பொருளாதாரத்தைப் பாதித்து வரும் இரு பிரதான பலவீனங்கள் வரவு செலவுத் திட்டப் பற்றுக்குறையும், குறுகிய ஏற்றுமதி அடித்தளமுமே என நிதியமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

கடந்த ஒன்பதாண்டு காலத்தில் பொருளாதாரத்தின் சாதனைகள் அது இப்பொழுது எதிர்நோக்கும் பிரச்சினைகள் என்பன பற்றிய ஒரு பகுப்பாய்வு அடுத்து வரும் பக்கங்களில் இடம் பெறுகிறது.

## பொருளாதாரத்தின்

### பொது முதலீட்டு நிகழ்ச்சித் திட்டங்களின்

**1978**

ஆகஸ்ட் 1977ல் ஆரம்பித்து வைக்கப்பட்ட கொள்கைச் சீர்திருத்தங்கள் தொடர்பான பொருளாதாரத்தின் எதிர்விளைவு உற்சாகமூட்டுவதாக இருந்தது. உள்நாட்டு உற்பத்தியாளர், நுகர்வோர் தரப்பிலும், சர்வதேச சமூகத்தின் தரப்பிலும், இழந்திருந்த நம்பிக்கையை மீண்டும் துளிர்க்கச் செய்தமையை மிகப்பெரும் சாதனையாக கருதமுடியும். கடந்த காலத்தின் தளைகள் பலவாகும்; இவற்றைக் களைந்து துரிதமான பொருளாதார, சமூக முன்னேற்றத்தை எய்தும் நோக்கில் கொள்கைகளும், நிறுவனங்களும் சரியாக நெறிப்படுத்தப்பட்டு, கூடிய தூரம் முன்னேக்கிச் சென்றுள்ளன. இந்த மாறுதல் படிமுறை தொடர்ந்து நடைபெற்றுவரும் ஒன்றுக இருக்க வேண்டும்.

பொது முதலீடு 1979 - 1983

**1979**

மந்தமான வளர்ச்சியும், தேக்க நிலையும் காணப்பட்ட 1970 - 77 காலகட்டத்தின் பின் 1978, 1979 வருடங்களில் பொருளாதாரத்தின் செயற்பாடு குறிப்பிட்டுக் கூறக் கூடிய ஒரு சாதகமான மாற்றத்தைப் பதிவுசெய்தது. 1978 ஆம் ஆண்டில் மெய் அளவுகளில் மொத்த தேசிய உற்பத்தியில் ஏற்பட்ட அதிகரிப்பு 9.2 சதவீதம் வரை உயர்ந்திருந்தது. இது முன்னைய தசாப்தத்தின் சராசரி வருடாந்த வளர்ச்சி மட்டத்தை விடவும் இரு மடங்கு அதிகமானதாகும். 1979 ஆம் வருட வளர்ச்சி 6.2 சதவீதமாக ஓரளவுக்கு குறைந்திருந்த போதிலும் 1978-ன் வளர்ச்சிப் போக்கு நீடிக்கும் அறிகுறிகள் தெளிவாகத் தெரிந்தன. பொது முதலீட்டு நிகழ்ச்சித் திட்டத்தில் (1979 - 83) எதிர்பார்க்கப்பட்டிருந்த வளர்ச்சி வீதத்தை விடவும் இது அதிகமாக இருந்தது குறிப்பிடத்தக்கதாகும். முன்னைய வருடங்களைப் போலன்றி, இவ்வளர்ச்சி பொருளாதாரத்தின் சகல நடவடிக்கைத் துறைகளிலும் வியாபித்து காணப்பட்டது 1978 ஆம் ஆண்டில் விவசாயத் துறை 5.4 சதவீத வளர்ச்சியைப் பதிவு செய்ததுடன், சுரங்கமழ்தல், கைத்தொழில் உற்பத்தி ஆகிய இரு துறைகளும் சேர்ந்து 10 சதவீத வளர்ச்சியைப் பதிவு செய்தன. நிர்மாணத்துறையைப் பொறுத்த வரையில் சேர்க்கப்பட்ட பெறுமதியில் ஏற்பட்ட அதிகரிப்பு 26 சதவீதமாகும்; இது சமீப காலத்தில் எய்தப்பட்ட மிக உயர்ந்த மட்டமாக இருந்தது. வியாபாரம், போக்குவரத்து, ஏனைய சேவைத்துறைகள் என்பன 7.7 சதவீத வளர்ச்சியைக் காட்டின.

பொது முதலீடு 1980 - 1984

**1980**

அரசாங்கம் பதவியேற்று நான்கு வருடங்களைப் பூர்த்தி செய்திருக்கிறது. இக் காலப் பிரிவில் பொருளாதாரம் பாரிய அளவில், முன்னேற்றகரமான விதத்தில் தாராளமயப்படுத்தப்பட்டுள்ளது. இதே வேளையில், பொருளாதாரத்துக்கு புத்துயிரூட்டுவதற்கும், தற்சார்பான வளர்ச்சிப் பாதையொன்றில் பொருளாதாரத்தை நிலை நிறுத்துவதற்குத் தேவையான சமூக, பொருளாதார பொது வசதிகளை வழங்குவதற்குமென அரசாங்கம் பொது முதலீட்டுத்திட்டமொன்றை அமுல் செய்வதற்கு முன்னெப்போதுமிராத விதத்தில் முயற்சி எடுத்து வந்துள்ளது. 1978 – 1979 ஆகிய இரு ஆண்டுகளிலும் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சராசரி வளர்ச்சி மெய் அளவுகளில் 7.3 சதவீதமாக இருந்ததுடன், வேலையின்மை வீதம் குறைந்தது. சுமார் இரு தசாப்தங்களுக்குப் பிறகு சந்தைப் பொறிமுறை மீண்டும் எழுச்சி பெற்றது இங்கு குறிப்பிட்டுக் கூறக் கூடிய ஒரு விருத்தியாகும். நீண்ட காலம் நிலவி வந்த தட்டுப்பாடுகள், கியூவரிசைகள் என்பன மறைந்துவிட்டன. இறக்குமதிகளிலிருந்து வந்த போட்டி உள்நாட்டுக் கைத்தொழில்களின் உற்பத்தித் தரம் உயர்வதற்கு ஏதுவாக இருந்ததுடன், சில உற்பத்திகள் தொடர்பாக நுகர்வோர் பல தெரிவுகளைக் கொண்டிருந்தனர்.

பொது முதலீடு 1981 - 1985

**1981**

1977 ஆம் ஆண்டில் அறிமுகஞ் செய்து வைக்கப்பட்ட கொள்கைத் தொகுதியின் அடிப்படையிலேயே தொடர்ந்தும் அரசாங்கத்தின் பொருளாதார உத்தி அமைந்திருந்தது. நீண்ட காலம் இறுக்கமான கட்டுப்பாடுகளில் சிக்குண்டிருந்த பொருளாதாரத்தை மீட்டெடுத்து, சந்தைச்சக்திகளும், தனியார் துறையும் முக்கிய பங்கு வகிக்கும் பொருளாதாரச் சூழலொன்றை உருவாக்கும் விதத்திலேயே இக்கொள்கைத் தொகுதி வடிவமைக்கப்பட்டிருந்தது. நெகிழ்த்தக்க செலாவணி விகிதத்துடன் கூடிய செலாவணி விகிதச் சீர்திருத்தம், இறக்குமதி தாராளமயமாக்கல், விலைக் கட்டுப்பாடுகளை அகற்றுதல், யதார்த்தமான வட்டி வீத அமைப்பு, தீர்வை தொடர்பான சீர்திருத்தங்கள், மூலவளங்களை நுகர்விலிருந்து முதலீட்டுக்குத் திசைதிருப்பியமை என்பன ஆரம்பக் கொள்கைச் சீர்திருத்தங்களில் அடங்கியிருந்தன.

சர்வதேச பொருளாதார சூழல், 1977 லிருந்து இன்றுவரையில் இலங்கைக்கும், எண்ணெய் உற்பத்தி செய்யாத பல வளர்முக நாடுகளுக்கும் கசப்பானதாக இருந்து வரும் அதே வேளையில், கொந்தளிப்புக்கள் சூழ்ந்ததாகவும் காணப்படுகிறது. தூர நோக்குள்ள பொருளாதாரச் சீர்திருத்தங்களை அங்குரார்ப்பணம் செய்து வைப்பதற்கு இது நிச்சயமாக ஒரு சாதகமான சூழ்நிலையல்ல. இலங்கையின் வர்த்தக மாற்றுவீதம் 1977 க்குப் பின்னர் மிக மோசமான விதத்தில் சீர்குலைந்து வந்தது. இக்காலத்தில் இதில் காணப்பட்ட வீழ்ச்சி 30 சதவீதமாக இருந்ததுடன், இந்நிலைமை, தாராள வர்த்தகக் கொள்கையொன்றை அமுல் நடாத்துவதற்கு பொருத்தமானதாக இருக்கவில்லை. இத்தகைய பாதகமான சூழ்நிலைகளுக்கு மத்தியிலும் கூட, 1977ன் தாராளமயக் கொள்கைகளை தொடர்ந்து நிலைநிறுத்தி, விருத்தி செய்யக் கூடியதாக இருந்தமை ஒரு குறிப்பிடக் கூடிய சாதனையாகும். இம்முயற்சியில் உதவி வழங்கும் சர்வதேச நிறுவனங்களின் பங்கு கணிசமானதாகும்.

பொது முதலீடு 1982 - 1986

**1982**

அரசாங்கம் புதிய பொருளாதாரக் கொள்கைகளை ஆரம்பித்து வைத்து இப்பொழுது சுமார் ஆறு வருடங்களாகின்றன. இக் கொள்கைகளுக்கு எதிர்விளைவு காட்டுவதற்கு பொருளாதாரத்துக்கு போதிய கால அவகாசம் கிடைத்திருப்பதுடன் நிலைமையைக் கணக்கிட்டு, போக்குகளைப் பகுப்பாய்வு செய்து, எதிர்கால உத்திகளை பகுப்பதற்கு கொள்கைத் திட்டமிடுவோருக்கு இது தருணமாகும். பொதுவான வெளித்தோற்றம் உற்சாக மூட்டுவதாகவே தென்படுகிறது. தேக்க

## தற்போதைய நிலை

**மதிப்பீடு 1979 – 83, 1987 - 91**

முற்றிருந்த பொருளாதாரமொன்று புத்துயிரூட்டப் பட்டதுடன், அதன் வளர்ச்சி இயக்கப்பாடு எதிர்காலத்தில் பல மாற்றங்களைக் கொண்டு வரக்கூடியதாக இருக்கும். 1978 – 1982 ஐந்து வருட காலத்தில் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் வளர்ச்சி வீதம் அதற்கு முந்திய ஐந்து ஆண்டுகளின் வளர்ச்சி வீதத்தைவிட இரண்டு மடங்கு அதிகமானதாக இருந்தது. அதிகளவிலான வேலைவாய்ப்புக்களும் உருவாக்கப்பட்டன. தொழிலாளர் படையில் வேலையற்றோரின் விகிதம் 1977 ஆம் ஆண்டில் 25.9 சதவீதமாக இருந்து 1982 ஆம் ஆண்டில் 13.4 சதவீதமாக வீழ்ச்சியடைந்திருந்தது.

பொது முதலீடு 1983 - 1987

**1983**

1978 இலிருந்து 1983 வரையிலான காலகட்டத்தின் அனுபவத்தின் பின்னணியில் அடுத்த ஐந்து ஆண்டுகளுக்கான பொது முதலீட்டு நிகழ்ச்சித்திட்டம் சமர்ப்பிக்கப்படுகிறது. 1983 ஜூலை சம்பவங்கள் பொருளாதாரத்தின் மீது ஓரளவுக்கு தாக்கத்தை ஏற்படுத்திய போதிலும் மீட்சி வேகம் குறிப்பிடக் கூடியதாக இருந்தது. பொருளாதார வளர்ச்சி, முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் ஓரளவுக்கு பாதிப்படைந்திருந்த போதிலும், 1983ல் எய்தப்பட்ட வளர்ச்சி 1977க்கு முந்திய காலத்தின் வருடாந்த சராசரியை விடவும் உயர்வானதாகவே இருந்தது. பிரதானமாக கைத்தொழில்கள், சேவைகள் போன்ற துறைகளில் மந்தம் காணப்பட்ட போதிலும், நெல்லுற்பத்தியில் முன்னெப்போதுமிராத வளர்ச்சி காணப்பட்டது. வருமானம், வேலைவாய்ப்புக்கள் என்பன சாதகமான போக்கினைக்காட்டின.

பொது முதலீடு 1984 – 1988

**1984**

கடந்த ஏழு ஆண்டுகளையும் திரும்பிப்பார்க்கும் போது ஒரு சாதனையை நிகழ்த்திய திருப்தி ஏற்படுகிறது. தேங்கிக்கிடந்த பொருளாதாரமொன்றுக்கு புத்தூக்கமூட்டுவதிலும், புதிய வழியொன்றில் இட்டுச் செல்வதிலும், புதிய கொள்கையை அறிமுகஞ் செய்து வைத்த ஆரம்ப வருடங்களிலேயே அரசாங்கம் வெற்றி கண்டுள்ளது. ஒரு புறத்தில், மெய் அளவுகளில் பொருளாதார வளர்ச்சி கணிசமான அளவில் அடையப்பட்டிருந்ததும், மறுபுறத்தில், மிகக் கொந்தளிப்பான உள்நாட்டு, வெளிநாட்டுச் சூழ்நிலைகளின் தாக்கங்களுக்கு மத்தியில் பொருளாதாரம் நிலைகுலையாது உறுதியாக நின்று பிடித்ததும் இவ்வுத்தியின் வெற்றிக்கு சான்றுகளாகும்.

பொது முதலீடு 1985 - 1984

**1985**

1977 ஆம் ஆண்டின் கொள்கைச் சீர்திருத்தங்களால் உந்தப்பட்ட வளர்ச்சி வேகத்தை நிலையாகப் பேணிக் கொள்ளும் அதன் ஆற்றலை, பொருளாதாரம் 1985 ஆம் ஆண்டில் மீண்டும் ஒரு முறை நிரூபித்துள்ளது. உற்பத்தியையும், பொருட்களினதும் சேவைகளினதும் விநியோகத்தையும் பாதித்த நாட்டின் வடக்கு, கிழக்கு பிரதேசங்களின் குழப்பங்களுக்கு மத்தியிலும், வானளாவ உயர்ந்து வரும் பாதுகாப்புச் செலவுகளுக்கு மத்தியிலும் கூட கடந்த ஆண்டில் பொருளாதாரம் 5 சதவீத கூட்டு மொத்த வளர்ச்சி வீதத்தைப்பதிவு செய்துள்ளது.

பொது முதலீடு 1986 - 1990

**1986**

இலங்கைப் பொருளாதாரத்தின் வளைந்து கொடுக்கும் தன்மையையும், 1977 ஆம் ஆண்டில் ஆரம்பித்து வைக்கப்பட்ட அபிவிருத்திப் பாதையில் தொடர்ந்து பயணம் செய்வதற்கான நாட்டின் கொள்கை வகுப்போரின் விருப்பையும் திடசித்தத்தையும் 1986ல் பல வெளிக்காரணிகள் சோதனைக்குள்ளாக்கின...... இலங்கை 25 ஆண்டு காலத்தில் அனுபவித்த மிக மோசமான வறட்சி, 1986ல் விவசாய உற்பத்தியையும், பண்ணை வருமானங்களையும் கடுமையாகப்பாதித்தது மட்டுமன்றி 1987ன் முதல் காலாண்டிலும் தொடர்ந்து நிலவி வருகிறது...... இறக்குமதிகளின் அதிகரிப்பு, தேயிலை ஏற்றுமதி வருமானங்களின் வீழ்ச்சி என்பவற்றின் கூட்டு விளைவாக சென்மதி நிலுவை நிலைமை கடுமையாக மோசமடைந்துள்ளது...... விலை வீழ்ச்சி காரணமாக தேயிலை, இறப்பர், தென்னை என்பவற்றின் ஏற்றுமதி வருமானங்கள் 1986ல் செங்குத்தாக வீழ்ச்சி கண்டுள்ளன...... விளை பொருள்களின் ஏற்றுமதி விலை வீழ்ச்சியின் தாக்கம் உற்பத்தியாளர் இலாபங்களிலும், அரசாங்கத்தின் வருமானத்திலும் உணரப்பட்டுள்ளது.

வடக்கு, கிழக்குப்பகுதிகளில் பயங்கரவாத நடவடிக்கைகளும், அவற்றின் உடன் விளைவான பாதுகாப்புச் செயற்பாடுகளும் பொருளாதாரத்தின் பல துறைகளிலும் கடுமையான தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளன. பல அரசாங்க கட்டடங்கள், கல்வி நிறுவனங்கள், வங்கிகள், தொலைத் தொடர்பு, மின்சார உபகரணங்கள் என்பனவும் பாதைகள், பாலங்கள் போன்றனவும் அழிக்கப்பட்டமை சமூக பொது முதலீட்டு வசதிகளைப் பாதித்துள்ளன. மொத்த வரவு செலவுத் திட்டச் செலவில் 1982ல் 3.2 சதவீதமாக இருந்த அரசாங்கத்தின் பாதுகாப்புச் செலவினம் 1986ல் 13.6 சதவீதமாக அதிகரித்திருந்தது. மொத்த உள்நாட்டு உற்பத்தியின் மெதுவான வளர்ச்சி வேகம், வேலைவாய்ப்புக்களின் உருவாக்கம் குறைவாக இருந்தமை என்பன 1986ல் இக் காரணிகளின் தேறிய விளைவுகளாகும். மொத்த உள்நாட்டு உற்பத்தி 4 சதவீதமாக - 1977ன் பின்னர் மிகக்குறைந்த வீதம் - மட்டுமே அதிகரித்ததுடன், 1984ல் 14 சதவீதமாக வீழ்ச்சியடைந்திருந்த வேலையின்மை வீதம் இப்பொழுது 16,17 சதவீதம் வரை வந்து விட்டது. பொருளாதாரத்தின் வளர்ச்சி வேகம் மீண்டும் நிலை நிறுத்தப்படாதுவிடின், 1990 அளவில் வேலையின்மை விகிதம் 19 - 20 சதவீதம் வரையில் உயருவதற்கு இடமுண்டு. 1986ன் பொருளாதாரச் செயற்பாட்டில் கவலையூட்டும் அம்சமாக இருந்தது அதிகரித்த கடன் சேவைக் கொடுப்பனவுகளாகும். இது 27 சதவீதமாக அதிகரித்திருந்ததுடன், ஏற்றுமதிகள் மூலமும், சுற்றுலாத்துறை மூலமும் பெறப்பட்ட அன்னியச் செலாவணிச் சம்பாத்தியங்களில் கணிசமான பகுதியையும் விழுங்கிக்கொண்டது.

பொது முதலீடு 1987 - 1991

# 1986ஆம் ஆண்டில் பொருளாதாரத்தின் செயற்பாடு பற்றிய மீளாய்வு

திலக் சமரநாயகா

அறிமுகம்

இலங்கையின் பொருளாதாரம் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் அடிப்படையில் அளவிடப்படின் மெய் அளவுகளில் (1982ம் வருட நிலையான விலைகளில்) 4.3 சதவிகிதம் அல்லது நடப்பு (1986 ம் வருட) விலைகளில் 10.4 சதவிகிதம் வளர்ச்சியுற்றது. நிலையான விலைகளில் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் பெறுமதி 1985 ம் ஆண்டிலிருந்த 10,957 கோடி ரூபாவிலிருந்து 1986 ம் ஆண்டில் 11,426 கோடி 10 இலட்சம் ரூபாவுக்கு அதிகரித்தது; நடப்பு விலைகளில் 1985 ம் ஆண்டிலிருந்த 14,832 கோடி 10 இலட்சம் ரூபாவிலிருந்து 1986 ம் ஆண்டில் 16,371 கோடி 30 இலட்சம் ரூபாவுக்கு அதிகரித்தது. வெளிநாடுகளிலிருந்து கிடைக்கும் நிகரக் காரணி வருமானம் சம்பந்தமாக மொத்த உள்நாட்டு உற்பத்தி சீராக்கஞ் செய்வதன் மூலம் கணக்கிடப்படும் மொத்தத் தேசிய உற்பத்தி நிலையான விலைகளில் 4.5 சதவிகிதமும், நடப்பு விலைகளில் 10.9 சதவிகிதமும் அதிகரித்தது. எனினும், 1986 ஆம் ஆண்டில் நிலையான விலைகளிலும் (ரூ. 11,426 கோடி) நடப்பு விலைகளிலும் (ரூ. 16,371 கோடி) மொத்தத் தேசிய உற்பத்தியின் பெறுமதிகள் அவ்வாண்டில் மொத்த உள்நாட்டு உற்பத்தி சம்பந்தப்பட்ட பெறுமதிகளைவிடக் குறைவாகவே இருந்தன. இதனுல் 1986 ம் ஆண்டிலும் மூலவளங்களின் வெளிப்பாய்வொன்று இருந்ததென்பது தெரிய வந்தது. கடந்த சில வருடங்களில் இலங்கையின் தேசியக் கணக்குகளில் இந்தப் போக்கு தொடர்ந்திருந்துவரும் ஓர் அம்சமாக இருந்து வந்துள்ளது.

துறை வாரியாகப் பகுப்பாய்வு செய்யுமிடத்து, விவசாயத் துறையில் ஆகக்குறைந்த அளவான 2.6 சதவிகிதத்திலிருந்து பொருளுற்பத்தித்துறையில் ஆகக்கூடிய அளவான 8.4 சதவிகிதம் வரை வளர்ச்சி விகிதங்கள் மாறுபட்டுள்ளன. மொத்த உள்நாட்டு உற்பத்தியின் பிரதான துறைகளில், மூன்று துறைகள் மட்டுமே கூட்டுமொத்த வளர்ச்சி விகிதத்துக்கு மேற்பட்ட ஒரு வளர்ச்சி விகிதத்தைப் பதிவு செய்தன. அதாவது சுரங்கத் தொழில் துறை (5.2 சதவிகிதம்), பொருளுற்பத்தித்துறை (8.4 சதவிகிதம்), வகைப்படுத்தப்படாத துறை (6.0 சதவிகிதம்); விவசாயத் துறையில் மட்டுமன்றி, நிர்மாணத்துறை (3.0 சதவிகிதம்) யிலும், போக்கு வரத்துத்துறை (3.2 சதவிகிதம்) யிலும் மொத்த விற்பனை - சில்லறை விற்பனைத்துறை (3.9 சதவிகிதம்) யிலும் வங்கித் தொழில் - மெய் ஆதனத்துறை (6.0 சதவிகிதம்) யிலும் குறைவான வளர்ச்சி விகிதங்கள் பதிவு செய்யப்பட்டன.

8.4 சதவிகித வளர்ச்சி விகிதத்துடன் (மொத்த உள்நாட்டு உற்பத்தியின் ஏறக்குறைய இருமடங்கு வளர்ச்சி விகிதத்துடனும் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 15.4 சதவிகிதப் பங்குடனும்) 1986 ம் ஆண்டில் பொருளுற்பத்தித் துறை பெறுமதி உருவங்களில் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் வளர்ச்சியில் ஆகக்கூடிய அளவான 29 சதவிகிதத்தை உதவுவதற்குப் பொறுப்பாயிருந்தது. மொத்த உள்நாட்டு உற்பத்தியின் பங்கு 25.4 சதவிகிதமாயிருந்தபோதிலும், விவசாயத்துறை 15 சதவிகிதத்துக்கு மட்டுமே பொறுப்பாயிருந்தது. ஏனென்றுல் அதன் வளர்ச்சி விகிதம் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் கூட்டு மொத்த வளர்ச்சி விகிதத்தில் ஏறக்குறைய அரைவாசியாகவே இருந்தது. மற்றும் துறைகளிடையே மொத்த விற்பனை - சில்லறை வியாபாரத்துறை பெறுமதி அடிப்படையில் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் ஏற்பட்ட அதிகரிப்பில் 18.4 சதவிகிதத்துக்கும் நிர்மாணத்துறை 5.0 சதவிகிதத்துக்கும், போக்குவரத்துத்துறை 8.4 சதவிகிதத்துக்கும் வங்கித் தொழில் - மெய் ஆதனத்துறை 4.1 சதவிகிதத்துக்கும் வகைப்படுத்தப்படாத துறை 7.5 சதவிகிதத்துக்கும் பொறுப்பாயிருந்தன. பொருளுற்பத்தித்துறை, விவசாயத் துறை, மொத்த விற்பனை - சில்லறை வியாபாரத்துறை ஆகியன கூட்டாக மொத்த உள்நாட்டு உற்பத்தியில் ஏற்பட்ட அதிகரிப்பில் மூன்றில் இரு பங்குக்கு மேற்பட்டதற்குப் பொறுப்பாயிருந்தன.

கடந்த காலத்தில் ஏற்பட்ட வளர்ச்சி விகிதங்களுடன் ஒப்பிடுகையில், ஆகக்கூடிய வளர்ச்சி விகிதத்தைப் பதிவு செய்த ஆண்டான 1978ம் ஆண்டுக்குப் பின்பு, 1986 ம் ஆண்டின் வளர்ச்சி விகிதமே மிகக் குறைவான விகிதமாயுள்ளது. 1978 ம் ஆண்டுக்குப் பின்னர், பொருளாதார வளர்ச்சி விகிதம் படிப்படியாக வீழ்ச்சியடைந்து வந்துள்ளது. 1986 ம் ஆண்டில் ஏற்பட்ட 4.3 சதவிகித வளர்ச்சி விகிதத்துடன், இந்த வீழ்ச்சியுறும்போக்கு இன்னேர் ஆண்டுக்கும் நீண்டுள்ளது. எனினும், 1986 ம் ஆண்டில் இந்த வளர்ச்சி விகிதம் சாதிக்கப்பட்ட சந்தர்ப்ப சூழ்நிலைகளின் அமைவில், இலங்கைப் பொருளாதாரம் குறிப்பிடத்தக்கவாறு நன்ருகச் செயற்பட்டுள்ளது. பயங்கரவாதம் தொடர்ந்து இருந்து வருவதும், (அ) வடக்கு, கிழக்கு மாகாணங்களில்

குறைவான உற்பத்தியும், குறைந்துள்ள சந்தைகளும் (ஆ) உள்நாட்டுத் தொழில் முயற்சியாளர்கள், வெளிநாட்டுத் தொழில் முயற்சியாளர்கள் ஆகிய இரு சாராரும் முதலீடு செய்வதற்குப் பிரதிகூலமான சூழ்நிலை (இ) உல்லாசப் பிரயாணிகளின் போக்குவரத்திலும் உல்லாசப் பிரயாணிகளிடமிருந்து கிடைக்கும் வருமானத்திலும் ஏற்பட்ட குறிப்பிடத்தக்க வீழ்ச்சி (ஈ) பாதுகாப்புச் செலவினங்களில் ஏற்பட்டுள்ள துரிதமான அதிகரிப்புகள் போன்ற பயங்கரவாதத்துடன் இணைந்த பாதகமான விளைவுக்ள்தான் பொருளாதார அபிவிருத்திக்குத் தற்போது முக்கிய தடைகள்ாக இருந்து வருகின்றன. தேயிலை போன்ற முக்கிய ஏற்றுமதிப் பண்டங்களுக்கு மிகக் குறைந்த சந்தைவிலைகளுடன் 1986ம் ஆண்டில் வெளிநாட்டுச் சந்தைகளும் கூடிய நிர்ப்பந்தங்களை உண்டாக்கின.

### வருமானமும் செலவும்

மொத்த உள்நாட்டு உற்பத்திக்கு ஒரு விகிதமாக, வருமானம் 1985ம் ஆண்டிலிருந்த 24 சதவிகிதத்திலிருந்து 1986ம் ஆண்டில் 23 சதவிகிதமாக வீழ்ச்சியுற்றது. ஆனால், 1981ம் ஆண்டிலிருந்து 1983ம் ஆண்டுவரையுள்ள காலத்துடன் ஒப்பிடுகையில், 1986ம் ஆண்டின் செயற்பாடு இன்னும் திருப்திகரமாகவே இருந்தது. மொத்தச் செலவுகளையும் மூலதனச் செலவுகளையும் பொறுத்தவரை, 1985ம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 1986ம் ஆண்டில் இந்த விகிதங்கள் குறைவாக இருந்தன. வரவு செலவுத்திட்டப் பற்றுக்குறையைக் குறைப்பதற்காக அரசாங்க செலவினங்களைக் கட்டுப்படுத்துவதற்குச் சில முயற்சிகள் செய்யப்பட்டனவென்பதை இது எடுத்துக்காட்டியது. 1986ம் வருடப் பற்றுக்குறை விகிதம் வரவு செலவுத்திட்டம் சம்பந்தமாக ஓர் அரும்பொட்டான ஒழுங்கு முறை அனுசரிக்கப்பட்டுள்ளதாகக் குறிப்பிடுகிறது. எனினும், மொத்தச் செலவுகள் சம்பந்தமான இறுதித் தொகை மத்திய வங்கி தற்போது அறிவித்த தற்காலத் தொகையிலிருந்து மாறுபடுமானால், 1986ம் வருட நிலை, 1985ம் வருடத்தில் ஏற்பட்ட அனுபவத்துடன் ஒப்பிடுகையில் அரசிறை மாறிகளில் ஒரு முழுமையான சீரழிவைக் காட்டும்.

### பணநிரம்பல்

நாணய மாறிகளில் ஏற்பட்ட நிகழ்வுகள் 1986ம் ஆண்டில் ஒரு குறிப்பிடத்தக்க அபிவிருத்தியைக் காட்டுகின்றன. குறுகிய பண நிரம்பலில் (எம். 1) ஏற்பட்ட அதிகரிப்பின் விகிதம் 13 சதவிகித அதிகரிப்புடன் மட்டும் மட்டுப்பட்டது. விரிவான பண நிரம்பல் காட்டியைப் பொறுத்தவரை, 1980ம் ஆண்டிலிருந்து 1986ம் ஆண்டுவரையுள்ள காலத்தில் பதிவுசெய்யப்பட்ட மிகக் குறைந்த விகிதமான 5 சதவிகித வளர்ச்சி விகிதத்துடன் நிலைமை இதைவிட மேலான்தாகத் தோற்றியது. இரு காரணிகள் சேர்ந்ததன் விளைவாக இவ்வீழ்ச்சி ஏற்பட்டது. (அ) வெளிநாட்டுச் சொத்துக்களில் ஏற்பட்ட வீழ்ச்சி (ஆ) வங்கி முறையிலிருந்து உள்நாட்டுக் கடன் வசதிக்கான கோரிக்கையில் ஏற்பட்ட குறைவு. இந்த இரு நிகழ்வுகளும் பண நிரம்பலின் மீதான நெருக்குதலைக் குறைக்க உதவிய அதே வேளை, பொருளாதாரத்தின் மற்றும் துறைகள் தொடர்பாக அவசிய நிகழ்வுகளுக்கு ஊக்கமளித்து வரவில்லை. வெளிநாட்டுச் சொத்துக்களில் ஏற்பட்ட வீழ்ச்சி, சென்மதி நிலுவைகளில் ஏற்பட்ட சீரழிவைக் குறிப்பிடுகிறது. அதேவேளை உள்நாட்டுக் கடன் வசதிகளுக்கான கோரிக்கையில் ஏற்பட்ட வீழ்ச்சி பொருளாதார வளர்ச்சியின் சற்றே மெதுவான கதியினுல் ஏற்பட்டிருக்கலாம்.

### பணவீக்கம்

1985ம் ஆண்டுடன் ஒப்பிடுகையில், கொழும்பு விலைக் குறியீட்டெண்ணின் அடிப்படையில் அளவிடப்பட்ட பணவீக்க விகிதம் அதிகரித்தது. ஆனால், 1986ம் ஆண்டிலிருந்த 8 சதவிகிதம் 1985ம் ஆண்டுக்கு முன்புள்ள சகாப்தத்தில் ஏற்பட்ட அனுபவத்துடன் ஒப்பிடுகையில், இன்னும் ஒரு குறிப்பிடத்தக்க அபிவிருத்தியாகவே இருந்தது. மொத்த அடிப்படையில் விலை அசைவுகளை அளவிடும் மொத்தத் தேசிய உற்பத்தியின் பணச்சுருக்கியும் 1985ம் ஆண்டில் ஏற்பட்ட அனுபவத்துடன் ஒப்பிடுகையில் 1986ம் ஆண்டில் அதிகரித்துவரும் பணவீக்கப் போக்கொன்றைப் பிடித்தது. எனினும், இரு செயல்முறைகளும் 1986ம் ஆண்டில் ஒப்பியல் ரீதியாக உயர் விலை அதிகரிப்புகள் ஏற்பட்டதைக் குறிப்பிடுகின்றன. இந்த அதிகரிப்புகள் இன்னும் சமாளிக்கத்தக்க வரம்புகளுக்குள்ளேயே இருந்தன. வட்டி விகிதங்களைக் கீழ் நோக்கி மாற்றியமைத்தல் போன்ற நடவடிக்கைகளை அரசாங்கம் 1986ம் ஆண்டில் தக்க சமயத்தில் எடுத்திராவிடில், கணிசமான பரிமாணங்களைக் கொண்ட வரவு செலவுத்திட்டப் பற்றுக்குறைகள் தொடர்ந்து இருந்து வந்தமை, வளர்ந்து வந்த பாதுகாப்புச் செலவினங்கள் ஆகியவற்றின் அமைவில், பணவீக்க அனுபவங்கள் இன்னும் பெரிய அளவில் ஏற்பட்டிருக்கும். கொழும்பு விலைக் குறியீட்டெண்ணின் சேர்க்கையில், உடைகள் ஆகக்கூடிய அதிகரிப்பான 15.5 சதவிகிதத்தைப் பதிவு செய்தன. அடுத்து, நானுவிதப் பொருள்களின் வகை 14.4 சதவிகிதத்தையும், உணவு 7.1 சதவிகிதத்தையும், எரிபொருள் 1.5 சதவிகிதத்தையும் பதிவு செய்தன.

### நாணய மாற்று விகிதங்கள்

1986ம் ஆண்டில் சகல முக்கிய நாணயங்களுக்கும் எதிராக இலங்கை ரூபாவின் மதிப்பு இறங்கியது. இந்திய ரூபா மட்டும் இதற்கு விதிவிலக்காயிருந்தது.

டொயிஷ் மார்க், ஜப்பானிய யென் ஆகியவை சம்பந்தமாக ஆகக் கூடிய நாணயமாற்று விகிதங்களும், அடுத்து பிரெஞ்சு பிராங்க், எஸ்.டி.ஆர். (விசேஷ எடுப்பு உரிமைகள்) ஆகியன சம்பந்தமாகவும் மிக உயர்வான நாணய மாற்று விகிதங்களும் பதிவாயின. இலங்கை ரூபா அமெரிக்க டொலருக்கெதிராக வருடாந்த சராசரி அடிப்படையில் 6.5 சதவிகிதமும், வருட ஆரம்பம் - முடிவு அடிப்படையில் 3.9 சதவிகிதமும் மதிப்பிறங்கியது. நாணயமாற்று விகிதத்தில் இதைவிட மிக அதிகமான மதிப்பிறக்கம் ஏற்படுவது, மிதமான பண வீக்கத்தாலும் ஒப்பீட்டளவில் அமெரிக்க டொலரின் பலவீனத்தினாலும் தடுக்கப்பட்டது; குறிப்பாக ஆண்டின் இரண்டாவது பாதியில் இலங்கையிலே நாணய மாற்று விகிதத்தை நிர்ணயிப்பதற்காகக் குறுக்கிடும் நாணயம் அமெரிக்க டொலர் தான்.

### வர்த்தக மாற்று வீதங்கள்

1985ம் ஆண்டுடன், குறிப்பாகத் தேயிலையின் சர்வதேச விலை முன்னெப்போதும் காணாத மட்டத்தை எட்டிய 1984ம் வருட அனுபவத்துடன் ஒப்பிடுகையில், 1986ம் ஆண்டிலே இலங்கையின் முக்கிய ஏற்றுமதிப் பண்டங்கள் தொடர்பான சர்வதேச விலை அசைவுகள் அதிக உற்சாகந் தருவனவாயிருக்கவில்லை. 1986ம் ஆண்டிலிருந்த விலைச் சுட்டெண்களின் அசைவில் ஒரு கடைத்தேற்றும் அம்சம் காணப்பட்டது. அதாவது, இறக்குமதி விலைகளும் வீழ்ச்சியுற்றதாகும். இந்த வீழ்ச்சி இறக்குமதிகள் மீதான செலவுகளைக் குறைக்க இலங்கைக்கு உதவியது.

1986ம் ஆண்டில் ரூபா அடிப்படையில் ஏற்றுமதிகளிலிருந்து கிடைத்த சம்பாத்தியங்கள், இறக்குமதிகள் சம்பந்தமான செலவுகள் ஆகிய இரண்டும் வீழ்ச்சியடைந்தன; ஏற்றுமதிகளிலிருந்து கிடைத்த வருமானம் 5.2 சதவிகிதமும், இறக்குமதிகள் பேரிலான செவுகள் 1 சதவிகிதமும் குறைந்தன. ரூபா மதிப்பிறக்கத்துக்கேற்பச் சரிக் கட்டப்பட்டபோது, ஏற்றுமதிகளின் பெறுமதி 10.5 சதவிகிதமும், இறக்குமதிகளின் செலவுகள் 6.5 சதவிகிதமும் குறைந்தன. சென்மதி நிலுவைகளில் ஏற்பட்ட நடப்புக் கணக்குப் பற்றுக்குறை ரூபா அடிப்படையில் 1985ம் ஆண்டிலிருந்த 1140.8 கோடி ரூபாவிலிருந்து 1986ம் ஆண்டில் 1146.1 கோடி ரூபாவுக்கு அதிகரித்தது; மொத்த உள்நாட்டு உற்பத்தியின் ஒரு விகிதமாக, அது 1985ம் ஆண்டிலிருந்த 7.7 சதவிகிதத்திலிருந்து 1986ம் ஆண்டில் 7 சதவிகிதத்துக்குக் குறைந்தது. மறுபக்கத்தில், சென்மதி நிலுவைகளில் ஏற்பட்ட கூட்டு மொத்த நிதிப்பற்றுக் குறை 1985ம் ஆண்டிலிருந்த 2,973 கோடி 90 இலட்சம் ரூபாவிலிருந்து 1986ம் ஆண்டில் 3,136 கோடி ரூபாவுக்கு அதிகரித்தது. இப் பற்றுக்குறையை நிரப்புவதற்கான பிரதான மூலங்கள் (அ) உத்தியோக பூர்வமான கொடைகள் (498 கோடி 80 இலட்சம் ரூபா) (ஆ) நெடுங் காலக் கடன்கள் (991 கோடி 50 இலட்சம் ரூபா) (இ) குறுங் காலக் கடன் வசதிகள் (801 கோடி 80 இலட்சம் ரூபா) என்பனவாகும். 1986ம் ஆண்டில் சென்மதி நிலுவைகளுக்கு நிதியளிப்புச் செய்வதற்கு மூலவளங்கள் உபயோகிக்கப்பட்டதனல் மொத்த ஒதுக்குகளின் பெறுமதி 1985ம் ஆண்டு முடிவிலிருந்த 1,836 கோடி 70 இலட்சம் ரூபாவிலிருந்து 1986ம் ஆண்டு முடிவில் 1,715 கோடி 20 இலட்சம் ரூபாவுக்குக் குறைந்தது.

### பொருளாதார வளர்ச்சியை தீர்மானித்த காரணிகள்

1986ம் ஆண்டில் பொருளாதார வளர்ச்சிக்கான செயற்பாடுகளும் பொருளாதாரக் காட்டிகளில் ஏற்பட்ட அபிவிருத்திகளும் நிச்சயமாக உற்சாக மூட்டுவனவாயிருந்த போதிலும், குறிப்பாகத் தற்போது நிலவிவரும் அரசியல், பொருளாதார சூழல் மிகவும் ஊறுபடத்தக்கதாயிருப்பதாலும், பொருளாதார வளர்ச்சி குன்றி வருவதாலும், வரும் வருடங்களில் பொருளாதார ஸ்திரத்தைப் பராமரிக்கும் வாய்ப்புகள் நிச்சயமற்றிருப்பதாலும், கொள்கையில் உடனடியாகக் கவனஞ் செலுத்துவதவசியமாகும். குறைந்த பொருளாதார வளர்ச்சி நேரடியாகக் குறைந்த உற்பத்தியாக அமைகின்றது. இது முறையே வருமானம் குறைவதற்கும் ஏற்றுமதிகளிலிருந்து சம்பாத்தியங்கள் குறைவதற்கும், அரசாங்க வருவாய் குறைவதற்கும், உள்நாட்டு முதலீடுகள் குறைவதற்கும் அடிகோலுகிறது. முயற்சிகள் மாற்றியமைக்கப்படாவிட்டால், இந்த நிகழ்வுப் போக்கு வருடந்தவறுது மீண்டும் மீண்டும் ஏற்பட்டு, இவ்வருடத்துடன் ஒப்பிடுகையில் அடுத்த வருடத்தின் வளர்ச்சியைக் குறைக்கலாம். அத்துடன், முழுமையான சமூக-பொருளாதாரத் தரங்களும் வீழ்ச்சியுறலாம்.

இங்கு கிளப்பப்படும் பிரச்சினை இதுதான் - இந்தக் கஷ்டமான சந்தர்ப்ப சூழ் நிலைகளில் கூட, பொருளாதாரச் செயற்பாடு அபிவிருத்தியடைய முடியுமா? இக்கேள்விக்கு நேரடியாகப் பதிலளிப்பது சுலபமல்ல; அதற்குப் பொருளாதாரத்தின் வெவ்வேறு அம்சங்களில் பெருமளவிலான பகுப்பாய்வு செய்யப்பட வேண்டியதவசியமாகும். பொருளாதாரச் செயற்பாட்டை அபிவிருத்தி செய்வதற்கான வாய்ப்பு அரசிறை நடவடிக்கைகளில் ஏற்படும் அனுகூலமான அபிவிருத்திகளிலும் சென்மதி நிலுவைகளிலும் தங்கியுள்ளது. ஏனென்றல், இவ்விரு துறைகளில் ஏற்படும் அபிவிருத்திகளே வளர்ச்சியையும் பொருளாதார ஸ்திரத்தையும் நிர்ணயிக்கும் பிரதான தீர்மான காரணிகளாக இருக்கும். இவ்விரு துறைகளிலும் ஏற்படும் அபிவிருத்திகள் முறையே உற்பத்தியின் ஆதாரத்

தையும், அரசிறையையும் சென்மதி நிலுவைகள் பிரிவையும் அபிவிருத்தி செய்வதைப் பெருமளவுக்குப் பொறுத்திருக்கும். எனவே, அபிவிருத்தியுற்ற உற்பத்திச் செயற்பாடே அபிவிருத்தியுற்ற வளர்ச்சிச் செயற்பாட்டையும் பொருளாதார ஸ்திரத்தையும் இறுதியில் நிர்ணயிக்கின்றது.

இந்த ஆராய்ச்சிக் கட்டுரையின் ஏனைய பகுதிகளில், கூடிய பொருளாதார வளர்ச்சிக்கான வாய்ப்புகள் ஆராயப்படுகின்றன. அதற்காக, சமீப கடந்த காலத்தில் விவசாயத் துறையிலும் பொருளுற்பத்தித் துறையிலும் காணப்பட்ட உற்பத்திப் போக்குகள் மீளாய்வு செய்யப்படுகின்றன. உற்பத்தியை அதிகரிக்கவும், பலவீனமான வருமானத் திரட்டும் அடித்தளத்தினாலும், பாரம்பரிய ஏற்றுமதித் துறையினாலும் திணிக்கப்பட்ட நிர்ப்பந்தங்களை அகற்றவும் அபிவிருத்தி உபாயங்களையும் பொருளாதாரக் கொள்கைகளையும் ஒன்றுசேர்ப்பதன் அவசியத்தைச் சுட்டிக்காட்டுவதற்காக, பொருளாதார அபிவிருத்தியில் அரசிறையினதும் சென்மதி நிலுவைகளினதும் பங்களிப்பு மீளாய்வு செய்யப்படுவதையடுத்து, இப்பரிசீலனை மேற்கொள்ளப்படும்.

### அரசிறை அபிவிருத்திகளின் பங்களிப்பு

முதலீடுகள் அதிகரித்த அளவில் திரட்டப்பட்டமையே, கடந்த பத்து வருடங்களில் நடைபெற்ற குறிப்பிடத்தக்க வளர்ச்சிச் செயற்பாட்டை நிர்ணயித்த ஒரு முக்கிய காரணியாக இருந்து வந்துள்ளது. 1977ம் ஆண்டில் பொருளாதாரத்துறை, கட்டுப்பாடுகள் நீக்கப்பட்டுத் தாராளமயமாக்கப்பட்டதற்குப்பின், 1978ம் ஆண்டுக்கும் 1986ம் ஆண்டுக்குமிடையே மொத்த உள்நாட்டு முதலீடுகள் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் சராசரியாக 24.0 சதவிகிதமாயிருந்தது. இதனுடன் ஒப்பிடுகையில், 1970ம் ஆண்டுக்கும் 1977ம் ஆண்டுக்குமிடையே இது 16.0 சதவிகிதமாகவே இருந்தது. 1978ம் ஆண்டுக்கும் 1986ம் ஆண்டுக்கும் இடைப்பட்ட காலத்தில் அரசாங்கத்துறையில் செய்யப்பட்ட முதலீடுகள் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 14.5 சதவிகிதத்துக்குப் பொறுப்பாயிருந்த அதே வேளை, உள்நாட்டு முதலீடுகளில் தனியார் துறையின் பங்கு மொத்த உள்நாட்டு உற்பத்தியில் சராசரியாக 9.5 சதவிகிதமாயிருந்தது. தேசிய, வெளிநாட்டுச் சேமிப்புகளின் அடிப்படையில் 1978ம் ஆண்டுக்குப் பின் உள்நாட்டு முதலீடுகள் பிரிக்கப்பட்டதிலிருந்து மொத்த உள்நாட்டு உற்பத்திக்கு தேசிய சேமிப்புகள் 14.3 சதவிகிதமும், வெளிநாட்டுச் சேமிப்புகள் 9.6 சதவிகிதமும் உதவின எனத் தெரிகிறது. 1970ம் ஆண்டுக்கும் 1977ம் ஆண்டுக்குமிடையே சம்பந்தப்பட்ட விகிதங்கள் முறையே 12.7 சதவிகிதமும், 3.3 சதவிகிதமுமாகும். சலுகையுடன் கூடிய வெளிநாட்டுக் கடன்கள், முற்றான கொடைகள் அடங்கிய அதிகரித்த வெளிநாட்டு உதவியின் காரணமாகவே 1978ம் ஆண்டுக்குப்பின்பு அதிக உள்நாட்டு முதலீடுகள் பெரும்பாலும் சாத்தியமாயிற்றென்பதை இவ்விரு காலங்களின் விகிதங்கள் எடுத்துக் காட்டுகின்றன. இரு காலங்களின் (1970ம் ஆண்டுக்கும் 1977ம் ஆண்டுக்குமிடையே) தேசிய சேமிப்பு விகிதங்களிலுள்ள வித்தியாசம் மிகச் சிறியது. இரு காலங்களிலும் தேசிய சேமிப்புகளின் பங்களிப்பு செயலளவில் ஒரே மாதிரியாகவே இருந்துள்ளதென்பதை இது எடுத்துக்காட்டுகிறது.

1978ம் ஆண்டுக்கும் 1986ம் ஆண்டுக்குமிடைப்பட்ட காலத்தில் அரசாங்க முதலீடுகளின் நிதியளிப்பிலிருந்து மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 14.3 சதவிகிதம் தேசிய சேமிப்புகளிலிருந்தும், 9.6 சதவிகிதம் வெளிநாட்டுச் சேமிப்புகளிலிருந்தும் வந்துள்ளனவென்று தெரிகிறது. தேசிய சேமிப்புகளில், மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 11.7 சதவிகிதம் தனியார் துறையிலிருந்து உண்டாக்கப்பட்டுள்ளது. 1978ம் ஆண்டுக்குப் பின் அரசாங்கத்துறையில் நிகழ்ந்த சேமிப்புகளின் கனஅளவு மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 2.7 சதவிகிதமாகும். ஆனால், வரவு செலவுத்திட்ட நடவடிக்கைகளின் விளைவாகச் சேர்ந்த தேசிய சேமிப்புகளின் தொகை மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 1.7 சதவிகிதத்துக்கு மட்டுமே சமமாயிருந்தது. எனவே, தனியார் துறை உதவிய தொகைகள் நீங்கலாக, அரசாங்கத் துறை முதலீடுகளில் பெரும்பகுதி வரவு செலவுத் திட்டத்துக்கு வெளியேயுள்ள வட்டாரங்களிலிருந்தே வந்துள்ளது எனச் சுருக்கிக் கூறலாம்.

1981ம் ஆண்டுக்கும் 1986ம் ஆண்டுக்குமிடையேயுள்ள ஆறு வருட காலத்தில், அரசாங்கத் துறையில் செலவிடப்பட்ட மொத்தத் தொகை (நடப்புச் செலவும் மூலதனச் செலவுமாகிய இரண்டும்) 30,000 கோடி ரூபா. இதில் உள்நாட்டு வருமானம் ஏறக்குறைய 17,800 கோடி ரூபாவுக்குப் பொறுப்பாயிருந்தது. 12,200 கோடி ரூபா வரையான கூட்டு மொத்தப் பற்றுக்குறையில் ஏறக்குறைய 5 சதவிகிதத்துக்கு வெளிநாட்டுக் கடன்களாலும் கொடைகளாலும் நிதியளிப்புச் செய்யப்பட்டுள்ளது. மீதியுள்ள தொகைக்கு வங்கியல்லா வட்டாரங்களாலும் (36 சதவிகிதம்), வங்கி முறையாலும் (12 சதவிகிதம்) நிதியளிப்புச் செய்யப்பட்டது. 1978ம் ஆண்டுக்குப் பின்பு பற்றுக்குறைக்கு நிதியளிப்புச் செய்வதில் வெளிநாட்டு உதவி வகிக்கும் மிக முக்கிய இடத்தை இந்தப் பகுப்பாய்வு தெளிவாக எடுத்துக் காட்டுகின்றது.

1987ம் ஆண்டிலிருந்து 1991ம் ஆண்டுவரையுள்ள காலத்துக்கான ஐந்து வருட திட்டத்

தின்படி, அபிவிருத்திக் கருத்திட்டங்கள் மீதும் திட்டங்கள் மீதும் முதலீடு செய்யப்படுமென எதிர்பார்க்கப்படும் தொகை 15,100 கோடி ரூபாவாகும். கடந்த ஆறு வருடங்களின் போது, உண்மையில் அபிவிருத்திக்காகச் செலவிடப்பட்ட மொத்தத் தொகை 12,000 கோடி ரூபா. இதனுடன் ஒப்பிடுகையில், 1981ம் ஆண்டிலிருந்து 1986ம் ஆண்டு வரையுள்ள காலத்தில் சம்பந்தப்பட்ட திட்டங்களின் வருடாந்த மொத்தத் தொகைகளிலிருந்து மொத்தமாகச் சேர்ந்த தொகை 9,400 கோடி ரூபாவாகும். 1981-1986 காலத்துக்கான அபிவிருத்திச் செலவு தொகை மூலதன வரவு செலவுத் திட்டத் தொகையிலிருந்து மாறுபட்டதென்பது கவனிக்கப்படவேண்டும். ஏனென்றால், மூலதன வரவு செலவுத் திட்டத் தொகையில் அரசாங்கக் கூட்டுத்தாபனங்களுக்கு மாற்றப்பட்ட மூலதனங்களும் அடங்கியுள்ளன. 1981-86 காலத்தில், மூலதன வரவு செலவுத்திட்டத்தின் 1500 கோடி ரூபா மட்டுமே வரவு செலவுத்திட்டச் சேமிப்புகளிலிருந்து பெறப்பட்டுள்ளது. அதாவது, நடப்புச் செலவுகளுக்கு மேலுள்ள உபரி வருமானமாகும். மூலதனச் செலவுகளில் பெரும் பகுதிக்கு வருமானம் பெறு வட்டாரங்களிலிருந்து நிதியளிப்புச் செய்யப்பட்டுள்ளது. மேலே எடுத்துக் காட்டப்பட்டவாறு, இதில் வெளிநாட்டு நிதியளிப்பின் பங்காற்றல் மிக முக்கிய இடம் பெற்றுள்ளது.

அடுத்த ஐந்து வருட அரசாங்க முதலீட்டுத் திட்டத்தின் ஒரு முக்கிய அக்கறை என்னவெனில், ஐந்து வருட அபிவிருத்தி வரவு செலவுத் திட்டத்துக்கு நிதியளிப்புச் செய்யப் போதிய நிதிகளைத் திரட்ட அரசாங்கத்துக்குள்ள ஆற்றலாகும். நடுத்தர காலத்திலும் நெடுங் காலத்திலும், வெளிநாட்டு உதவி சமீப கடந்த காலத்தில் போல அதே பரிமாணத்திலேனும் சுலபமாகக் கிடைப்பது சாத்தியமல்ல. எனவே, வரும் வருடங்களில் அபிவிருத்திக்குரிய நிதிகளை பெரும்பாலும் உள்நாட்டு வட்டாரங்களிலிருந்தே பெற வேண்டியிருக்கும். தற்போதைய எதிர்பார்ப்புகளின்படி, 1987-1991 காலத்தில் வெளிநாட்டு உதவியாக 4,400 கோடி ரூபாவை அல்லது மொத்த ஐந்து வருட முதலீட்டு வரவு செலவுத்திட்டத்தின் 42 சதவிகிதத்தைப் பெறலாமென எதிர்பார்க்கப்படுகிறது. இதனுடன் ஒப்பிடுகையில், இது கடந்த ஆறு வருடங்களில் 52 சதவிகிதமாயிருந்தது. அடுத்த ஐந்து வருட காலத்தில் முதலீடு செய்யப்படும் தொகையில் பெரும் பகுதியை அரசாங்கம் அதன் சொந்த வருமான மூலங்களிலிருந்து எதிர்பார்க்கின்றது. பரீட்சார்த்த மதிப்பீடுகளின்படி, ஏறக்குறைய 8,800 கோடி ரூபா அல்லது முதலீட்டு வரவு செலவுத் திட்டத்தின் 58 சதவிகிதம் உள்நாட்டு வருமானத்திலிருந்து பெறப்படும். 1981-86 காலத்தில் இந்தப்பங்கு ஏறக்குறைய 12 சதவிகிதமாக இருந்து வந்தது.

அரசாங்க முதலீட்டுத் திட்டம் உள்நாட்டு வருமான மூலங்களிலிருந்து 8,800 கோடி ரூபா வருமென்று எதிர்பார்ப்பதால், (இதனுடன் ஒப்பிடுகையில் 1981-86 காலத்தில் 1,500 கோடி ரூபா மட்டுமே எதிர்பார்க்கப்பட்டது) திட்டக் காலத்தில் வருமானத்தைக் கணிசமான அளவு அதிகரிப்பது மிக முக்கியமெனத் தோன்றுகிறது. எனினும், வருமானத்தை எந்தக் கணிசமான அளவுக்கும் அதிகரிக்க அரசாங்கத்துக்குத் திறமையுண்டு என்பதற்கு ஆதரவாக, கடந்தகாலப் போக்குகள் சான்றுகளை வழங்குவதாயில்லை. உதாரணமாக, 1986ம் ஆண்டில் உள்நாட்டுவருமானம் 1985ம் வருட வருமானத்துக்குமேல் 7.6 சதவிகிதம் மட்டுமே அரும் பொட்டாக அதிகரித்தது. இந்த அதிகரிப்பு 1986ம் ஆண்டிலே சராசரி விலை அதிகரிப்பான 8 சதவிகிதத்தைவிடக் கூட குறைவானதாகும். அரசாங்க வருமானத்தில் கணிசமான அதிகரிப்புகள் 1983ம் ஆண்டிலும் 1984ம் ஆண்டிலும் மட்டுமே ஏற்பட்டன. 1983ம் ஆண்டில் அரசாங்க வருமானம் 1982ம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 42 சதவிகிதம் அதிகரித்தது. 1984ம் ஆண்டில் மேலும் 50 சதவிகிதம் அதிகரித்தது. இவ்விரு வருடங்களிலும் வருமானம் அதிகரித்ததற்கு மொத்த வியாபாரம், விற்பனைகள் மீது வரி விகிதங்கள் அதிகரிக்கப்பட்டது, இறக்குமதித் தீர்வைகள் கூட்டப்பட்டதுமே மூல காரணமாகும். 1983ம் ஆண்டிலும் 1984ம் ஆண்டிலும் வரி விகிதங்கள் உயர்த்தப்பட்டதற்கு 10 கோடி எஸ். டி. ஆர். (விசேஷ எடுப்பு உரிமைகள்) பெறுவதற்காகச் சர்வதேச நாணய நிதியத்துடன் 1983 நவம்பரில் செய்யப்பட்ட ஒப்பந்தம் ஒரு முக்கிய காரணியாகும்.

எனவே, அரசாங்கத்துறை முதலீட்டுத் திட்டத்தைப் பயனுறுதியுள்ள முறையில் அரசாங்கத்தினுல் அமுல் செய்ய முடியுமாவென்பது, உள்நாட்டு மூலங்களிலிருந்து போதிய வருமானத்தைத் திரட்ட அரசாங்கத்துக்குள்ள ஆற்றலையே பெருமளவுக்குச் சார்ந்திருக்கிறது. வெளிநாட்டு உதவியின் பங்களிப்பு படிப்படியாகக் குறைந்து விடுமென்று எதிர்பார்க்கப்படும் அதேவேளை, வங்கியல்லாத உள்நாட்டு வட்டாரங்கள் சம்பந்தமான நிலையும் நிச்சயமற்றதாகவே இருந்து வருகிறது. நிதி-திட்டமிடல் அமைச்சர் கடந்த வருடம் வரவு செலவுத்திட்டப் பிரசங்கத்தின்போது குறிப்பிட்டது போல, வரவு செலவுத் திட்டப் பற்றுக்குறைகள் அதிகரிக்கும்போது அல்லது வெளிநாட்டு உதவி கிடைக்கும் வாய்ப்புகள் குறையும்போது, குறிப்பாக ஆதரவுக்கான ஒரு மேலதிக மூலமாக, சேமலாப நிதியம், நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் சேமிப்பு ஸ்தாபனங்கள் போன்ற வங்கியல்லாத வட்டாரங்களிலிருந்து

## அட்டவணை 1

### தெரிவு செய்யப்பட்ட பொருளாதார குறிகாட்டிகள் (1980–1986)

| | 1980 | 1981 | 1982 | 1983 | 1984 | 1985 | 1986 |
|---|---|---|---|---|---|---|---|
| வ. செ. திட்டம் (மொ. உ. உ. யின்%) | | | | | | | |
| (அ) வருமானம் | 23 | 21 | 18 | 21 | 25 | 24 | 23 |
| (ஆ) செலவினம் | 49 | 39 | 38 | 39 | 35 | 40 | 38 |
| (இ) மூலதனம் | 22 | 17 | 19 | 18 | 14 | 19 | 18 |
| பண நிரம்பல் | | | | | | | |
| (அ) எம் 1 (அதிகரிப்பு%) | 23 | 6 | 17 | 25 | 14 | 12 | 13 |
| (ஆ) எம் 2 (அதிகரிப்பு%) | 32 | 23 | 25 | 22 | 17 | 11 | 5 |
| பணவீக்கம் | | | | | | | |
| (அ) நு. வி. சு. (அதிகரிப்பு%) | 26 | 18 | 11 | 14 | 17 | 1.4 | 8.0 |
| (ஆ) மொ. உ. உ. சுருக்கி (அதிகரிப்பு%) | 18 | 21 | 10 | 15 | 17 | 1.0 | 5.8 |
| செலாவணி வீதங்கள் | | | | | | | |
| (அ) இல. ரு. டொலர் வீதம் | 16.5 | 19.3 | 20.8 | 23.5 | 25.4 | 26.2 | 28.04 |
| (ஆ) தேய்மானம் விகிதம்(%) | 5.6 | 16.6 | 7.5 | 11.5 | 7.5 | 3.1 | 6.5 |
| வர்த்தக நியதி (1981 - 100) | | | | | | | |
| (அ) கூட்டுமொத்தச் சுட்டெண் | 102 | 100 | 92 | 113 | 134 | 108 | 102 |
| (ஆ) ஏற்றுமதிச் சுட்டெண் | 92 | 100 | 98 | 125 | 160 | 142 | 126 |
| (இ) இறக்குமதிச் சுட்டெண் | 90 | 100 | 107 | 110 | 119 | 132 | 124 |
| வெளிநாட்டு வர்த்தகம் (ரூ. பத்து லட்சம்) | | | | | | | |
| (அ) ஏற்றுமதிகள் | 17603 | 20507 | 21098 | 25038 | 37198 | 35728 | 33881 |
| (ஆ) இறக்குமதிகள் | 33915 | 36123 | 41501 | 45206 | 49048 | 55529 | 54898 |
| (இ) ந. கணக்கு நிலுவை | -10912 | -8498 | -11844 | -11122 | -1406 | -11408 | -11461 |

மூலம்; இலங்கை மத்திய வங்கி

வரவு செலவுத் திட்டத்துக்கான ஆதரவு கிடைப்பது மிகவும் வரையறுக்கப்பட்டுள்ளது.

வருமான நிலை உற்சாக மூட்டுவதாய் இல்லாதிருக்கும் அதேவேளை, வரவு செலவுத் திட்டச் செலவுகளில் அதிகரித்த பங்கொன்றைப் பாதுகாப்புச் செலவினங்கள் தொடர்ந்து கோரி வருமானல், நிலைமை மேலும் மோசமடைந்து விடலாம். 1985ம் ஆண்டிலிருந்து பாதுகாப்புச் செலவுகளுக்கான ஒதுக்கீடு தொடர்ந்து அசாதாரண அளவுக்கு அதிகமாயிருந்து வருகிறது. பாதுகாப்பு வரவு செலவுத்திட்டத்தின் மதிப்பு 600 கோடி ரூபாவாகும். இது 1986ம் ஆண்டில் 900 கோடி ரூபாவுக்கு உயர்ந்துள்ளது. 1987ம் ஆண்டில் பாதுகாப்புச் செலவுகளுக்கான ஒதுக்கீடு 1,500 கோடி ரூபாவுக்கு அதிகரிக்குமென எதிர்பார்க்கப்படுகிறது. 1988ம் ஆண்டில் இது 1,805 கோடி ரூபாவுக்கு உயருமென மதிப்பிடப்படுகிறது. பாதுகாப்பு நடவடிக்கைகள் மீது இத்தகைய உயர்ந்த செலவினங்களைச் சமாளிப்பதாயின், அரசாங்கம் ஒன்றில் வருமானத்தை அதிகரிக்க வேண்டும்; அல்லது அபிவிருத்தி நடவடிக்கைகள் மீதான செலவைக் குறைக்க வேண்டும். துரதிர்ஷ்டவசமாக, இவ் விரு வழிகளில் ஒன்றைத் தெரிவு செய்வது மிகக் கடினமான காரியம்.

### பாதுகாப்புச் செலவுகள்

வருமானம் சம்பந்தமான ஒரு விகிதம் என்ற வகையில் பாதுகாப்புச் செலவுகள் 1985ம் ஆண்டிலிருந்த 15 சதவிகிதத்திலிருந்து 1986ம் ஆண்டில் 25 சதவிகிதத்துக்கு அதிகரித்துள்ளது. பாதுகாப்புச் செலவுகளின் துரிதமான அதிகரிப்புகள் வருமானத்தின் மீது ஏற்படுத்தும் பிரமாண்டமான நெருக்குதலை இது எடுத்துக்காட்டுகிறது. எனினும், மொத்த உள்நாட்டு உற்பத்தி சம்பந்தமான ஒரு விகிதம் என்ற வகையில், பாதுகாப்புச் செலவு சுமார் 10 சதவிகிதமாகவே இன்னும் இருந்து வருகிறது. இது தென்னுசியப் பிரதேசத்திலுள்ள பாகிஸ்தான், இந்தியா, தாய்லாந்து, சிங்கப்பூர் போன்ற மற்றும் பெரும்பாலான நாடுகளுடன் ஒப்பிடுகையில் மிதமான விகிதம்தான். இந்நாடுகளில் இவ்விகிதம் ஏறக்குறைய 20 சதவிகிதமாக இருந்து வருகிறது. இரு விகிதங்களின் (வருமானத்தில் பாதுகாப்புச் செலவின் விகிதம், மொத்த உள்நாட்டு உற்பத்தியில் பாதுகாப்புச் செலவின் விகிதம்) ஒப்பீடு

களிலிருந்து வெளிப்படும் நிலை வரத்தைக் கவனிக்கும்போது, பொருளாதாரத்தின் மீது தற்போது பிரயோகிக்கப்பட்டுவரும் வரவு செலவுத்திட்டம் தொடர்பான நெருக்குதலுக்கு, அதிகரித்துவரும் பாதுகாப்புச் செலவுகள் முற்றிலும் காரணமல்ல வென்று தெரிகிறது. 1983ம் ஆண்டையும் 1984ம் ஆண்டையும் தவிர்த்து, வருமானத்தில் ஏற்பட்ட எல்லை அதிகரிப்புகளும் சமமுக்கியத்துவமுள்ள பங்காற்றியுள்ளன. வருமானத்தில் பாதுகாப்புச் செலவுகள் வகிக்கும் விகிதம் அவ்வளவு பெரிதாக இருக்காது, வருமானத்தையும் அதற்கேற்ப அதிகரிக்க முடியுமானால்.

சென்மதி நிலுவைகள்

தாராளமயமாக்கப்பட்ட பொருளாதாரக் கொள்கைகளை நீண்ட காலத்துக்கு உறுதியாக வைத்திருப்பதாயின், இலங்கைக்கு ஓர் ஆரோக்கியமான சென்மதி நிலுவைகள் சம்பந்தமான ஆதரவு தேவையாகும். குறிப்பாக வெளிநாட்டு வர்த்தகக் கட்டுப்பாடுகளும் நாணய மாற்றுக் கட்டுப்பாடுகளும் நீக்கப்பட்டதற்குப் பின்பு, இதுவரை இந்த ஆதரவு கிடைக்கவில்லை. 1984ம் ஆண்டிலும் ஓரளவுக்கு 1985ம் ஆண்டிலும் சென்மதி நிலுவைகள் தொடர்பாக ஓர் அனுகூலமான திருப்பம் ஏற்பட்டதென்பது ஒரு புறமிருக்க, மற்றும் பெரும்பாலான வருடங்களில் பலமில்லாத சென்மதி நிலுவைகள் நிலைமையே தொடர்ந்து இருந்து வந்தது. சென்மதி நிலுவைகள் சம்பந்தமான கஷ்டங்கள் தொடர்ந்து இருந்து வருவதற்குப் பல காரணிகள் உண்டு. அவற்றுள் சில வருமாறு: (அ) பண்டங்களுக்கான கோரிக்கையும் விலைகளும் ஏற்றத் தாழ்வாயுள்ள சர்வதேச சந்தையிலுள்ள காரணிகள்; (ஆ) ஏற்றுமதிச் சம்பாத்தியங்களுக்குரிய பிரதான மூலங்களாக தேயிலை, இறப்பர், தேங்காய் போன்ற பாரம்பரிய ஏற்றுமதிகளைச் சார்ந்திருக்கும் நிலை; (இ) வர்த்தகக் கட்டுப்பாடுகள் நீக்கப்பட்டமையும் வெளிநாட்டு நாணயமாற்று சம்பந்தமான கொடுக்கல் வாங்கல்கள் தாராளமய மாக்கப்பட்டமையும்; (ஈ) விரிவாக்க, நாணய, அரசிறைக் கொள்கைகள் அதிக இறக்குமதிகள் மீது ஏற்படுத்தியுள்ள விளைவுகள் மேலும், வர்த்தகப் பங்காளிகள் தொடர்பாக உள்நாட்டில் ஏற்பட்டுள்ள உயர் பணவீக்கம், 1981ம் ஆண்டுக்கும் 1984ம் ஆண்டுக்கும் இடைப்பட்ட காலத்தில் வர்த்தகக் கடன்களை வாங்கியதனல் ஏற்பட்ட அதிக செலவுகள், 1985ம் ஆண்டுக்குப் பின் வெளிநாட்டுப் பண அனுப்பீடுகளில் ஏற்பட்டுள்ள தேக்க நிலை, 1983ம் ஆண்டிலிருந்து உல்லாசப் பயணத்துறையின் வருமானக் குறைவு - இவையெல்லாம் காலத்துக்குக் காலம் சென்மதி நிலுவையில் ஏற்பட்ட சீரழிவை மேலும் மோசமாக்கிய மற்றும் காரணிகள்.

சென்மதி நிலுவைகளின் அடிப்படையில் இலங்கைக்கு மிகச் சாதகமான வருடம். 1978ம் வருடத்துக்குப் பிறகேனும், இதுவரை 1984ம் வருடமாகவே இருந்து வந்துள்ளது. இந்த அபிவிருத்தி பிரதானமாகத் தேயிலை ஏற்றுமதிகளிலிருந்து முன்னெப்போதுமில்லாதவாறு கிடைத்த சம்பாத்தியங்களின் பயனுகவே ஏற்பட்டது. 1985ம் வருட மத்தியில், உலக சந்தையில் தேயிலை விலைகள் வீழ்ச்சியடைந்ததன் விளைவாக ஏற்றுமதிச் சம்பாத்தியங்கள் குறைந்து வரும் போக்கு காணப்பட்டது. அத்துடன் சேர்ந்து, சென்மதி நிலுவைகள் மீதான நெருக்குதலும் அதிகரித்தது. காலத்துக்காலம் விலை மீட்சிகள் அவதானிக்கப்பட்ட போதிலும், அவை குறுகிய காலத்துக்கு மட்டுமே நிலவின. எனவே, சென்மதி நிலுவைகளில் ஏற்படும் சாதகமான அல்லது பாதகமான நிகழ்வுகள் இன்னும் பெருமளவுக்குச் சர்வதேச சந்தையில் தேயிலையின் விலை அசைவுகளாலும் அதன் வெளிநாட்டுக் கோரிக்கையாலும் உள்நாட்டு உற்பத்தியாலுமே நிர்ணயிக்கப்படுகின்றன. 1985ம் ஆண்டுடன் ஒப்பிடுகையில், 1986ம் ஆண்டில் தேயிலைச் சம்பாத்தியங்களில் 10 கோடி 60 இலட்சம் டொலர்கள் குறைந்தன, 1984ம் ஆண்டுடன் ஒப்பிடுகையில், 28 கோடி 40 இலட்சம் டொலர்கள் குறைந்தன. 1984ம் வருடத்தில் நிலவிய சர்வதேச விலைகள் கடந்த இரு வருடங்களில் உறுதியாக நின்றிருந்தால், அந்த விலை அனுகூலம் சுமார் 40 கோடி டொலர் வருமானத்தைக் கொண்டுவந்திருக்கும். அது சென்மதி நிலுவைகள் மீது இலங்கை மீண்டும் அனுபவிக்கத் தொடங்கிய நெருக்குதலை நிச்சயமாகக் குறைத்திருக்குமென்பது நிச்சயம்

பிரதம விளைபொருள்களை ஏற்றுமதி செய்யும் வளர்முக நாடுகளின் ஏற்றுமதிகளில் கடும் விலை ஏற்றத்தாழ்வுகள் இடம் பெறும் அனுபவம் சர்வ சாதாரணமாக ஏற்பட்டுவந்துள்ளது. இந்த அனுபவம் வருங்காலத்தில் நிச்சயமாக மீண்டும் ஏற்படலாம். ஏனென்றல், கோரிக்கையையும் வழங்கலையும் பொறுத்த நிலைமைகள் நிலையானவையல்ல. மேலும், மற்றும் பல வளர்முக நாடுகள் தங்களுடைய ஏற்றுமதிகளைப் பன்முகப்படுத்தும் திட்டங்களில் தேயிலை (இலங்கைக்குப் பாரம்பரியப் பயிர்) போன்ற பயிர்களையும் சேர்க்கத் தொடங்குகின்றன. பாரம்பரியமற்ற வெளிநாட்டுச் சந்தைக்குள் இலங்கை ஒரு சில முக்கியமான உட்பிரவேசங்களை நிகழ்த்தியுள்ளபோதிலும், இதில் முன்னேற்றம் அரும்பொட்டாகவே இருந்து வந்துள்ளது. நீண்ட காலக் கண்ணேட்டங்கூட, ஏற்றுமதி வருமானத்தைக் கிரமமாகக் கொண்டுவரக்கூடிய பல்வேறு உற்பத்திப் பொருள்களையும் சேவைகளையும் கொண்ட ஏற்றுமதிச் சேர்க்கையைக் காட்டுவதாயில்லை. விவசாய ஏற்றுமதிகள் நீங்கலாக வெளி

அட்டவணை 2

வரவு செலவுத்திட்ட நடவடிக்கைகள் (1981-86)

| வருமானம், செலவு நிதிப் படுத்தல் (ரூ. பத்து லட்சம்) | 1981 | 1982 | 1983 | 1984 | 1985 | 1986 | மொத்தம் 1981-86 |
|---|---|---|---|---|---|---|---|
| (அ) வருமானம் | 16,228 | 17,809 | 25,210 | 37,731 | 39,010 | 41,955 | 177,943 |
| (ஆ) நடைமுறைச் செலவு | 17,721 | 19,231 | 25,083 | 31,842 | 34,156 | 34,602 | 162,635 |
| (இ) மூலதனச் செலவு | 13,373 | 18,669 | 23,131 | 21,760 | 30,529 | 32,949 | 140,401 |
| (ஈ) மிகை வருமானம் | 1,493 | 1,422 | 127 | 5,889 | 4,854 | 7,353 | 15,308 |
| (உ) வ.செ.திட்ட பற்றுக்குறை | 14,866 | 20,091 | 21,606 | 15,861 | 25,676 | 25,596 | 123,696 |
| நிதிப்படுத்தப்பட்டது: | | | | | | | |
| (அ) வெளிநாட்டுக் கொடைகள் கடன்கள் | 8,208 | 8,794 | 10,950 | 11,251 | 12,205 | 13,575 | 64,983 |
| (ஆ) உள்நாட்டுக் கடன் | | | | | | | |
| (i) வங்கியல்லாதன | 2,779 | 7,697 | 10,182 | 6,589 | 8,520 | 8,963 | 44,730 |
| (ii) வங்கி முறை | 3,917 | 3,915 | 1,168 | -2,644 | 7,451 | 2,299 | 16,106 |
| (iii) ஏனையன | -38 | -315 | -694 | 666 | -2,501 | 760 | 2,123 |
| மொ. உ. உ. யின் பங்காக | | | | | | | |
| (அ) வருமானம் | 20.5 | 19.4 | 22.6 | 24.5 | 24.0 | 23.4 | 22.4 |
| (ஆ) நடைமுறைச் செலவு | 22.3 | 21.0 | 22.5 | 20.7 | 21.0 | 19.3 | 21.1 |
| (இ) மூலதனச் செலவு | 16.9 | 20.4 | 20.8 | 14.1 | 18.8 | 18.4 | 18.2 |
| (ஈ) வ.செ.திட்டப்பற்றுக்குறை | 18.7 | 21.9 | 19.4 | 10.3 | 15.8 | 14.3 | 16.7 |
| ஏனையன | | | | | | | |
| (அ) வ. செ. திட்டப் பற்றுக்குறை | 92 | 113 | 86 | 42 | 66 | 79 | 80 |
| (ஆ) மூலதனச் செலவில் வெளிநாட்டு உதவியின் பங்கு | 61 | 47 | 47 | 52 | 40 | 41 | 48 |

மூலம்; இலங்கை மத்திய வங்கி

நாட்டு நாணயங்களைச் சம்பாதிக்க மற்றும் மூன்று முக்கிய மூலங்கள் மட்டுமே உள்ளன. அவை கைத்தொழில் ஏற்றுமதிகள், உல்லாசப் பயணிகள் மூலமான வருவாய், தனியார் பண அனுப்பீடுகள் ஆகியனவாகும். ஆனல், வரும் வருடங்களில் அவற்றின் வளர்ச்சி பல்வேறு காரணிகளால் கட்டுப்படுத்தப் பட்டுள்ளது. கைத்தொழில் ஏற்றுமதிகளின் விஸ்தரிப்பாற்றல், இத்தகைய உற்பத்திப் பொருள்களுக்கான குறிப்பாகப் பெற்ரோலியத்துக்கான கோரிக்கையின் தன்மையாலும், உடுதுணி ஏற்றுமதிகளின் விஷயத்தில் ''கோட்டா'' முறைகள் நிலவுவதாலும் வரையறுக்கப்பட்டுள்ளது. சுற்றுலாப் பயணிகள் தொடர்பான வியாபாரத்தின் மீட்சி இதுவரை சாத்தியமாகாததுடன் தொடர்ந்தும் நிச்சயமற்றதாகவே இருந்து வருகிறது. அதேவேளை, தனியார் பண அனுப்பீடுகளிலிருந்து வெளிநாடடு நாணயங்களைச் சம்பர்திக்கும் விஷயத்தைப் பொறுத்தவரை, அதில் நிலவும் தேக்க நிலை தெளிவாகத் தெரிகிறது.

வெளிநாட்டு நாணயச் சம்பாத்தியங்களால் உண்டாக்கப்படும் உட்கிரகிப்புச் சக்தி தொடர்பாக இறக்குமதிச் செலவுப் பட்டியல் கவனிக்கத்தக்கதாகும். எனினும், கடந்த பத்து வருடங்களில், இறக்குமதிகள்மீது அளவைப் பொறுத்த கட்டுப்பாடுகளோ அல்லது வெளிநாட்டு நாணய மாற்றைப் பங்கிடுவதன் வாயிலாக இறக்குமதிகள்மீது கட்டுப்பாடுகளோ விதிக்காமல், தாராளமாக்கிய வர்த்தகக் கொள்கையைத் தொடர்ந்து கடைப்பிடித்து வர இலங்கையால் முடிந்தது. வெளிநாட்டு உதவி இடையருது பாய்ந்ததே இதற்குப் பெருமளவு காரணமாகும். உதாரணமாக, 1984ம் ஆண்டில் திட்ட உதவி (39 கோடி 60 இலட்சம் டொலர்கள்) இறக்குமதிகள் மீதான செலவுகளில் 13 சதவிகிதத்துக்குப் பொறுப்பாயிருந்தது; 1985ம் ஆண்டில் 13.5 சதவிகிதத்துக்கும் (40 கோடி 40 இலட்சம் டொலர்கள்), 1986ம் ஆண்டில் 14.6 சதவிகிதத்துக்கும் (45 கோடி 20 இலட்சம் டொலர்கள்) பொறுப்பாயிருந்தது. வெளிநாட்டுத் திட்ட உதவி குறையுமானல், இறக்குமதிகள் தவிர்க்க முடியாதவாறு பாதிக்கப்படும். அதிக ஏற்றுமதிச் சம்பாத்தியங்களுக்கான வாய்ப்புக்கள் ஆகக் குறைந்துள்ளதாலும், வெளிநாட்டுப் படுகடன் பிரச்சினைகள் வளர்ந்து வருவதாலும், வர்த்தக விகிதங்களில் சர்வதேச பணச் சந்தையில் கடன் பெறுவதற்குப் பார

தூரமான வரையறைகள் உண்டு. அதே சமயத்தில், இறக்குமதிச் செலவுப் பட்டியலைப் பெருமளவு குறைப்பது சாத்தியமல்லவென்பது தெளிவு. ஏனென்றால், இறக்குமதிகளில் பெரும்பங்கு அத்தியாவசிய உள்ளிடுகைகளையும், மூலப் பொருள்களையும், மூலதனச் சரக்குகளையும் கொண்டதாகும். எனவே, சென்மதி நிலுவைப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்குரிய ஒரேயொரு காரிய சாத்தியமான பரிகாரம் புதிதாகப் பாரம்பரியமற்ற ஏற்றுமதிகளை விரிவாக்குவதிலும் ஊக்குவித்துப் பெருக்குவதிலுந்தான் தங்கியுள்ளது.

குறிப்பாக ஏற்றுமதிச் சம்பாத்தியங்களுக்கும் இறக்குமதிச் செலவுகளுக்குமிடையேயுள்ள இடைவெளி மிகத் தெளிவாகத் தெரியும்போது, பிரச்சினைக்கான பரிகாரத்தைக் கண்டுபிடிப்பது கடினமல்ல. அதேவேளையில் தகுந்த ஏற்றுமதி விஸ்தரிப்பு உபாயங்களை நடைமுறைப் படுத்துவது மிகக் கடினம்; அதிகரித்துவரும் சிக்கல்களை எதிர்நோக்க வேண்டியிருக்கலாம். ஏனென்றால், ஏற்றுமதிப் பெருக்க உபாயங்களைக் கையாண்டு வரும் நாடு இலங்கை மட்டுமல்ல; வளர்முக நாடுகளில் அரைவாசிக்கு மேற்பட்டவை அபிவிருத்தியடைந்த உலகிலுள்ள சந்தைகளுக்கான கைத்தொழில் உற்பத்திப் பொருள்களை உற்பத்தி செய்வதில் தற்போது ஈடுபட்டுள்ளன; மற்றும் நாடுகளும் அதேபோலச் செய்வது பற்றிச் சிந்தித்து வருகின்றன. ஓரளவு அபிவிருத்தியுற்ற பல நாடுகள் அபிவிருத்தியடைந்த நாடுகளிலுள்ள சந்தைகளில் நியாயமான அளவுக்கு உறுதியான பங்கை ஏற்கெனவே பெற்றுள்ளன. ஒரே மாதிரியான உற்பத்திப் பொருள்களைக் கொண்ட இத்தகைய நாடுகளுடன் போட்டியிடுவதென்பது மிகக் கடினமான காரியம்.

இந்தச் சூழ்நிலையில், இலங்கை மற்றும் நாடுகளிடமிருந்து கடும் போட்டியை எதிர்நோக்குகிறது. இந்நிலைமையில் உடனடியாக ஏற்படக்கூடிய எந்த அபிவிருத்திக்கும் இப்போது இடம்பெற்றுவரும் இனப்பிரச்சினையால் ஏற்பட்டுள்ள சமூக, அரசியல் ஸ்திரமின்மை தடையாக இருந்து வருகிறது. இந்த நிலைமைகளின் கீழ், கைக்கொள்ளப்படும் ஏற்றுமதி விருத்தி உபாயங்கள் குறையேதுமில்லாது மிகச் சிறந்தனவாகவும் போட்டியிடக் கூடிய திறன் மிகுந்தனவாகவும் இருப்பதவசியமாகும்.

## பொருளாதார வளர்ச்சியை உயர்த்துவதற்கான வாய்ப்புகளை ஆராய்தல்

இப்பகுதி சமீப கடந்த காலத்தில் பல்வேறு துறைகளில் காணப்பட்ட வளர்ச்சிப் போக்குகளை ஆராய்வதன் மூலம் பொருளாதார வளர்ச்சியை அதிகரிப்பதற்கான வாய்ப்புகளை மீளாய்வு செய்கின்றது. பொருளாதாரத்தில் உயர் வளர்ச்சி உத்வேகத்தைப் பராமரிப்பதற்காக, உயர் வளர்ச்சிக்கான வாய்ப்புகள் இருந்துவரும் துறைகளை அல்லது உப துறைகளை இனங் காண்பதும், ஏற்ற அபிவிருத்திக் கொள்கைகளையும் முதலிடம் பெற வேண்டிய விஷயங்களையும் நிர்ணயிப்பதற்கு மேலும் ஆராய்ச்சிகள் நடத்தப்பட வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்துவதும் இந்தப் பகுப்பாய்வின் குறிக்கோளாகும். பயங்கரவாத நடவடிக்கைகள், அதிகரிக்கும் பாதுகாப்புச் செலவுகள் போன்ற பாதகமான காரணிகளின் தாக்கத்தைச் சமாளிக்கவும், உள்நாட்டு வருமானம் ஏற்றுமதிச் சம்பாத்தியங்கள் ஆகிய இரண்டையும் அதிகரிக்கவும், இது மட்டுமே உள்ள ஒரே மாற்றுவழியாகும். விவசாய, கைத்தொழில் உற்பத்தியிலேயே பிரதானமாக முழுக் கவனஞ் செலுத்தப்படுகிறது. ஏனென்றால், கூட்டுமொத்தப் பொருளாதார வளர்ச்சிக்கும் அத்துடன் மற்றும் மொத்த உள்நாட்டு உற்பத்தித் துறைகளில் வளர்ச்சி ஏற்படுவதற்கும் அவற்றின் பங்களிப்புகள் ஜீவாதாரமாகும்.

துறைவாரியான வளர்ச்சி விகிதங்களை ஒப்பிட்டுப்பார்க்கும் போது, பொருளுற்பத்தித்துறையும் சுரங்கத் தொழில் துறையும் அவற்றின் கடந்த கால செயற்பாடுகளைவிட 1986ம் ஆண்டில் நன்றாகச் செயற்பட்டனவென்பது தெளிவாகின்றது. 1986ம் ஆண்டில் பொருளுற்பத்தித் துறை சாதித்த வளர்ச்சி விகிதமான 8.4 சதவிகிதம், 1978ம் ஆண்டிலிருந்து 1982ம் ஆண்டு வரையுள்ள காலத்தில் சாதிக்கப்பட்ட சராசரி வளர்ச்சி விகிதங்களான 4.1 சதவிகிதத்தையும், 1982ம் ஆண்டிலிருந்து 1986ம் ஆண்டு வரையுள்ள காலத்தில் சாதிக்கப்பட்ட 7.3 சதவிகிதத்தையும் அல்லது 1978ம் ஆண்டிலிருந்து 1986ம் ஆண்டுவரையுள்ள காலத்தின் கூட்டுமொத்தச் சராசரி வளர்ச்சி விகிதமான 5.6 சதவிகிதத்தையும்விட உயர்வானதாகும். சுரங்கத் தொழில் துறையும் 1978ம் ஆண்டுக்குப் பின்பு தேறும் சராசரி வளர்ச்சி விகிதத்தை விட உயர்வான விகிதமான 5.2 சதவிகிதத்தை 1986ம் ஆண்டில் சாதித்தது. எனினும், மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சேர்க்கையில் ஏறக்குறைய 2 சதவிகிதத்தை மட்டுமே கொண்ட சுரங்கத் தொழில் துறையின் வளர்ச்சிவிகிதம் பொருளாதாரத்தில் எந்தப்பெரிய தாக்கத்தையும் ஏற்படுத்தவில்லை. நிர்மாணத்துறையையும் மற்றும் சில துறைகளையும் தவிர்த்து, மற்றெல்லாத் துறைகளும் 1978ம் ஆண்டுக்குப் பின்புள்ள சராசரிச் செயற்பாடு தொடர்பாக 1986ம் ஆண்டில் ஏமாற்றமளிக்கும் செயற்பாட்டையே காட்டுகின்றன.

1978ம் ஆண்டுக்கும் 1985ம் ஆண்டுக்குமிடையேயுள்ள மொத்த உள்நாட்டு உற்பத்தியின் வருடாந்த வளர்ச்சி விகிதங்கள்யாவும் 1986ம் ஆண்டில் ஏற்

பட்ட மொத்த உள்நாட்டு உற்பத்தியின் வளர்ச்சி விகிதத்தை விட உயர்வாகவே இருந்துள்ளன. 1986 ம் ஆண்டுடன் ஒப்பிடுகையில், உதாரணமாக, மறுநிதியளிப்புக் காலத்தில் ஆகக்கூடிய வளர்ச்சி விகிதத்தைப் பதிவு செய்த ஆண்டான 1978 ம் ஆண்டில் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் ஏற்பட்ட வளர்ச்சி விகிதம் 91 சதவிகிதம் உயர்வானது. 1986 ம் ஆண்டில் பொருளாதாரம் 1978 ம் ஆண்டில் ஏற்பட்ட வளர்ச்சி விகிதத்தின் அரைவாசி வேகத்தில்தான் வளர்ந்துள்ளது என்பதையே இது எடுத்துக் காட்டுகின்றது. 1983 ம் ஆண்டு 1985 ம் ஆண்டு ஆகிய இரு வருடங்களிலும் பதிவு செய்யப்பட்ட 5.0 சதவிகிதமான ஆகக்குறைந்த வளர்ச்சி விகிதத்துடன் ஒப்பிட்டாலுங் கூட, 1986 ம் வருட வளர்ச்சி விகிதம் 16 சதவிகிதம் குறைவாயிருந்தது.

மொத்த உள்நாட்டு உற்பத்தியின் வீழ்ச்சியடைந்துவரும் போக்கினை அவதானிக்கும் போது காலக் கிரமத்தில் வளர்ச்சியில் இந்த வீழ்ச்சியை எது ஏற்படுத்துகிறதென்பது மிகத் தெளிவாகத் தெரியவில்லை. மொத்த உள்நாட்டு உற்பத்தியின் முழுமையான வளர்ச்சியில் படிப்படியாக ஏற்பட்டுவரும் வீழ்ச்சியைப் பிரதிபலிக்கும் அல்லது அவ் வீழ்ச்சிக்கு ஒத்தாசையாயிருக்கும் எந்தத் தெளிவான முன்மாதிரியுமில்லை. உதாரணமாக, விவசாயத் துறையைப் பொறுத்தவரை, 1979 ம் ஆண்டையும் 1982 ம் ஆண்டையும் தவிர்த்து, வளர்ச்சி 1986 ம் ஆண்டில் நிகழ்ந்த செயற்பாட்டை விடக் கடந்த காலத்தில் மேலானதாக இருந்துள்ளது. 8.4 சதவிகித வளர்ச்சியுள்ள விவசாயத்துறையில் சிறந்த வளர்ச்சிச் செயற்பாடு 1985 ம் ஆண்டில் நிகழ்ந்ததாக அறிவிக்கப்பட்டுள்ளது. அவ் வருடத்தில் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் கூட்டு மொத்த வளர்ச்சிக்கு

அட்டவணை 3

**பொது முதலீட்டு நிகழ்ச்சித்திட்டம்**
**(ரூ. பத்து லட்சம்)**

| | 1981-86 உண்மையானது | 1981-86 திட்டமிட்டது | 1987-1991 |
|---|---|---|---|
| பிரதான திட்டங்கள் | 37,040 | 36,983 | 24,051 |
| மகாவலி | 32,171 | 32,440 | 19,441 |
| வீடமைப்பு நகர அபிவிருத்தி | 4,545 | 4,253 | 4,451 |
| மா. கொ. பொ. ஆ. | 324 | 290 | 159 |
| ஏனையன | 15,004 | 14,894 | 14,396 |
| மகாவலியல்லாத நீர்ப்பாசனம் | 4,900 | 4,571 | 4,942 |
| பெருந்தோட்ட விவசாயம் | 3,246 | 3,413 | 1,356 |
| கள, சிறு ஏற்றுமதிப்பயிர்கள் | 3,495 | 3,747 | 3,365 |
| விலங்கு வேளாண்மை | 380 | 674 | 562 |
| காடுவளர்ப்பு, காணிகள் | 873 | 950 | 2,510 |
| கடற்றொழில் | 965 | 1,085 | 1,123 |
| கைத்தொழில் | 1,145 | 454 | 538 |
| பிரதான பொருளாதார மேந்தலைகள் | 19,823 | 21,361 | 31,023 |
| சக்தி | 4,989 | 3,899 | 11,226 |
| துறைமுகம், உள்நாட்டு விமானப் போக்குவரத்து, போக்குவரத்து | 5,751 | 8,532 | 9,971 |
| தபால் தொலை தொடர்பு | 3,172 | 2,797 | 3,698 |
| ஒருங்கிணைக்கப்பட்ட மாவட்ட அபிவிருத்தி | 2,133 | 1,945 | 2,980 |
| பன்முகப்படுத்தப்பட்ட வ. செ. திட்டம் | 2,588 | 1,606 | 1,192 |
| ஏனைய நிர்மாணம் | 1,190 | 1,606 | 1,192 |
| சமூக மேந்தலைகள் | 9,815 | 9,806 | 18,667 |
| நீர் வினியோகம் | 4,143 | 4,323 | 4,767 |
| கல்வி | 3,743 | 3,500 | 5,890 |
| சுகாதாரம் | 1,929 | 1,448 | 6,907 |
| சமூக மேந்தலைகள் | - | 535 | 1,103 |
| பொருளாதார நிர்வாக மேந்தலைகள் | - | 6,567 | 25,987 |
| ஒதுக்கப்படாதது | - | 5 984 | 11,121 |
| புதிய திட்டங்கள் | - | - | 24,329 |
| நானாவிதமானவை | 38,518 | | 1,800 |
| கூட்டுமொத்தம் | 120,200 | 95.595 | 15[illegible],376 |

மூலம்: பொது முதலீட்டு அறிக்கை, நிதி திட்டமிடல் அமைச்சு

அதன் பங்களிப்பு ஏறக்குறைய 43 சதவிகிதமாயிருந்தது. துரதிர்ஷ்டவசமாக, ஒப்பீட்டளவில் மற்றும் பெரும்பாலான துறைகளின் பலவீனமான செயற்பாட்டின் காரணமாக, விவசாயத்துறையின் இக் கணிசமான பங்களிப்பு மொத்த உள்நாட்டு உற்பத்தியின் முழுமையான வளர்ச்சி மீது எந்தத் தாக்கத்தையும் ஏற்படுத்தத் தவறிவிட்டது.

பொருளுற்பத்தித் துறையில், 1986 ம் ஆண்டில் சாதிக்கப்பட்ட வளர்ச்சி விகிதமான 8.4 சதவிகிதம் 1984 ம் ஆண்டின் வளர்ச்சி விகிதமான 12.2 சதவிகிதத்துக்குப்பின் இரண்டாவது மிக உயர்வான விகிதமாகும். 1978 ம் ஆண்டுக்குப்பின் மற்றெல்லா வருடங்களிலும் பொருளுற்பத்தித் துறையில் சாதிக்கப்பட்ட வளர்ச்சி விகிதம் 1986 ம் வருட செயற்பாட்டை விடக் குறைவாகவே இருந்து வந்துள்ளது. உதாரணமாக, 1986ம் ஆண்டுடன் ஒப்பிடுகையில், பொருளுற்பத்தித் துறையில் சாதிக்கப்பட்ட வளர்ச்சி விகிதம் 1978 ம் ஆண்டின் வளர்ச்சி விகிதத்தில் 93 சதவிகிதத்துக்கும், 1979 ம் ஆண்டின் வளர்ச்சி விகிதத்தில் 55 சதவிகிதத்துக்கும் சமமானதாயிருந்தது. பொருளுற்பத்தித் துறையைப் பொறுத்த மட்டில் இன்னும் தெரியவராத மிகப்பெரிய காரணி என்னவெனில், 1985 ம் ஆண்டுக்கு முன்பு அதனல் ஏன் மேலான முறையில் செயற்பட முடியவில்லை? இப்பொழுது அது ஏன் மேலான முறையில் செயற்பட்டு

வருகிறது? என்பதாகும். நிர்மாணத் துறையில் வளர்ச்சிவிகிதம் 1978ம் ஆண்டிலிருந்து 1980ம் ஆண்டுவரையுள்ள காலத்தில் கணிசமான அளவுக்கு உயர்வாக இருந்துள்ளது. ஆனுல், அதற்குப் பின்னர், 1986ம் ஆண்டு வரையிலும் அதன் வளர்ச்சி தேக்க நிலையிலேயே இருந்துள்ளது. போக்குவரத்து, மொத்த விற்பனை, சில்லறை வர்த்தகம், வங்கித் தொழில், வகைப்படுத்தப்படாத துறை போன்ற மற்றெல்லாத் துறைகளும் 1986ம் ஆண்டு தொடர்பாக உயர்வான குறியீட்டெண்களைக் காட்டுகின்றன. மொத்த உள்நாட்டு உற்பத்திக்கு உதவும் முக்கிய துறைகளில் ஏற்பட்ட வளர்ச்சியில் வருடா வருடம் ஏற்றத்தாழ்வுகள் காணப்படுவதால், சம்பந்தப்பட்ட துறைகள் எந்த அளவுக்குக் கூட்டு மொத்த வளர்ச்சிக்கு உதவியுள்ளனவென்பதை நிர்ணயிப்பது கடினமாக உள்ளது.

மேற்போந்த பகுப்பாய்வில் வெளிப்படும் முக்கியமான செய்தி என்னவென்ருல், 1978ம் ஆண்டிலிருந்து 1986ம் ஆண்டு வரை பொருளாதாரம் செயற்பட்ட விதம் குறித்து எந்த நேரடியான, நம்பத்தகுந்த விளக்கமும் கிடைப்பதாயில்லை என்பதுதான். 8.4 சதவிகித வளர்ச்சி விகிதம் பிரதிபலிப்பது போல 1978ம் ஆண்டில் மனதில் மிக ஆழமாகப் பதியத்தக்க செயற்பாட்டை ஆரம்பித்த பொருளாதாரம் படிப்படியாக வேகம் குறைந்து மந்தகதியை அடைந்து விட்டது. எனினும், இந்த மந்த கதிக்குத் தனியொரு துறையின் செயற்பாடோ அல்லது ஒரு சில தெரிவுசெய்யப்பட்ட துறைகளின் செயற்பாடோ காரணமென்று கூற முடியாது. மொத்த உள்நாட்டு உற்பத்தியின் கூட்டுமொத்த வளர்ச்சியில் காணப்படும் போக்குகளுக்கும் சம்பந்தப்பட்ட துறைகளின் வளர்ச்சிப் போக்குகளுக்குமிடையே தெளிவாகப் புலப்படும் எந்தத் தொடர்பு மில்லை. இனக் குழப்பங்களையும் பயங்கரவாத நடவடிக்கைகளின் அதிகரிப்பையும் அடுத்து, 1983ம் ஆண்டுக்குப் பிற்பட்ட காலப் பகுதி போன்ற ஒரு குறித்த காலப் பகுதியில் பொருளாதாரம் நடந்து கொள்ளும் விதத்தையும் விளக்குவது சாத்தியமல்ல.

விழ்ச்சியடைந்து வந்த முழுமையான வளர்ச்சிவிகிதம் 1983ம் ஆண்டுக்குப் பிற்பட்ட காலப் பகுதிக்கு மட்டுமே உரியதென்று வரையறுப்பதற்கில்லை. ஆனுல், அது தொடர்ந்து இருந்து வந்த ஒரு போக்கைக் குறிக்கும் ஓர் அம்சமாகும்.

வளர்ச்சிச் செயற்பாட்டில் ஏற்பட்ட மந்தகதியின் காரணங்களைக் கண்டுபிடிப்பது கடினமாயிருப்பதால், பிரச்சினைக்குப் பரிகாரம் காண்பது அதிக சிக்கலாகின்றது. இந்த மந்த கதிக்குத் தனியொரு காரணியோ அல்லது பயங்கரவாதமும் அதனுடன் இணைந்த பாதுகாப்புச் செலவு அதிகரிப்புகளும் போன்ற ஒன்ருேடொன்று தொடர்புள்ள சில காரணிகளையோ சுட்டிக் காட்ட முடியுமென்ருல், இனப் பிரச்சினைக்குக் காணப்படும் தீர்வுதான் பொருளாதாரத்துக்குள் செயலூக்கத்தைப் புகுத்துமென்பது நிச்சயம். துரதிர்ஷ்டவசமாக, பரஸ்பர போக்குகள் இத்தகைய ஒரு சுலபமான தீர்வைக் குறிப்பிடுவதாயில்லை.

விவசாயம்

விவசாயத்திலும் கைத்தொழிலிலும் கூட்டப்பட்ட பெறுமதியைச் சுருக்கமாக மீளாய்வு செய்தல் மேற்குறித்த வாதத்தை மேலும் விரிக்கப் பயன்படும். விவசாயம் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சேர்க்கையில் ஏறக்குறைய 25 சதவிகிதத்துக்குப் பொறுப்பாயிருக்கிறது. விவசாயத்துக்குள்ளே ஐந்து உப வகைகள் உள்ளன; தேயிலை 10 சதவிகிதத்துக்கும், இறப்பர் 3 சதவிகிதத்துக்கும், தேங்காய் 13 சதவிகிதத்துக்கும், நெல் 24 சதவிகிதத்துக்கும், மற்றும் வகைகள் 50 சதவிகிதத்துக்கும் பொறுப்பாயுள்ளன. விவசாயத் துறைக்குள்ளே செய்யப்படும் இந்தப்பகுப்பு, விவசாயத்துறை பிரதானமாக பாரம்பரியமற்ற ஒரு துறை என்பதையும் அதில் உப உணவுப்பயிர்கள், ரொக்கப் பணப் பயிர்கள், விலங்கு வேளாண்மை, வீட்டுத் தோட்டங்கள் அடங்கியுள்ளனவென்பதையும் விவசாய மொத்த உள்நாட்டு உற்பத்தியிலுள்ள பங்குக்கு அது பெரிதும் உதவுகிறது என்பதையும் காட்டுகிறது.

விவசாயத் துறையில் ஏற்பட்டுள்ள முன்னேற்றத்தையும் நாட்டிலுள்ள முழுமையான பொருளாதாரத்துக்கு விவசாயத்துறை செய்துவரும் பங்களிப்பையும், குறிப்பாகப் பாரிய சூழலொன்றில், மிகப்பயனுள்ள முறையில் மதிப்பிடுவதென்ருல், விவசாய உபதுறைகள் கூட்டியுள்ள பெறுமதியில் நிகழும் போக்குகளை மீளாய்வு செய்ய வேண்டும்.

விவசாய மொத்த உள்நாட்டு உற்பத்தியில் ஏற்படும் அதிகரிப்புகளுக்கு விவசாய உபதுறைகள் செய்யும் பங்களிப்புகள் ஒரே சீராக அமைந்திருக்கவில்லை. சம்பந்தப்பட்ட உபதுறைகள் செய்யும் பங்களிப்புகள் வருடத்துக்கு வருடம் ஏற்றத் தாழ்வாக உள்ளன. இந்த ஏற்றத் தாழ்வுகள் அடிக்கடி கணிசமான அளவில் காணப்படுகின்றன. சில சமயங்களில் சதவிகிதப்பங்களிப்புகள் ஒரு வருடத்தில் நேர்ப்பங்களிப்பாகவும் மறு வருடத்தில் எதிர்மறையான பங்களிப்பாகவும் மாறுகின்றன. பிரதானமாக, பாரம்பரியமற்ற பயிர்களை உள்ளடக்கும் 'மற்ற' உப துறையைப் பொறுத்த மட்டிலேயே, 1978ம் ஆண்டிலிருந்து 1986ம் ஆண்டு வரையுள்ள காலத்தில் விவசாய மொத்த உள்நாட்டு உற்பத்தியின் வளர்ச்சிக்கு எந்த எதிர்மறையான பங்களிப்பும் காணப்படவில்லை. ஆனுல், இத்துறை

(18 பக்கம் பார்க்க)

# வெளிநாட்டுக்கடன்

கடந்த பத்தாண்டு காலத்தில் இலங்கையின் வெளிநாட்டுக்கடன் அளவு கணிசமான அளவில் அதிகரித்துள்ளது. 1978 ஆம் வருட முடிவில் 1727.7 கோடி ரூபாவாக இருந்த வெளிநாட்டுக்கடன் நிலுவை 1986 இறுதியில் 11,330.8 கோடி ரூபாவாக அதிகரித்திருந்தது. இவ்வதிகரிப்பு ஐந்து மடங்குக்கும் அதிகமானதாகும். எனினும், இவ்வதிகரிப்பின் ஒரு பகுதிக்கு ரூபா பெறுமதியிறக்கமும் பொறுப்பாகும். ரூபாவின் பெறுமதி 1978 ஆம் வருட மட்டத்தில் தொடர்ந்து இருந்திருச்குமாயின் 1986 இறுதியில் நிலுவையாக இருக்கும் வெளிநாட்டுக்கடன் அளவு 6070 கோடி ரூபாவாக - அதாவது தற்போதைய அளவிலும் அரைவாசியாக - மட்டுமே இருந்திருக்கும்.

பொதுக் கூட்டுத்தாபனங்களுக்கென அரசாங்க உத்தரவாதத்துடன் பெற்றுக் கொள்ளப்பட்ட நீண்ட காலக்கடன்கள் உட்பட அரசாங்கத்திஞல் பெற்றுக் கொள்ளப்பட்ட நீண்ட காலக் கடன்களே வெளிநாட்டுக்கடன்களில் அதிக பங்கினை வகிக்கின்றன. இதன் பங்கு 1983ல் 64 சதவீதமாக இருந்து 1986ல் 76 சதவீதம் வரையில் அதிகரித்திருக்கிறது. வர்த்தக வட்டாரங்களிலிருந்து பொதுத்துறையும், தனியார் துறையும் குறைவாக கடன் வாங்கியதும், அரசாங்கம் அதிகளவிலான திட்டக் கடன்களைப் பெற்றதுமே இதற்கான காரணங்களாகும். நீண்ட காலக் கடன்களில் சுமார் அரைவாசி வெளிநாட்டு அரசாங்கங்களிலிருந்தும், 40 சதவீதம் சர்வதேச ஸ்தாபனங்களிலிருந்தும், மிகுதி வர்த்தக வட்டாரங்களிலிருந்தும் பெற்றுக் கொள்ளப்பட்டன. மூன்ருண்டுகளுக்கு குறைந்த திருப்பிச்செலுத்தும் காலத்தைக் கொண்ட குறுங்கால கடன்களைப் பொறுத்தவரையில், தனியார் துறையும், (அரசாங்க உத்தரவாதமின்றி) பொதுக் கூட்டுத்தாபனங்களும் அதிக பங்கினைப் பெற்றுக் கொண்டன.

### அட்டவணை 2

### கடன் குறிகாட்டிகள் 1980 — 1986

(ரூபா பத்து லட்சம்)

| வகை | | | | | |
|---|---|---|---|---|---|
| 1. கடன் சேவைக்கொடுப்பனவு | 2763 | 7136 | 8026 | 9362 | 11643 |
| (அ) கடனழிப்பு | 1781 | 3121 | 3437 | 4533 | 6837 |
| (ஆ) வட்டி | 981 | 4015 | 4588 | 4829 | 4806 |
| 2. மொத்த உதவி வருகை | | | | | |
| (அ) நீண்ட காலம் | 4896 | 7330 | 9410 | 8834 | 9915 |
| (ஆ) கொடைகள் | 2281 | 4016 | 5154 | 4828 | 4988 |
| (இ) மொத்தம் (அ+ஆ) | 7177 | 11346 | 14564 | 13662 | 14903 |
| (ஈ) குறுங்காலம் | 6963 | 14370 | 11086 | 9055 | 8018 |
| 3. கிடைத்த உதவியில் (இ) கடன் சேவை விகிதம் | 38 | 63 | 55 | 69 | 78 |
| 4. கடன் சேவை விகிதம் | 12.4 | 21.6 | 17.5 | 21.0 | 26.2 |
| 5. மொ. தே. உ. யில் கடன் நிலுவை விகிதம் | | | | | |
| (அ) இலங்கை | 48.0 | 59.0 | 51.0 | 60.0 | 64.0 |
| (ஆ) இந்தியா | 8.8 | 7.9 | 7.8 | - | - |
| (இ) பிலிப்பைன்ஸ் | - | 11.9 | - | - | - |
| (ஈ) பாகிஸ்தான் | 27.0 | 27.9 | 28.6 | - | - |
| (உ) கொரியா | 14.3 | 18.3 | 17.7 | - | - |

ஆதாரம்: இலங்கை மத்திய வங்கி, உலக வங்கி அறிக்கைகள்

அதிகரித்து வரும் வெளிநாட்டுக் கடன்களையடுத்து கடன் சேவைக் கொடுப்பனவுத் தேவைகளும் அதிகரித்து வருகின்றன. 1980 ஆம் வருடத்தில் கடன் சேவை (கடனழிப்பும் வட்டிக் கொடுப்பனவும்) 270 கோடி ரூபாவாக 12.4 சதவிகிதமாக இருந்தது. இது 1986ல் 1160 கோடி ரூபாவாக-26·2 சதவிகிதமாக — அதிகரித்திருந்தது. இதுவரையில் பதியப்பட்ட மிக உயர்ந்த விகிதம் இதுவாகும். இதே வேளையில் அதிகரித்த கடன் சேவைக் கொடுப்பனவுகள் காரணமாக வெளிநாட்டு உதவியின் தேறிய வருகை வீழ்ச்சியடைந்துள்ளது. 1980ல் நீண்டகாலக் கடன்கள், கொடைகள் என்பவற்றின் 38 சதவீதமாக இருந்த கடன் சேவைக் கொடுப்பனவு, 1986ல் 76 சதவீதம் வரையில் அதிகரித்திருப்பதனை அட்டவணை 2 காட்டுகிறது. வரும் வருடங்களில் ஏற்றுமதிச் சம்பாத்தியங்கள் கணிசமான அளவில் அதிகரிக்காதவிடத்து, இலங்கை அதிகளவில் குறுங்கால வர்த்தக கடன்களிலேயே தங்கியிருக்க வேண்டி நேரிடும்.

இலங்கையின் கடன் சுமை, அதன் பொருளாதாரத்தின் பரிமாணத்துடன் நோக்கும் போது ஆசியப்பிராந்தியத்திலேயே மிக உயர்வானதாகும். பொது முதலீட்டு நிகழ்ச்சித்திட்டத்தின்படி 1992 அளவில் கடன் சுமை குறைக்கப்படவிருக்கிறது. (அ) அதிகரித்த ஏற்றுமதிச் சம்பாத்தியங்கள் (ஆ) குறைந்த அளவில் கடன் படுதல் என்ற இரு எடுகோள்களின் அடிப்படையிலேயே இக்கணிப்பீடு செய்யப்பட்டுள்ளது. ஆஞல், சமீப கால செயற்பாடுகளின் அனுபவம், இவ்விரண்டையும் சாதிப்பது மிகக் கடினமானது என்பதை எடுத்துக்காட்டியுள்ளது.

### அட்டவணை 1

### வெளிநாட்டுக்கடன் நிலுவை 1983 - 1986

(ரூ. பத்து லட்சம்)

| | 1983 | % | 1984 | % | 1985 | % | 1986 | % |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1. நீண்ட காலம் | 46025 | 64 | 53181 | 68 | 67792 | 72 | 86356 | 76 |
| (அ) திட்டக் கடன்கள் | 19531 | 27 | 25971 | 33 | 36406 | 39 | 50418 | 44 |
| (ஆ) திட்டமல்லாதவை | 23490 | 33 | 24805 | 32 | 28802 | 30 | 33877 | 30 |
| (இ) ச. நா. நி. கடன்கள் | 3004 | 4 | 2905 | 3 | 2584 | 3 | 2061 | 2 |
| 2. வழங்குனர் கடன் | 889 | 1 | 587 | 1 | 562 | 1 | 529 | 1 |
| 3. ச. நா. நி. கொடுப்பனவு | 8225 | 11 | 8644 | 11 | 7914 | 8 | 7672 | 7 |
| 4. வங்கிக் கடன் | 1854 | 3 | 3 | - | 6 | - | - | |
| 5. ஏனைய வர்த்தக கடன்கள் | 15186 | 21 | 15497 | 20 | 18030 | 19 | 18752 | 16 |
| மொத்தம் | 72179 | 100 | 78413 | 100 | 94303 | 100 | 113308 | 100 |

ஆதாரம்: இலங்கை மத்திய வங்கி

(16 பக்கத் தொடர்ச்சி)

யில் கூட, கூட்டிய விவசாயப் பெறுமதியில் ஏற்பட்ட அதிகரிப்புக்குச் செய்யப்பட்ட பங்களிப்பில் ஒரே சீரான நிலை தென்படவில்லை. மேற்குறித்த காலப் பகுதியில் மற்றெல்லாத் துறைகளும் எதிர்மறையான பங்களிப்புகளையே கொண்டுள்ளன. இந்த ஏற்றத்தாழ்வுகள் 1979ம் ஆண்டிலிருந்த 5.7 சதவிகிதத்திலிருந்து 1985ம் ஆண்டிலுள்ள 42.5 சதவிகிதம் வரை காணப்படுகின்றன. முழுக்காலப் பகுதியிலும் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் வளர்ச்சிக்கு விவசாயத்தின் பங்களிப்பு 1979ம் ஆண்டிலுள்ள 5.7 சதவிகிதத்திலிருந்து 1985ம் ஆண்டிலுள்ள 42.5 சதவிகிதம் வரையுமாகும். முழுக் காலப்பகுதியிலும், மொத்த உள்நாட்டு உற்பத்தியின் வளர்ச்சிக்கு விவசாயம் செய்த பங்களிப்பு மூன்று வருடங்களில் மட்டுமே மொத்த உள்நாட்டு உற்பத்தியில் அதன் பங்கை மிஞ்சியது.

விவசாயத்தில் கூட்டப்பட்ட பெறுமதி மொ. உ. உ. சேர்க்கையிலுள்ள அதன் பங்கைவிட அதிகமாயிருந்த அந்த மூன்று வருடங்களில் (1981, 1983, 1985 ஆகிய வருடங்கள்) எல்லா உபதுறைகளுமே சிறப்பாகச் செயற்பட்டதாகச் சொல்ல முடியாது. 1981ம் ஆண்டில் கூட்டிய பெறுமதியில் ஏற்பட்ட அதிகரிப்பு பிரதானமாக ''மற்ற'' வகையிலிருந்தே வந்தது; 1983ம் ஆண்டில் நெல்லிலிருந்தும் 'மற்ற' வகையிலிருந்தும் வந்தது; 1985ம் ஆண்டில் நெல்லிலிருந்தும் தேங்காய்களிலிருந்தும் வந்தது. ஒப்பீட்டளவில் செயற்பாடு மேலானதாயிருந்த வருடங்கள் உட்பட, விவசாயத் துறையில் வருடாந்த வளர்ச்சிக்கு ஒரு சில துறைகள் மட்டுமே பங்களிப்புச் செய்துள்ளன. கூட்டிய பெறுமதியில் ஏற்பட்ட அதிகரிப்புகளுக்கு எல்லாத்துறைகளும் நேர்ப்பங்களிப்புச் செய்த எந்தத் தனி வருடமும் இல்லை. விவசாயத்தில் கூட்டிய பெறுமதி, மொ. உ. உ. க்கு அதன் வருடாந்தப் பங்களிப்பு ஆகிய இரண்டிலும் வருடத்துக்கு வருடம் ஏற்பட்ட ஏற்றத் தாழ்வுகளுக்கு இப்போக்கு தான் காரணம். இந்த ஏற்றத்தாழ்வுகளின் பரிமாணம் பெருமளவுக்கு வெவ்வேறு துறைகளும் செய்த நேரான பங்களிப்புக்கும் எதிர்மறையானபங்களிப்புக்குமிடையேயுள்ள வித்தியாசங்களையே சார்ந்திருந்தது.

விவசாயத்திலுள்ள உபதுறைகளில் காணப்பட்ட போக்குகளைப் பற்றிய மேற்போந்த பகுப்பாய்வு பல ஜீவாதாரமான அவதானிப்புகளுக்கு எம்மை இட்டுச் செல்கின்றது. முதலாவதாக, விவசாயத்துறையில் நிகழ்ந்த கூட்டு மொத்தச் செயற்பாடுகளில் ஓர் ஆக்கரீதியான போக்கு இருந்ததற்கான சான்றெதுவும் காணப்படவில்லை. இதை வேறு வார்த்தைகளில் சொல்வதெனில், முழுக்காலப் பகுதியிலும், முழுமையான அமைவில், கூட்டிய பெறுமதியில் அதிகரித்து வரும் போக்கொன்றோ அல்லது தனியொரு உபதுறையிலேனும் அதிகரித்து வரும் போக்கொன்றோ நிகழ்ந்ததற்கான சான்றொன்றும் தென்படவில்லை. இத்துறையில் கூட்டிய பெறுமதியில் வருடா வருடம் ஏற்றத்தாழ்வுகள் இடம்பெற்றுவந்ததால், முழுமையான வளர்ச்சியில் விவசாயத்தின் பங்களிப்பை மதிப்பிடுவது அதிக கடினமாயுள்ளது. கடந்த காலத்தில் காணப்பட்ட போக்குகளை நோக்குமிடத்து, விவசாயத் துறையில் மிகக் குறுங்காலத்தில் நிகழக் கூடிய செயற்பாடுகளைக் கூட முன் கூட்டியே எடுத்துரைப்பது சாத்தியமல்ல. இந்த நிலைமைக்குப் பல சிக்கலான காரணிகள் ஒன்று சேர்ந்தமை காரணமாயிருக்கலாம். இந்தக் காரணிகளில் காலநிலை, விலைகள், உற்பத்திச் செலவுகள், உள்நாட்டு — வெளிநாட்டுக்கோரிக்கை, குறைந்த செலவிலான கடன் வசதியும் சந்தைப்படுத்தல் வசதியும் களஞ்சிய வசதியும் உட்பட உள்ளீடுகைகள் கிடைக்கும் வாய்ப்பு, அரசிறை நாணய வெளிநாட்டு நாணய மாறிகள் தொடர்பான அரசாங்கக் கொள்கைகள் ஆகியனவும் அடங்கியிருக்கலாம்.

இரண்டாவதாக், விவசாய மொ. உ. உ. வுக்குப் பாரம்பரிய மற்ற துறை செய்யும் பங்களிப்புடன் ஒப்பிடுகையில், தேயிலை, இறப்பர், தேங்காய் அத்துடன் நெல் போன்ற பாரம்பரியத் துறைகள் செய்யும் பங்களிப்பு ஒப்பியல் ரீதியாகக் குறைவாயுள்ளது. எனினும், இந்தத் துறைகள் விவசாயத்தில் முதலிடம் பெறும் துறைகளாக அமைந்திருக்கின்றன. எனவே, வருடாந்த முதலீட்டுத் திட்டங்களில் கணிசமான நிதிகளைத் தவறுமல் கோருகின்றன. துரதிர்ஷ்டவசமாக, உபதுறை விவசாயத்தில் மிக முக்கியமான பங்காற்றுவதுடன், அதன் மூலம் முழுமையான மொ. உ. உ. வளர்ச்சியிலும் மிக முக்கிய பங்கெடுத்த போதிலும், அதன் விஷயத்தில் அதே ஆழ்ந்த அக்கறை காட்டப்படுவதில்லை.

அட்டவணை 4

ஏற்றுமதிகளின் பெறுமதி 1977–86
(பத்து லட்சம் எஸ். டி. ஆர்.)

| | 1977 | 1982 | 1983 | 1984 | 1985 | 1986 |
|---|---|---|---|---|---|---|
| தேயிலை, இறப்பர், தென்னை | 457 | 421 | 499 | 790 | 613 | 410 |
| பெட்ரோலிய பொருட்கள் | 57 | 142 | 107 | 126 | 140 | 72 |
| ஏனைய கைத்தொழிற் பொருட்கள் | 37 | 217 | 244 | 357 | 372 | 411 |
| சிறு விவசாய உற்பத்திகள் | 48 | 88 | 79 | 74 | 75 | 69 |
| இரத்தினக் கற்கள் | 25 | 30 | 38 | 24 | 17 | 23 |
| ஏனையன | 27 | 36 | 31 | 61 | 84 | 51 |
| | 651 | 934 | 998 | 1432 | 1311 | 1036 |
| மொத்தம் | | | | | | |

இலங்கையின் பொருளுற்பத்தித் துறை மூன்று உப வகைகளாகப் பிரிக்கப்படுகின்றது: ஏற்றுமதிக்காகப் பதப்படுத்தல், தொழிற்சாலைக் கைத்தொழில், சிறு கைத்தொழில். ஏற்றுமதிக்காகப் பதப்படுத்தல் கைத்தொழிலில் பெருந் தோட்டத் துறையில் நடைபெறும் பதப்படுத்தல் நடவடிக்கைகள் (அரசாங்கத்துக்குச் சொந்தமான பெருந் தோட்டங்களில் இவை செறிந்துள்ளன) ஏற்றுமதி ஊக்குவிப்பு வலயங்களில் நடைபெறும் பொருளுற்பத்தி ஆகியன அடங்கியுள்ளன. தொழிற்சாலைக் கைத்தொழிலில், பெரிய அளவிலும் நடுத்தர அளவிலும் நடைபெறும் கைத்தொழில்கள் அடங்கும். பெரும்பாலும் கொழும்பிலும் அதைச் சுற்றியுள்ள உபநகரப் பகுதிகளிலும் அமைந்துள்ள இக் கைத்தொழில்கள் அரசாங்கத் துறையைச் சேர்ந்தவையாகும். கடைசி வகையில், விரிவான அளவில் நடைபெறும் பல்வேறு விதமான நடவடிக்கைகள் அடங்கும், பிரதானமாகத் தனியார் கைகளிலுள்ள இச்சிறு கைத்தொழில்கள் முக்கிய நகரங்களிலும் மாநகரங்களிலும் அத்துடன் நகரப்பகுதிகளுக்கு வெளியேயும் அமைந்திருக்கின்றன.

பொருளுற்பத்தித் துறைக்குள், தொழிற்சாலைக் கைத்தொழில்கள் ஏறக்குறைய 65 சதவிகிதப் பங்குக்கும், அடுத்து ஏற்றுமதிக்காகப் பதப்படுத்தும் கைத்தொழில்கள் 22 சதவிகிதத்துக்கும், சிறு கைத்தொழில்களும் மற்றும் வகைக் கைத்தொழில்களும் 13 சதவிகிதத்துக்கும் பொறுப்பாயிருக்கின்றன. குறிப்பிடத்தக்க பங்கைக் கொண்டுள்ள தொழிற்சாலைக் கைத்தொழில், பொருளுற்பத்தித் துறையின் முழுமையான வளர்ச்சியில் ஒரு ஜீவாதாரமான பங்காற்றுகின்றது.

தொழிற்சாலைக் கைத்தொழில் குழு கூட்டிய பெறுமதியில் ஏற்படும் அதிகரிப்புகளுக்குச் செய்யும் பங்களிப்பு குறிப்பிடத்தக்கதாயிருப்பது தெளிவு. சில வருடங்களில், அதன் பங்களிப்பு மொ. உ. உ. வின் சேர்க்கையில் உள்ள அதன் ஒப்பியல் ரீதியான பங்கை விட மிகவும் அதிகமாயிருப்பது புலப்படும். எனினும், ஏற்றுமதிக்காகப் பதப்படுத்தும் கைத்தொழில்களும் ஒரு முக்கியமான பங்காற்றி வருகின்றன. கூட்டிய பெறுமதிக்கு அதன் பங்களிப்பு எதிர்மறையாயிருந்த போது, பொருளுற்பத்தித் துறையில் வளர்ச்சி விகிதமும் வீழ்ச்சியடைந்துள்ளது. குறிப்பாக, இந்த வீழ்ச்சி மிகக் கணிசமான அளவில் இருந்துள்ளது. சிறு கைத்தொழில்களையும் மற்றும் வகையைச் சேர்ந்த கைத்தொழில்களையும் பொறுத்தவரை, அவற்றின் பங்களிப்பு மிகக் குறைவான முக்கியத்துவம் உடையதாகவே இருந்துள்ளது. அவற்

அட்டவணை 5

வெளிநாட்டு செலாவணிச் சம்பாத்தியங்கள் கொடுப்பனவுகள் ஒதுக்கு நிலைமை
(பத்து லட்சம் டொலர்)

| | 1984 | 1985 | 1986 | 1984 லிருந்து 1986க்கு | 1984 லிருந்து 1986க்கு மாற்றம் |
|---|---|---|---|---|---|
| மொத்த வெளிநாட்டு சம்பாத்தியங்கள் | 2,100 | 1,933 | 1,949 | 16 | -151 |
| (அ) தேயிலை | 620 | 442 | 336 | -106 | -284 |
| (ஆ) ஏனைய விவசாய | 267 | 258 | 237 | 21 | -30 |
| (இ) கைத்தொழில் | 508 | 526 | 577 | 51 | 69 |
| (ஈ) சுற்றுலாப் பயணிகள் வருமானம் | 105 | 69 | 71 | 2 | -34 |
| (உ) தனியார் பண அனுப்பீடுகள் | 300 | 294 | 332 | 38 | 32 |
| (ஊ) ஏனையன | 226 | 237 | 307 | 70 | 81 |
| மொத்த வெளிநாட்டுக் கொடுப்பனவுகள் | 3,044 | 2,993 | 3,090 | 97 | 46 |
| (அ) இறக்குமதிகள் | 1,928 | 2,044 | 1,996 | -48 | 68 |
| (ஆ) கடன் தீர்வு | 686 | 497 | 542 | 45 | -144 |
| (இ) ஏனையன | 430 | 452 | 552 | 100 | 120 |
| மூலவள இடைவெளி | -944 | -1,060 | -1,141 | 81 | 197 |
| கடன்படுதலும் மூலவள பாவனையும் | 716 | 840 | 949 | 109 | 233 |
| கொடைகளும் முதலீடுகளும் | 240 | 196 | 212 | 16 | 28 |
| ஏனையன | -12 | 24 | -20 | - | - |
| மொத்த ஒதுக்குகள் | 745 | 676 | 624 | -52 | -121 |
| தேறிய ஒதுக்குகள் | 392 | 341 | 322 | -19 | -70 |

மூலம்; இலங்கை மத்திய வங்கி

றின் வளர்ச்சிப் போக்குகள் பொருளுற்பத்தித் துறையில் நிகழும் முழுமையான வளர்ச்சிச் செயற்பாட்டின் மீது எத்தகைய முக்கியமான தாக்கத்தையும் ஏற்படுத்துவதாயில்லை.

மேற்போந்த பகுப்பாய்விலிருந்து வெளிப்படும் நிலை இரு முக்கியமான எண்ணக் கருத்துகளுக்கு எம்மை இட்டுச் செல்கின்றது. முதலாவதாக, பொருளுற்பத்தித் துறையில் முழுமையான வளர்ச்சியை உருவாக்கிவரும் இரு முக்கிய கைத்தொழில் குழுக்களாகத் தொழிற்சாலைக் கைத்தொழிலும், ஏற்றுமதிக்காகப் பதப்படுத்தும் கைத்தொழிலும் விளங்குகின்றன. குறிப்பாக தொழிற்சாலைக் கைத்தொழில் பொருளுற்பத்தித் துறையின் கூட்டுமொத்த வளர்ச்சியில் ஓர் உயிர் நிலையான பங்காற்றுகிறது. அதன் மூலம் உற்பத்தியைப் பலப்படுத்துகின்றது. எனினும், பொருளுற்பத்தித் துறையில் ஏற்படும் கூட்டுமொத்த வளர்ச்சியை உறுதியாக நிலை நிறுத்துவதற்கு ஏற்ற கொள்கைகளை அமுல் செய்வது அத்தியாவசியமாகும். 70 சதவிகிதக் கைத்தொழில்கள் அரசாங்கத்துக்குச் சொந்தமாயிருக்கும் இத்துறையில் உற்பத்திச் செயற்பாடு பற்றிய அனுபவம் இதுவரை ஏமாற்றமளிப்பதாகவே இருந்து வந்துள்ளது. இதற்கு இறக்குமதிகளின் கடும் போட்டியைச் சமாளிக்க வேண்டியிருப்பதும், முகாமைத்துவத்தில் காணப்படும் திறமையின்மையும், மிதமிஞ்சிய அரசியல் தலையீடும் ஓரளவுக்குக் காரணங்களாயிருக்கலாம். நிலைமையைச் சீர்திருத்தியமைக்க அரசாங்கம் இப்போது எடுத்து வரும் முயற்சிகள் உற்சாகமூட்டிய போதிலும், இத்தகைய செயல் முறைகளைக் கையாள்வதில் ஏற்பட்டுள்ள காலதாமதம் நேரடியாகவும் மறைமுகமாகவும் செலவுகளை உண்டாக்குமென்பது கருத்திற் கொள்ளப்படவேண்டும்.

எனினும், பொருளுற்பத்தித் துறையில் நடவடிக்கைகளைப் பரந்த அடிப்படையில் அமைப்பதற்காக, சிறு அளவிலான கைத்தொழில்களுக்கும் நடுத்தர அளவிலான கைத்தொழில்களுக்கும் முதல் முக்கிய இடம் அளிக்கப்பட வேண்டியது மிக முக்கியமாகும். தொழில் முயற்சியாளர்கள் பெரும் பாலும் இவ்விரு வகையினராகவே இருக்கும் இலங்கையின் அமைவில் இது விசேஷ முக்கியத்துவம் உடையதாகும். மேலும், அரசாங்கத் துறையில் பொருளுற்பத்தியில் ஈடுபட்டுள்ள கூட்டுத்தாபனங்களுக்குப் புத்துயிரளிக்க இப்பொழுது முயற்சிகள் எடுக்கப்பட்டுவருகின்ற போதிலும், இவற்றின் வினைத்திறனை விருத்தி செய்வதன் நடவடிக்கைகளின் விளைவாகப் பொருளுற்பத்தித் துறையில் வளர்ச்சி அதிகரிக்குமென்று சொல்வதற்கில்லை. ஏனென்றால், இந்தப் புதிய நடவடிக்கைகளின் குறிக்கோள் பிரதானமாக இக் கூட்டுத்தாபனங்களின் நிதி நிலைமையைப் பலப்படுத்துவது தானாகும். அரசாங்கத் துறையில் உற்பத்தியில் ஈடுபட்டுள்ள கூட்டுத்தாபனங்களில் பெருமளவு அபிவிருத்தி ஏற்பட்ட போதிலுங்கூட, அந்தக் கூடுதலான நன்மைகளைப் பொருளாதாரத்தின் ஏனைய பகுதிகளுக்கு மாற்றுவதற்குள்ள வாய்ப்பு வரையறுக்கப்பட்டதாகவே உள்ளது. ஏனென்றால், அரசாங்கத் துறைத் தொழில் முயற்சிகளில் பெரும்பாலானவற்றில் கூட்டிய பெறுமதி குறைவாகவே உள்ளது. அரசாங்கத்துறையிலுள்ள முக்கிய கைத்தொழில் தொகுதிகளில் உணவும் குடிபானங்களும், உடுதுணிகளும், இரசாயனப் பொருள்களும் பொருளுற்பத்தியில் கூட்டிய மொத்தப் பெறுமதியில் சுமார் 75 சதவிகிதத்துக்குப் பொறுப்பாயிருக்கின்றன. ஆனல், உற்பத்தியின் பெறுமதி சம்பந்தமாகக் கூட்டிய பெறுமதியின் விகிதம் உடுதுணிகள், இரசாயனப் பொருள்கள் ஆகிய இரண்டிலும் ஒப்பீட்டளவில் குறைவாகவே உள்ளது. அவை இறக்குமதி செய்யப்படும் மூலப் பொருள்களையும் உள்ளிடுகைகளையும் கனத்த அளவில் சார்ந்திருக்கின்றன என்பதுவே இதன் பிரதான உட்கிடக்கை.

இலங்கைப் பொருளாதாரத்தில் கைத்தொழில்கள் அமைந்துள்ள விதத்தை நோக்குமிடத்து, கைத்தொழிலில் ஏற்படும் வளர்ச்சி விகிதம் பொருளாதாரத்தின் ஏனைய பகுதிகள் மீதான தாக்கத்தை மதிப்பிடுவதற்கேற்ற ஒரு காட்டியல்ல. மேலே எடுத்துக் காட்டப்பட்டவாறு, கைத்தொழில் வளர்ச்சியில் அதிக பகுதி தொழிற்சாலைக் கைத்தொழில் வகையில் தான் பிறக்கின்றது. இத் தொழிற்சாலைக் கைத்தொழில் பெரும்பாலும் கொழும்பிலேயே அமைந்துள்ளது. அத்துடன், இவற்றின் படர்ச்சிப் பயன்கள் வரையறுக்கப்பட்டனவாகவும் உள்ளன. ஏனென்றால், உற்பத்தியின் பெறுமதி தொடர்பாக இவற்றின் கூட்டிய பெறுமதி குறைவாக இருக்கிறது. பொருளுற்பத்தித் துறை, வளர்ச்சிக்கும் வேலை வாய்ப்புகளுக்கும் குடும்ப வருமானத்துக்கும் அர்த்தமுள்ள பங்களிப்புச் செய்வதாயின், கூட்டிய பெறுமதியின் விகிதம் ஒப்பீட்டளவில் உயர்வாக உள்ள கைத்தொழில்களிலேயே முயற்சிகள் செறிந்திருப்பதவசியமாகும்.

### முடிவுரை

பொருளாதாரத்தை துறை வாரியாக பகுப்பாய்வு செய்து பார்க்கும் போது பல அம்சங்கள் தெளிவாகத் தெரிகின்றன. பயங்கரவாதம் போன்ற அதன் கட்டுப்பாட்டுக்கு அப்பாற்பட்ட காரணிகளும், அமைப்புரீதியான சில குறைபாடுகளும் சுழல் முறையில் வரும் சில பிரச்சினைகளும் பொருளாதாரத்தைப் பாதிப்புக்குள்ளாக்கி வருகின்றன. இச்சகல பிரதிகூலமான காரணிகளும் இப்பொழுது தனித்தும் கூட்டாகவும் பொருளாதாரத்தில் செயற்பட்டு வருவதன் காரணமாக பொருளாதார வளர்ச்சி மெதுவாக இருக்கும் அதே வேளையில் பொருளாதார முகாமை மிகக்கடினமான ஒரு

(22 பக்கம் பார்க்க)

## வெளிநாட்டு செய்தித் தொகுப்பு

# இந்தோனேஷியா பற்றிய உலக வங்கி குறிப்புக்கள்

விரிவடைந்து வரும் கடன் சேவை விகிதமும், நொய்ம் மையான சென்மதி நிலுவை நிலைமைகளும் பல வருடங்களுக்கு இந்தோனேஷியாவின் பொருளாதாரத்துக்கு தடங்கல்களாக இருக்கும் என்று உலக வங்கி அந்நாட்டுக்கு எச்சரிக்கை விடுத்துள்ளது. மொத்த ஏற்றுமதிகளில் கடன் கொடுப்பனவுகளின் விகிதம் 1986ல் 37 சதவீதத்திலிருந்து 1988ல் 41 சதவீதமாக அதிகரிக்கும் என வங்கி மதிப்பிட்டுள்ளது. இந்தோனேஷிய பொருளாதாரம் பற்றிய வங்கியின் இரகசிய அறிக்கையிலிருந்து சில பகுதிகளை எடுத்து "ஏசியன் வோல் ஸ்ட்ரீட் ஜர்னல்" வெளியிட்டுள்ளது. ''விவசாய கொள்கைகளில் பாரிய மாற்றங்கள் செய்யப்படுதல் வேண்டும்; நெல் உற்பத்திக்கு கூடிய முக்கியத்துவம் வழங்கும் நாட்டின் செலவு கூடிய முயற்சி பன்முகப்படுத்தப்பட்ட பணப்பயிர்களில் முனைப்பாக செயற்படுத்தப்பட வேண்டும்'' என வங்கி கேட்டுக் கொண்டுள்ளது.

''இந்தோனேஷியா, 1986ல் உலக எண்ணெய் விலை வீழ்ச்சிக்கு வெகு சீக்கிரத்தில் தன்னைச் சரிக்கட்டிக் கொண்டது. ஆனால், வரையறுக்கப்பட்ட வரவு செலவுத்திட்டம், மந்தமான வளர்ச்சி, அதிகரித்து வரும் கடன் செலுத்தல் சுமைபோன்ற பிரச்சினைகளைத் தம்மகத்தே கொண்ட சில வருடங்களை அது எதிர்நோக்கியிருக்கிறது'' நீடித்த எண்ணெய் விலை வீழ்ச்சிக்கு மத்தியில் பொருளாதாரத்தை தூண்டி விடுவதற்கும், ஏற்றுமதிகளை உயர்த்துவதற்கும், உற்பத்தியாளர்களைப் பிணித்து ஏற்றுமதியாற்றலை மட்டுப் படுத்தும் வர்த்தக, கைத் தொழில் ஏகபோகங்களை ஜகார்த்தா அகற்ற வேண்டுமென்ற அதன் முன்னைய வேண்டுகோள்களை உலக வங்கி மீண்டும் வலியுறுத்தியுள்ளது.

இந்தியாவுக்கு அடுத்ததாக வங்கியின் மிகப்பெரிய வாடிக்கை நாடாக இந்தோனேஷியாவே இருக்கிறது. கடந்த இரு தசாப்தங்களாக வங்கி இந்நாட்டுக்கு 1000 கோடி டொலர்களை கொடுத்திருப்பதுடன் தற்போதைய வருடாந்த உதவி 100 கோடி டொலர் அளவில் இருக்கிறது. ஏப்ரல் 1 ஆம் திகதி ஆரம்பமான 1987/88 நிதியாண்டுக்கு கடன் நிறுவனங்கள் 250 கோடி டொலர்களை வழங்க வேண்டுமென வங்கி சிபார்சு செய்கிறது. இது முன்னைய ஆண்டின் அதே அளவாகும். உதவி வழங்குபவர்கள் இந்தோனேஷியாவின் ஆபத்தான பொருளாதார நிலைமையைக் கருத்திற் கொண்டு, செய்திட்ட உதவி, ருபியா நிதிப்படுத்தல் என்ற விதத்தில் விசேஷ உதவிகளை வழங்க வேண்டுமென வங்கி கூறுகிறது.

இந்தோனேஷியா, 1980 களின் ஆரம்பத்திலிருந்து வீழ்ச்சியடைந்து வரும் உலக எண்ணெய் விலைகளுக்கு நல்ல முறையில் எதிர்விளைவுகளைக் காட்டியுள்ளது என வங்கி குறிப்பிடுகிறது. எண்ணெய் விலைகள் 1986ல் வீழ்ச்சியடைந்ததையடுத்து இந்தோனேஷிய அரசாங்கம் வரவு செலவுத்திட்டச் சிக்கனம், ருபியா பெறுமதியிறக்கம், இறக்குமதி லைசென்ஸ் கட்டுப்பாடுகளைத் தளர்த்தியமை போன்ற நடவடிக்கைகளை ''துரிதமாகவும் சமநிலை தளம்பாமலும்'' மேற்கொண்டதாக வங்கி குறிப்பிடுகிறது. தொடர்ந்த வரவு செலவுத் திட்டச் சிக்கனத்தையும், வரையறுக்கப்பட்ட நிதிகளின் திறமையான பாவனையையும் அது வலியுறுத்துகிறது. புதிய திட்டங்களை ஆரம்பிப்பதிலும் பார்க்க, சீரழிவு அபாயம் காணப்படும் பாதைகள் மற்றும் சமூக பொது முதலீட்டு வசதிகளைப் பராமரிப்பதில் அரசாங்கம் அதிக் அளவில் செலவிட வேண்டுமென அது மேலும் வேண்டுகோள் விடுக்கிறது.

கடன் சேவைக் கொடுப்பனவு விகிதத்தில் ஏற்பட்ட அதிகரிப்பில் பெரும் பகுதி அரசாங்கத்தின் கட்டுப்பாட்டுக்கு அப்பாற்பட்டதாக இருக்கிறது. செங்குத்தான எண்ணெய் விலை வீழ்ச்சி தவிர இந்தோனேஷியாவின் கடன் சுமை அதிகரித்தற்கு, யென், ஐரோப்பிய நாணயங்கள் என்பவற்றுக்கெதிராக டொலர் பெறுமதியிறக்கம் கண்டதே காரணம் எனக்கூறப்பட்டுள்ளது.

அதிகரித்து வரும் கடன் செலுத்தல்களும் எண்ணெய் ஏற்றுமதிகள் தொடர்பான இருள்சூழ்ந்த உடனடி எதிர்காலமும் இந்தோனேஷியாவின் சென்மதி நிலுவையில் சிக்கல்களைத் தோற்றுவிக்கும். எண்ணெய் அல்லாத ஏனைய ஏற்றுமதிகள் அதிகரித்து வந்தபோதிலும் குறுங்காலத்தில் அவை ஏதேனும் பயனளிக்குமா என்பது சந்தேகத்துக்குரியதே. மேலதிக இறக்குமதித் தடைகள் விதிக்கப்படாது அதேவேளையில், இறக்குமதிகள் கட்டுப்படுத்தப்பட வேண்டும். உயர்ந்த தீர்வைகள் அல்லது கட்டுப்பாடுகள் போன்ற தடைகள், அரசாங்கம், ஒரு திறந்த பொருளாதாரத்தைச் சிருஷ்டிப்பதற்கான அதன் கடப்பாட்டிலிருந்து விலகிச் செல்வதனையே காட்டும். இறக்குமதிக் கட்டுப்பாடுகள் நுகர்வுப் பொருட்களிலன்றி மூலதனப் பொருட்கள் மீதே உக்கிரமாக பிரயோகிக்கப்பட வேண்டுமென வங்கி கூறுகிறது.

எண்ணெய்ச் சந்தை உற்சாகமிழந்து காணப்படும் காலகட்டத்தில் வளர்ச்சியை உஷார்படுத்துவதற்கும், தொழில் வாய்ப்புக்களை உருவாக்குவதற்குமென எண்ணெய் அல்லாத பொருட்களின் ஏற்றுமதி தொடர்ச்சியாக அதிகரிக்கப்பட வேண்டும். பொருளாதார மீட்சிக்கென உறுதியான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படாவிட்டால் வேலையில்லாத் திண்டாட்டம் மிகக் கடுமையடையும் என வங்கி எச்சரித்துள்ளது. அரசாங்கம் ஊழியச் செறிவுமிக்க செய்திட்டங்களில் பொதுச் செலவுகளை அதிகம் முடக்க வேண்டும் என்றும், வீதியோர வியாபாரிகள், டாக்சி சாரதிகள், அதிக ஊழியத்தை ஈர்த்துக் கொள்ளும் முறைசாரா தொழில்முயற்சிகளில் ஈடுபட்டிருப்போர் ஆகியோர் குறித்து அது கருணை காட்டி நடந்து கொள்ள வேண்டுமென்றும் வங்கி வேண்டுகோள் விடுத்துள்ளது. தயாரிப்புத்துறையின் போட்டி ஆற்றலை விருத்தி செய்வதற்கும், ஏற்றுமதிகளை உயர்த்துவதற்குமென நாட்டின் வர்த்தக கைத்தொழில் கொள்கைகள் மீள ஒழுங்குபடுத்தப்பட வேண்டுமென முன்னைய இரு அறிக்கைகளிலும் விடுத்திருந்த வேண்டுகோளை வங்கி மீண்டும் வலியுறுத்திச்சொல்கிறது.

பொருளாதார மீட்சிக்கும், தொழில் வாய்ப்புக்களின் சிருஷ்டிப்புக்கும் விவசாயத் துறையின் தொடர்ச்சியான வளர்ச்சி அத்தியாவசியம் என வங்கி எடுத்துக் கூறுகிறது. நாட்டின் மொத்த சனத்தொகையான 16 கோடியே 50 லட்சம் பேரில் சுமார் 75 சதவீதமானோர் நாட்டுப்புறத்தில் வாழ்ந்தும், உழைத்தும் வருகிறார்கள். இப்பொழுது நெல்லுற்பத்தியில் சுய தேவைப் பூர்த்தி எய்தப்பட்டிருப்பதனாலும் வரவு செலவுத்திட்ட கஷ்டங்களினாலும் நெல்லுற்பத்தியை அதிகரிக்கச் செய்வது தொடர்பான அதன் கொள்கைகளை அரசாங்கம் மீள் பரிசீலனை செய்ய வேண்டுமென வங்கி கேட்டுக் கொள்கிறது. பல ஆண்டுகளாக உலகின் மிகப் பெரிய அரிசி இறக்குமதி நாடாக இருந்து வந்த இந்தோனேஷியா 1984ல் நெல்லுற்பத்தியில் சுய தேவைப் பூர்த்தி நிலையையடைந்தது.

பசளை, கிருமிநாசினிகள் போன்றவற்றுக்காக அரசாங்கம் பாரிய அளவிலான மானியங்களை வழங்கியுள்ளதென்றும் இதன் விளைவாக மிகக்குறைந்த ஏற்றுமதி ஆற்றல் கொண்ட நெல் துறையில் மிகை உற்பத்தி ஏற்பட்டுள்ளதென்றும் சுட்டிக் காட்டும் வங்கி, இம்மானியங்களை தொடர்ந்தும் வழங்கி வரமுடியாது என்றும் கூறுகிறது. அரசாங்க இலக்குகளின் பிரகாரமன்றி சந்தைத் தேவைகளுக்கேற்ப நாடு பயிர் பன்முகப்படுத்தலை மேற்கொள்ள வேண்டுமென அது கூறுகிறது. சீனியைப் பயிரிடுவதனால் இதோனேஷியாவுக்கு ஒப்பீட்டு ரீதியில் எந்த அனுகூலமும் இல்லாதிருக்கும் போது சீனி உற்பத்தியை அதிகரிப்பதற்காக இந்நாடு பாரிய செலவுகளை மேற்கொண்டு வருவதனை வங்கி கண்டித்துள்ளது. சீனி இறக்குமதிகள் கட்டுப்படுத்தப்பட்டிருப்பதனால் நுகர்வோர் சீனிக்கு உலகச் சந்தை விலையிலும் இரட்டிப்பு விலைகளைக் கொடுக்க வேண்டியுள்ளது.

இறப்பர், தாவர எண்ணெய் போன்ற மரப் பயிர்த்துறையில் இந்தோனேஷியா தனியார் முதலீடுகளை ஊக்குவிக்க வேண்டும் என்று கூறும் வங்கி அரச பெருந்தோட்டங்கள் திறமையற்றவை எனக் கருத்துத் தெரிவிக்கிறது. கோதுமை, தானியம், சோயா அவரை போன்றவற்றின் தேசிய, சர்வதேசிய சந்தைப்படுத்தலில் தேசிய வர்த்தக சபை குறைந்த கட்டுப்பாட்டினைப் பிரயோகிக்க வேண்டும் என்றும், பெருமளவிலான விவசாயத்துறை வியாபார நடவடிக்கைகள் தனியார் கம்பெனிகளினால் மேற்கொள்ளப்படவேண்டும் என்றும் கூறப்பட்டுள்ளது.

(20 பக்கத் தொடர்ச்சி)

பணியாக மாறியுள்ளது. கால நிலை மாற்றங்கள், பயங்கரவாத நடவடிக்கைகளின் விளைவுகள் போன்றவை குறித்து ஒன்றும் செய்ய முடியாது விடினும், சரியான பரிகாரத்திட்டங்களை அமுல் செய்வதன் மூலம் அமைப்பு ரீதியான பலவீனங்களை அகற்றிவிட முடியும். இந்நடவடிக்கை மேற்கொள்ளப்படாது விடின், நாட்டில் குழப்பங்கள் ஒழிந்து சகஜ நிலை திரும்பிவிட்டாலும் கூட பொருளாதாரம் ஒரு நிலையான அடிப்படையில் கணிசமான அளவுக்கு விருத்தியடையும் என எதிர்பார்க்க முடியாது. இனப் பிரச்சினை முற்றாக தீர்க்கப்பட்டாலும் பொருளாதாரத்தில் ஏற்படும் வளர்ச்சி எல்லைரீதியானதாகவே இருக்கும். மொத்த உள்நாட்டு உற்பத்திக்கு பங்களிப்புச் செய்யும் பிரதான துறைகளின் ஒருங்கற்ற வளர்ச்சிப் போக்குகள் பிரதிபலிக்கும் அமைப்புரீதியான பலவீனங்கள் நீக்கப்படாத விடத்து இவ்வளர்ச்சியைக் கூட நிலையாகப் பேண முடியாதிருக்கும்.

தொடர்ச்சியாக வரும் ஐந்தாண்டு முதலீட்டு நிகழ்ச்சித் திட்டங்கள் மூலம் இப்பொழுது பொருளாதார திட்டமிடல் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. 1977க்கு முன்னர் பின்பற்றப்பட்ட தேசிய திட்டமிடல் அணுகு முறையிலும் பார்க்க இம்முறை பல அனுகூலங்களைக் கொண்டிருந்த போதிலும் ஒரு குறிப்பிட்ட திட்டமிடல் முறையிலேயே முழு நம்பிக்கையையும் வைத்திருப்பது ஒரு வேளை விரும்பும் விளைவுகளை கொண்டு, வராது விடலாம். இத்திட்டமிடல் முறையில் பொருளாதார பௌதிக சொத்துக்களையும், சமூக பொதுமுதலீட்டு வசதிகளையும் பலப்படுத்துவதில் அதிக கவனம் செலுத்தப்படுகிறது.

## தேங்காய் உற்பத்தி வீழ்ச்சி

தெங்கு உற்பத்தியில் 1985, 1986 ஆகிய ஆண்டுகளில் தொடர்ந்து இடம்பெற்று வந்த அதிகரிப்புக்கள் 1987-ன் முதற் காலாண்டில் ஸ்தம்பிதமடையத் தொடங்கின. தெங்கு உற்பத்திப் பிரதேசங்களில் 1986-ன் இறுதிப் பகுதியிலும், 1987-ன் ஆரம்பத்திலும் நிலவிய வறட்சி நிலைமையே உற்பத்தியைப் பாதித்த காரணியாகும். 1986ல் 304.1 கோடி தேங்காய்கள் உற்பத்தி செய்யப்பட்டன. இது இதுவரை கால சாதனை மட்டமாகும். ஆனால், 1986 ஜனவரி-மார்ச் காலப் பகுதியில் 45,070 மெட்ரிக் தொன்களாக இருந்த தேங்காயெண்ணெய் உற்பத்தி 1987-ன் இதே காலப்பகுதியில் 24,055 மெட்ரிக் தொன்களாக வீழ்ச்சியடைந்தது. எனினும், தேங்காய்த்துருவல் உற்பத்தியில் ஒரு சிறு அதிகரிப்பு (1986-ன் முதல் மூன்று மாதங்களில் 13022 மெ. தொ.; 1987-ன் இதே காலத்தில் 14,059 மெ. தொ.) காணப்பட்டது.

தெங்குப் பொருட்களின் ஏற்றுமதி அளவானது, ஒரு குறிப்பிட்ட காலப்பிரிவில் இவ்வுற்பத்திகளின் பரிமாணத்தையும், கிடைக்கும் தன்மையையும் எடுத்துக் காட்டும் பொதுவான குறிகாட்டியாகும். 1987-ன் முதற் காலாண்டில் தெங்குப் பொருட்களின் ஏற்றுமதிப் பெறுமதி 1986-ன் முதற் காலாண்டின் ஏற்றுமதிப் பெறுமதியை விடவும் 51 சதவீதம் குறைவாக இருந்தது. காய் அளவுகளில் இது 1986 ஜனவரி-மார்ச் காலப் பிரிவில் 37 கோடி 29 லட்சம் காய்களாகவும், 1987 ஜனவரி-மர்ச்சில் 18 கோடி 26 லட்சம் காய்களாகவும் இருந்தது. முன்னைய ஆண்டின் இக்காலப்பகுதியில் 56 கோடி 5 லட்சம் ரூபாவாக இருந்த ஏற்றுமதிப் பெறுமதி இவ்வாண்டின் முதற் காலாண்டில் 40 கோடி 58 லட்சம் ரூபாவாக-27 சதவீதத்தால்—வீழ்ச்சியடைந்தது. 1986 ன் முதற் காலாண்டில் ரூ. 1.50 ஆகவிருந்த காய் ஒன்றின் சராசரி (ஏற்றுமதி) பெறுமதி 1987-ல் ரூ. 2.22 ஆக அதிகரித்திருந்தது

1986-ன் முதற் காலாண்டில் 12,883 தொன்களாகவிருந்த தேங்காய்த்துருவல் ஏற்றுமதி 1987-ன் முதற் காலாண்டில் 14,240 மெ. தொன்களாக அதிகரித்து அதிக சம்பாத்தியங்களைக் கொண்டு வந்தது. மெட்ரிக் தொன் ஒன்றின் பெறுமதியும் ரூ. 15,451 இலிருந்து ரூ. 17,881 ஆக அதிகரித்திருந்தது. சம்பாத்தியங்களில் ஏற்பட்ட அதிகரிப்பு 28 சதவீதமாகும்.

தேங்காய் எண்ணெய் ஏற்றுமதிகள் 1987 ஜனவரி-மார்ச் காலப்பிரிவில் அளவிலும் பெறுமதியிலும் கடுமையான வீழ்ச்சியினை அனுபவித்தன. சுப்பற்றளம் வரையிலான சராசரி விலைகள் கணிசமான அளவு அதிகரிப்பினைக் காட்டின. குறிப்பாக 1986 ஜன.-மார்ச் காலப்பிரிவில் ஒரு மெ. தொ. ரூ. 10,420 ஆக இருந்த பீப்பாக்களில் அடைக்கப்பட்ட தேங்காய் எண்ணெயின் விலை, 1987 ஜன-மார்ச் காலப்பிரிவில் ரூ. 14,724 ஆக அதிகரித்திருந்தது. ஐக்கிய அமெரிக்கா, கனடா ஆகிய நாடுகள் பிரதான தேங்காய் எண்ணெய் கொள்வனவு நாடுகளாக விளங்கின. மேற்கு ஜேர்மனி ஒல்லாந்து, ஐக்கிய இராச்சியம் ஆகிய நாடுகள் பிரதான தேங்காய் துருவல் கொள்வனவு நாடுகளாக இருந்தன.

1986-ன் முதற் காலாண்டில் 73.1 கோடி ரூபாவாக இருந்த சகலவிதமான தெங்கு உற்பத்திப் பொருட்களினதும் ஏற்றுமதி வருமானம் 1987ன் இதே காலப் பகுதியில் 66.7 கோடி ரூபாவாக – 10 சதவீதத்தால் — வீழ்ச்சியடைந்தது.

### தெங்கு உற்பத்தி ஏற்றுமதிகள்

(ஒவ்வொரு வருடமும் ஜன. - நவம்பர்)

| | ஏற்றுமதி அளவு | | | | | | பெறுமதி (ரூ. பத்து லட்சம்) | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | 1984 | மாற்றம் % | 1985 | மாற்றம் % | 1986 | மாற்றம் % | 1984 | மாற்றம் % | 1985 | மாற்றம் % | 1986 | மாற்றம் % |
| 1. தேங்காய் எண்ணெய் (மெ. தொ.) | 7,506 | -77 | 60,386 | 704 | 84,238 | 39 | 247 | -46 | 878 | 255 | 700 | -20 |
| 2. தேங்காய் துருவல் (மெ. தொ.) | 26,456 | -34 | 47,175 | 78 | 56,429 | 19 | 954 | 07 | 1215 | 27 | 788 | -35 |
| 3. கொப்பரா (மெ. தொ.) | 2,030 | -43 | 7,205 | 255 | 8,923 | 24 | 60 | -08 | 96 | 60 | 81 | -16 |
| 4. காய்கள் (பத்து லட்சம்) | 3.7 | -35 | 8.8 | 131 | 16.1 | 84 | 24 | 16 | 34 | 40 | 48 | 42 |
| 5. விதைக் காய்கள் (பத்து லட்சம்) | .1 | - | .1 | - | - | - | 3 | | 2 | 46 | - | - |
| 6. தென்னம் புண்ணாக்கு (மெ. தொ.) | - | - | 23,705 | - | 40,080 | 69 | - | | 51 | | 109 | 11 |
| 7. தென்னம் சாறு (மெ. தொ.) | - | - | 275 | - | 100 | -64 | - | | 9 | | 2 | -72 |
| மொத்தம் | 254 | -54 | 848 | 235 | 1,118 | 32 | 1,288 | -09 | 2280 | 77 | 1,728 | -24 |

ஆதாரம்: தெங்கு அபிவிருத்தி அதிகார சபை

# உள்நாட்டு மீன் உற்பத்திப் பற்ருக்குறையை நிவர்த்தி செய்வதற்கான சர்ச்சைக்குரிய வழிகள்

லால் டி அல்விஸ்
(மக்கள் வங்கி, ஆராய்ச்சிப் பகுதி)

1984/85ம் ஆண்டில் உள்நாட்டு மீனுற்பத்தி திடீரெனக் குறைந்ததனுல் சந்தையில் மீனுக்கு அடிக்கடி தட்டுப்பாடு ஏற்பட்டது. ஆதலால் நுகர்வு மட்டத்தை உயர்த்துவதற்கும் விலைகளைக் குறைக்க உதவும் பொருட்டும் சந்தைக்கு மீன் வழங்குவதற்கான மாற்று வழிகள், வளங்கள் பற்றி கொள்கைத் திட்டமிடுவோரின் கருத்துக்கள் கோரப்பட்டன. இக்கட்டத்தில் பல்வேறு குழுக்கள் பின்வரும் ஆலோசனைகளைத் தெரிவித்தன:-

(அ) இலங்கைக் கடலில் வெளிநாட்டு இழுவலை மீன்பிடிப் படகுகளை அனுமதித்தல்;

(ஆ) புட்டியிலடைத்த மீன்களையும், புது மீன்களையும் இறக்குமதி செய்தல்;

(இ) தற்போதுள்ள உள்நாட்டு மீன்பிடிப் படகுத் தொகுதியை விரிவாக்கல்.

இலங்கை மீன்பிடித் தொழிலின் பெரும் பகுதி சிறு கரையோர மீனவர் கைகளிலேயே உள்ளது. இவர்கள் தொழில்நுட்ப ரீதியில் திருத்தமடையாத முறைகளைக் கொண்டு சிறு படகுத் தொகுதிகளைக் கொண்டு மீன் பிடிக்கின்றனர். இம்மீனவர்கள் தமக்கே உரிய பிரத்தியேக பொருளாதார வலயத்திற் காணப்படும் வளங்களில் ஒரு சிறு பகுதியைத்தானும் பயன்படுத்தக் கூடியவர்களல்ல. இந்நிலைமை பல வளர்முக நாடுகளிற் காணப்படுகிறது. ஆதலால் இவர்கள் தொழினுட்ப ரீதியில் அதிக முன்னேற்றமடைந்த பன்னாட்டு நிறுவனங்களால் கிரமமாகச் சுரண்டப்படுகின்றனர். அத்துடன் அந்நிறுவனங்களுக்குச் சமனான உள்நாட்டு நிறுவனங்களும் முதலீட்டுத் திட்டங்கள், கூட்டு முயற்சிகள், உதவித் திட்டங்கள் என்பவற்றின் மூலம் இவர்களைச் சுரண்டுகின்றன.

### வெளிநாட்டு இழுவலை மீன்பிடித் தொழில்

இலங்கையிற் தற்போது மீன் உற்பத்தியில் காணப்படும் இடைவெளி காரணமாக உள்ளூர்த் தேவை முழுவதையும் நிறைவேற்றுவது சாத்தியமாக இல்லை. இதன் விளைவாக உள்நாட்டு மீன் சந்தையில் சில்லறை விலை உயர்ந்துள்ளது. உள்நாட்டில் வேலையில்லாதிருப்போருக்கு வேலைவாய்ப்பு அளிக்குமுகமாகவும், மீனுக்குத் தட்டுப்பாடு ஏற்படும் காலங்களில் பயன்படுத்துவதற்கு கையிருப்பை அதிகரிப்பதற்காகவும், கரையிலிருந்து 25 முதல் 200 மைல்வரை ஆழ்கடலில் மீன் பிடிப்பதற்கான கூட்டுத் திட்டங்களை அமுல் நடத்த கடற்ரெழில் அமைச்சு 1977 ல் வெளிநாட்டு இழுவலை மீன்பிடி கம்பனிகளுக்கு அனுமதியளித்தது.

உடன்பாட்டு நியதிகளின்படி கடலுரிமைத் தொகையொன்று அரசாங்கத்திற்கு வழங்கப்பட வேண்டும்; அத்துடன் பிடிக்கப்பட்ட மொத்த மீனில் 40 சதவீதமானது, உடன்பட்ட விலைக்கு கடற்ரெழிற் கூட்டுத்தாபனத்துக்கு அளிக்கப்பட வேண்டும். உள்நாட்டுச் சந்தையின் சுவைக்கேற்ற மீன்வகைகளைத் தெரிவு செய்வதற்குக் கூட்டுத்தாபனத்துக்கு அதிகாரமுண்டு. கொடுப்பனவு இலங்கை ரூபாவில் செய்யப்படும்.

சிங்கப்பூர், ஹொங்கொங், யப்பான் ஆகிய நாடுகளைத் தளமாகக் கொண்ட கம்பெனிகள் 1978ல் இழுவலை மீன்பிடித்தலை ஆரம்பித்தபின் கரையை அடுத்துள்ள கடலில் மீன்பிடித்தல் (உள்நாட்டு மீனவர்களுக்கென ஒதுக்கப்பட்ட 25 மைலுக்குள்), உள்நாட்டு வளங்களைக் கடத்தல் போன்ற மூல ஒப்பந்த சாத்துகள் மீளப்படுவது தொடர்பான முறைப்பாடுகள் செய்யப்பட்டன. 1970 தொடரின் இறுதிப் பகுதியில் அதிகாரமின்றி மீன் பிடித்தலில் ஈடுபட்ட சில தாய்வான் மீன்பிடிக்கப்பல்கள் இலங்கையில் கைப்பற்றப்பட்டு பிடிக்கப்பட்ட மீன்கள் பறிமுதல் செய்யப்பட்டன. அரசாங்கம் தொடக்கத்தில் விதித்த நிபந்தனைகளைச் செயல்படுத்துவதில் ஏற்பட்ட சங்கடங்கள் காரணமாக எதிர்பார்க்கப்பட்ட வெற்றி கிட்டவில்லை. ஆதலால், இத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டு சிறிது காலத்தில் இடைநிறுத்தப்பட்டது. சிலகாலமாக வேறு திட்டங்கள் அங்கீகரிக்கப்படவில்லை.

இரு நூறு கடல் மைல் பிரத்தியேகப் பொருளாதார வலயம் அபிவிருத்தியடைந்து வரும் பல நாடுகளுக்குப் பாதுகாப்பு அளித்

அட்டவணை 1
காலாண்டுவாரியாக மீனுற்பத்தி 1984-1985
(மெட்ரிக் தொன்)

| காலம் | 1984 1ம் காலா | 1984 2ம் காலாண்டு | 1984 3ம் காலா | 1984 4ம் காலா. | 1985 1ம் கால. | 1985 2ம் கா. | 1985 3ம் கா | 1985 4ம் கா. |
|---|---|---|---|---|---|---|---|---|
| மீன் உற்பத்தி மெட். தொன் | 52,280 | 37,410 | 40,418 | 36,572 | 30,816 | 36,595 | 48,650 | 51,995 |

மூலம்; கடற்ரெழில் அமைச்சு.

திருப்பதுடன் தனியுரிமையும் சட்ட உரிமையும் அளித்துள்ளது. இதன்படி இந்நாடுகள் தம் கரையிலிருந்து 200 மைல் வரையுள்ள கடலில் உள்ள உயிர்வாழும் வளங்களை ஆராயவும் பயன்படுத்தவும் முடியும். இந்நாடுகள், பொருளாதார வலயங்களைத் தொழில் நுட்பத்துறையில் பெருமுன்னேற்றமடைந்த நாடுகள் ஊக்டுருவுவதிலிருந்து பாதுகாக்கின்றன. அதேவேளையில் தென்கிழக்கு ஆசிய நாடுகளின் அரசாங்கங்கள், பின்வரும் நோக்கங்களுக்காக கடற்றொழில் மீது அதிக கவனஞ் செலுத்துகின்றன:

(அ) உள்நாட்டில் உற்பத்தி செய்யப்படும் புரதச்சத்து வழங்கலை அதிகரித்தல்;

(ஆ) மீன் ஏற்றுமதி மூலம் கூடிய வெளிநாட்டுச் செலாவணியைப் பெறுதல்.

இப்போக்கினைப் பயன்படுத்தி, யப்பான், தாய்வான், கொரியா ஆகிய நாடுகள், இப்பகுதிகளில் தம் நடவடிக்கைகளைப் பல்வேறு வழிகளில் விஸ்தரிப்பதற்கு முயற்சி செய்கின்றன. இந்நாடுகள் மீன் வளங்களைக் கள்ளத்தனமாக அபகரிக்கவும், மீன்பிடி உரிமையை விலைக்கு வாங்கவும் செய்துள்ள முயற்சிகள் பல சந்தர்ப்பங்களில் வெளியாகியுள்ளன. பாரிய தொழிற்சாலைக் கலங்கள், மூன்றும் உலக ஆள்புலக் கடற் பிரிவுகளில் சிறந்த மீன்வளத்தைத் தேடி உலாவுகின்றன; இவ்வளங்களை இவை மீண்டும் மூன்றும் உலக நாடுகளுக்கே பதனிடப்பட்ட அல்லது கெடாமல் பாதுகாக்கப்பட்ட உருவில் விற்பனை செய்கின்றன. இதனால் இந்நாடுகள் தமது இயற்கை வளங்களை வாங்குவதற்கு பெருந் தொகையான வெளிநாட்டுச் செலாவணியைச் செலவிட வேண்டியுள்ளது.

பிற நாடுகளில் யப்பான் மீன்பிடித்துறையில் ஆர்வம் காட்டுவதற்கான நோக்கத்தை விளக்குகையில், ''தெய்நிப்பொன் சுயிசங்காய்'' என்ற தனியார் துறைக் கடற்றொழில் கம்பெனிகள் சங்கம் ''விற்பனை உரிமைகளைப் பெறுவதற்காக'' கூட்டு மீன்பிடி முயற்சிகளை உருவாக்கியிருப்பதாகக் கூறுகிறது. அச்சங்கத்தின் வெளியீடு ஒன்றில், மூன்றும் உலக நாடுகளில் கூட்டு முயற்சிகளைத் தோற்றுவிப்பதற்கான நோக்கம் பின்வருமாறு தெளிவாகக் கூறப்பட்டுள்ளது:

(1) தொழிலாளர் பெருந்தொகையில் மலிவாகக் கிடைக்கின்றனர்; ஆனால் உற்பத்தி குறைவு;

(2) போதியளவு போக்குவரத்து வசதியில்லையாயினும் போக்குவரத்துச் செலவு குறைவு;

(3) இலகுவாகவும் மலிவாகவும் காணிகளைப் பெற்றுக் கொள்ளலாம்;

(4) சூழல் பிரச்சினைகளும் அது பற்றிய சட்டங்களும் யப்பானில் போலக் கண்டிப்பானவையல்ல;

(5) பயன் படுத்தப்படாத, அபிவிருத்தி செய்யப்படாத வளங்கள் ஏராளம்;

(6) கடல் உற்பத்திப் பொருட்களின் பல்வகை இறக்குமதி/அபிவிருத்தி.

அத்துடன் யப்பானில் அரசாங்கமும் அதன் கடல் கடந்த கடற்றொழில் அபிவிருத்தி அல்லது உதவி தொடர்பான கொள்கையின் மூலம் இத்துறையில் சுறுசுறுப்பாக இயங்குகிறது. அதன் புது உபாயம் தொழில்மயப் படுத்தப்படாத மூன்றும் உலக நாடுகளில் யப்பானிய கம்பெனிகளைக் கொண்டு மீன்பிடித்தலை ''அபிவிருத்தி'' செய்வதையும் அதற்குப் பகரமாக, கூடுதலாகப் பிடிக்கப்படும் மீனை "இறக்குமதி'' செய்தலையும் உள்ளடக்கியதாகும். இது பின்வருவனவற்றின் மூலம் செயல்படுத்தப்படுகிறது.

(அ) அபிவிருத்தியடையும் நாடுகளுடனான கூட்டு முயற்சிகள்;

(ஆ) அபிவிருத்தியடையும் நாடுகளுடன் கொள்வனவு ஒப்பந்தங்கள்;

(இ) மீன்பிடி உரிமைகளுக்குக் கொடுப்பனவுகள்.

1978ல் கூட்டுமுயற்சிகள் முக்கியமாக இந்தோனேஷியாவுடன் இணைந்து மேற்கொள்ளப்பட்டன. இதன் விளைவுகள் இந்தோனேஷிய கடற்றொழில் அபிவிருத்திக்குச் சாதகமாக அமையவில்லை. உள்நாட்டு மீனவர்களுக்கும் வெளிநாட்டுக் கம்பெனிகளுக்குமிடையில் தகராறுகள் தோன்றின. அந்நாட்டின் ஆள்புலக் கடல் வளங்கள் குறையத் தொடங்கியமையால் உள்நாட்டு மீன்வர் பாதிக்கப்பட்டனர். அது மட்டுமன்றி உள்நாட்டில் மீன் விலைகள் அதிகரித்ததனாலும் வெளிநாட்டு உற்பத்திப் பொருட்களின் இறக்குமதியாலும் உள்நாட்டு நுகர்வோர் பாதிக்கப்பட்டனர். பாரிய கூட்டு முயற்சிகளினால், பொதுமக்களுக்கு மலிவாகக் கிடைக்கத்தக்க புரதம் எவ்வாறு மட்டுப்படுத்தப்படுகிறது. என்பதற்கும் இது தகுந்த உதாரணமாகும். இத்தகைய போக்குகள் 1970 தொடரில் இலங்கையிலும் காணப்பட்டன.

சர்வதேச கடற்றொழில் பொருளாதார வர்த்தகக் கழகத்தின் செய்தி இதழ் பிரான்சில் காணப்படும் நிலைபற்றிக் குறிப்பிடுகையில், கடற்றொழிலில் தொழில்நுட்ப இடமாற்றத்தில் பிரான்சின் நிலை உறுதியற்றது என்றும் அதனால் பின்வரும் விளைவுகள் ஏற்பட்டுள்ளன என்றும் கூறுகிறது:

1. கடலுணவுப் பொருட்களுக்கும் தொழிநுட்ப அறிவுக்கும் பிரான்ஸ் பெரும்பாலும் வெளிநாடுகளை நம்பியிருக்கிறது. அதன் உலகளாவிய பொருளாதாரக் கொள்கையானது, இவ்வாறு பிற நாடுகளில் தங்கியிருப்

பதைக் குறைக்க - குறிப்பாக இறக்குமதிகளின் அளவையும் பெறுமதியையும் குறைக்க - முனை கிறது. கடற்றெழில் துறை இதற்கு விதிவிலக்காகத் தென்படவில்லை. பிரான்சிய அரசாங்கம் சர்வதேச கடற்றெழில் முறையில் தனக்குள்ள ஈடுபாட்டைக் குறைத்துக்கொள்ள முயற்சி செய்கிறது.

2. மறுபுறம், பிரெஞ்சு மீன்பிடிக் கப்பல்கள் அதன் ஐ. பொ. வலயத்திற்கு வெளியிலேயே செயலாற்றுகின்றன. குறிப்பாக மூன்றும் உலக ஆபிரிக்கா, இந்து சமுத்திர வலயங்களில் தூனு, இருல் ஆகியவற்றைப் பிடிக்கின்றன. பிரெஞ்சுக் கொள்கை சர்வதேசக் கடற்றெழில் முறையில் அதன் ஈடுபாட்டைப் பேணுவது அல்லது அதிகரிப்பதாகும்.

3. குறிப்பாக பிரான்ஸ் மீன் வழங்கலைப் பொறுத்தவரை ஓர் இக்கட்டான நிலையிலிருக்கிறது. அதனுல் அந்நாடு எப்பொழுதும், அதன் மீன்பிடிக் கப்பல் தொகுதிகள் மீன்பிடிப் பிரதேசங்களுக்குச் செல்வதற்கான ஒப்பந்தங்களைச் செய்துகொள்வதில் கண்ணுங் கருத்துமாக இருக்கிறது.

மேலும், கைத்தொழில் நாடுகளின் கடற் பிரதேசங்களின் மீன் வளம் குறைந்து விட்டமையாலும், அவற்றின் விருத்தியடைந்த தொழினுட்பம் நிதிவளம் ஆகியவற்றுலும் எப்பகுதியிலும் மீன்பிடிக்க உற்சாகம் பெறுகின்றன. இதன் விளைவாக அபிவிருத்தியடைந்த நாடுகளின் மீன்பிடிக் கப்பல்கள், வறிய மூன்றும் உலக நாடுகளின் ஆள்புலத்துக்குரிய கடற் பிரதேசங்களில் மீன்பிடிக்கின்றன. பெரும்பாலான நாடுகள் இரண்டாம் உலகப் போருக்குமுன் அவற்றின் கரைகளை அடுத்துள்ள கடல்களில் மீன் பிடித்தன. ஆனுல் போருக்குப் பிந்திய காலத்தில் பெரும் மாற்றங்கள் நிகழ்ந்தன. கைத்தொழில் நாடுகளுக்குச் சொந்தமான பெருங் கப்பல் தொகுதிகள் சமுத்திரங்களில் மீன்பிடிக்கத் தொடங்கின. சர்வதேசக் கடல்களில் மிகச் செய்மையான இடங்களில் நடைபெற்ற இம்மீன்பிடித்தல் காரணமாக அந்நாடுகளுக்கும் இலங்கைபோன்ற சிறிய வறிய நாடுகளுக்குமிடையே போட்டி ஏற்பட்டது. பல நாடுகளில் கரையோர மீனவர்கள் பொருளாதாரத்தில் பின்னடைந்தவர்களாகக் காணப்பட்டனர். இவர்கள் மீது அபிவிருத்தியடைந்த நாடுகளின் தொழினுட்பம் ஆதிக்கம் செலுத்துகிறது.

''பார் ஈஸ்டர்ன் இகொனெமிக் ரிவியு'' என்ற சஞ்சிகையில் பாகிஸ்தானிற் காணப்படும் நிலை பற்றிக் கருத்துத் தெரிவிக்கையில் முஹம்மத் அஃப்தாப் பின்வருமாறு கூறுகின்றூர். ''தொழினுட்பப் பின்னடைவும் மூன்றும் உலக நாடுகளுக்குப் பொதுவான இதர பிரச்சினைகளும் பாகிஸ்தான் ஆள்புலத்துக்குரிய கடற் பிரதேசங்களை குறிப்பாக சிங்கப்பூர், தென் கொரியா, வட கொரியா, தாய்வான் ஆகிய நாடுகளின் மீன்பிடி முகர்வர் நிலையங்களுக்குத் திறந்துவிட்டுள்ளன. இவை கூட்டு முயற்சிகள் மூலம் இக்கடல்களின் வளங்களைப் பயன்படுத்துகின்றன. வெளிநாட்டுக் கம்பெனிகள் மூலதனமும் தொழினுட்பமும் வழங்க, பாகிஸ்தான் அரசாங்கம் கூட்டு மீன்பிடி முயற்சிகளைத் தொடங்குவதற்கு உத்தரவுப் பத்திரம் வழங்குகிறது. ஆனுல், பாகிஸ்தானின் தொழினுட்ப, நிதி பின்தங்கல் காரணமாக, வளங்களின் பெரும்பகுதியை வெளிநாட்டுக் கம்பெனிகள் பயன்படுத்தக்கூடிய நிலை தோன்றியுள்ளது. வெளிநாட்டு மீன்பிடிக் கப்பல்கள், கூட்டு முயற்சி தொடர்பான நிபந்தனைகளை மீறுவதாகக் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது. குறிப்பாக, பாகிஸ்தான் மீனவர்களுக்கென ஒதுக்கப்பட்டுள்ள 35 மைல் கரையோரத்தையடுத்த கடற் பிரதேசத்தில் இக் கப்பல்கள் மீன்பிடிப்பதன் மூலம் நிபந்தனைகள் மீறப்படுகின்றன. பாகிஸ்தான் அரசாங்கம் தற்போது கடல் வளங்களை அத்துமீறிப் பெறுவது தொடர்பாகக் கவனஞ் செலுத்தி இதைத் தடுப்பதற்குச் சமீபத்தில் சட்டமியற்றியது. இவ்வனுபவங்களைக் கவனத்திற் கொண்டு வெளிநாட்டுக் கம்பெனிகளுடன் இணைந்து வளங்களைப் பயன்படுத்துவதில் எச்சரிக்கையாக இருப்பதவசியம். ஏனெனில் ஒப்பந்தங்களிற் காணப்படும் நிபந்தனைகளும் நோக்கங்களும் மூன்றும் உலக நாடுகளுக்குச் சாதகமாகச் செயல்படுத்தப்படுவதில்லை.''

எனவே, அந்நிய நாடுகளுடன் இணைந்து இழுவலை மீன்பிடித்தலை நடத்துவதானது அந்நாடுகளுக்கு எமது மீன்பிடி கடற்பிரதேசங்களில் அந்நாடுகள் இலகுவாகப் பிரவேசிக்கும் நிலையை ஏற்படுத்தும் என்பதையும், இது மீன்பிடிப்பதில் முன்னணியிலிருக்கும் நாடுகளுக்குச் சாதகமாக அமையும் என்பதையும் நாம் அறிந்திருத்தல் அவசியமாகும். அத்தகைய சந்தர்ப்பங்களில் கூட்டு முயற்சிகளுக்கு உத்தரவுப் பத்திரம் வழங்கல், அத்துமீறி மீன் பிடிப்பதற்கு அதிகாரமளிப்பதற்குச் சமனுகும். இது கரையையடுத்துள்ள கடல்களில் மீன்பிடிக்கும் நாடுகளுக்கு ஆபத்தாகவும் முடியலாம். இதனுல் கடற்பிரதேச, பொருளாதார சமூகச் சமநிலையும் குலைக்கப்படலாம். ஆகையால் இத்தகைய திட்டங்களை ஆரம்பிக்குமுன் இவற்றுல் மூல நாடுகளுக்கு ஏற்படும் சாதக பாதகங்களை நன்கு சீர்தூக்கிப் பார்த்தல் அவசியமாகும். மேலோட்டமாகப் பார்க்கையில் பெரும்பாலான வெளிநாட்டுக் கூட்டு முயற்சிகளின் நோக்கம் மூன்றும் உலக நாடுகளின் மீன்பிடித்துறையை அபிவிருத்தி செய்வதற்கு உதவி வழங்குவதாகத் தோன்றினுலும், உண்மையில் நடப்பது என்னவெனில் அந்நாடுகளுக்குக் கடலுணவு வழங்குவதில் சம்பந்தப்பட்ட கம்பெனிகள் சிறந்த நிலையை வகிப்பதாகும்.

மீன் இறக்குமதிகள்

உள்நாட்டு மீனுற்பத்தி, சிபாரிசு செய்யப்பட்ட தலைக்குரிய மீன் தேவையைப் பூர்த்தி செய்யத்தக்கதாக இல்லாததனுல் அடுத்தடுத்து வந்த அரசாங்கங்கள், பல்வேறு மீனுணவுப் பொருட்களையும் மீன்களையும் இறக்குமதி செய்வதற்கு அனுமதியளிக்க நிர்ப்பந்திக்கப்பட்டு வந்துள்ளன. 1984 நவம்பர் முதல் 1985 மே வரையான காலப் பிரிவில் இலங்கையின் வடக்கு, கிழக்குக் கரையோரங்களில் மீனுற்பத்தி குறைந்ததனுல், மீன் விலைகள் கடுமையாக உயர்ந்தன. இந்நிலை மீன் இறக்குமதி செய்யும் கொள்கைக்கு மேலும் உற்சாக மூட்டியது. வழக்கமாகக்

அட்டவணை 2

இறக்குமதி செய்யப்பட்ட மீன்/மீனுற்பத்திப் பொருட்களின் மொத்தப் பெறுமதி

(ரூ. பத்துலட்சம்)

| வருடம் | பெறுமதி | அளவு தொன் |
|---|---|---|
| 1977 | 19.9 | 5,135 |
| 1978 | 33.9 | 5,113 |
| 1979 | 139.4 | 18,495 |
| 1980 | 297.9 | 22,285 |
| 1981 | 108.8 | 6,905 |
| 1982 | 317.8 | 13,595 |
| 1983 | 345.1 | 16,780 |
| 1984 | 619.8 | 28,243 |

கூடுதலாக மீன்பிடிக்கப்படும் பருவகாலத்தில் மேற்கு, தெற்குக் கரையோரங்களில் பெருமளவில் மீன் கிடைத்ததனுல் மீன் பற்றுக்குறை நிலைமையில் மாற்றமேற்பட்டது. இப்பருவகாலத்தில் மீன் வியாபாரிகள் ஒரு கிலோ மீனை 3 முதல் 12 ரூபாவரை விலைக்கு வாங்கி நுகர்வோருக்கு 20 - 30 ரூபாவுக்கு மேற்பட்ட விலைக்கு விற்றனர். எனவே உற்பத்தியாளர் மட்டத்தில் விலை குறைந்தாலும் சில்லறை வியாபாரி நுகர்வோரிடம் அறவிடும் விலையை வெகுவாகக் குறைப்பதில்லை.

எனவே இலங்கை மீன்பிடித் தொழிலின் அளவையும் நிலையையும் கருத்திற் கொண்டு பார்க்கையில் இறக்குமதி என்பது ஒரு தீர்க்கமான/முக்கியமான அம்சமாகும். ஏனெனில் இறக்குமதிக் கொள்கையும் தீர்வை வீதமும் உள்நாட்டு மீன்பிடித் தொழிலுக்கான சந்தையில் செல்வாக்குச் செலுத்தலாம்; இச் செல்வாக்கு இத்தொழிலுக்குப் பயனுள்ளதாகவோ பாதகமானதாகவோ அமையலாம். எனவே நாட்டின் மீன்பிடித் தொழிலின் இன்றைய சூழல் நிலையைப் பின்னணியாகக் கொண்டு இறக்குமதி பற்றிய தீர்மானத்தைப் பகுப்பாய்வு செய்தல் முக்கியமானதாகும். உதாரணமாக, இறக்குமதித் தீர்வைகள் குறைக்கப்பட்டால் இறக்குமதி செய்யப்பட்ட புது மீன்களின் விலை உள்நாட்டு மீன் விலையைவிடக் குறையலாம். இதனை நுகர்வோரும் வரவேற்பர். இக்கொள்கை இறக்குமதி செய்த மீன்கள் இந்நாட்டுச் சந்தைகளில் ஆதிக்கம் செலுத்தும் நிலையைத் தோற்றுவிக்கலாம். இதனுல் உள்நாட்டு மீன்பிடித் தொழிலின் அபிவிருத்தி பாதிக்கப்படலாம். அதிர்ஷ்டவசமாக உள்நாட்டு மீன் விலை இறக்குமதி செய்யப்பட்ட மீனின் விலையை விடக் குறைந்ததாகவே இருந்து வந்துள்ளது. அதனுல் உள்நாட்டு மீன்பிடித் தொழில் பாதிக்கப்படவில்லை.

1985 தொடக்கத்தில் உள்நாட்டுப் பத்திரிகைகளில் வெளியிடப்பட்ட செய்திகள் சில்லறை வியாபாரச் சந்தைகளில் மீன் கூடிய விலைக்கு விற்கப்படுவதை வலியுறுத்தின. உற்பத்தியாளர்களான மீனவர்களுக்கு அளிக்கப்படும் குறைந்த விலைபற்றி எதுவும் கூறப்படவில்லை. அத்துடன் உயர்ந்த மீன் விலைகள்பற்றி கடற்றெழில் அமைச்சுக்கு முறைப்பாடுகளும் செய்யப்பட்டன. இத்தகைய நெருக்குதல்கள் காரணமாகக் கடற்றெழில் அமைச்சு, தகரத்திலடைத்த மீனுக்கான சுங்கவரியை 5 சதவீதத்தால் குறைக்கும்படியும், 55 வீத தீர்வை அடிப்படையில் 2,000 தொன் விறைத்த/புதிய மீன்களை இறக்குமதி செய்ய அனுமதிக்கும்படியும் நிதி அமைச்சைக் கேட்டது. இதனுல் உள்நாட்டுச் சந்தைகளில் இறக்குமதி செய்த மீன்கள் வந்து குவிந்திருக்கலாம். இவ்வாறு கேட்கப்பட்டதன் நோக்கம் மலிவான போட்டி விலைகளில் போதியளவு மீன் கிடைக்கச் செய்வதாகும். போட்டி விலைகளில் இறக்குமதி மீன் கிடைக்கக்கூடிய நிலையிருந்தால் அது உள்நாட்டு மீன் உற்பத்தியைப்பாதிக்கும். உள்நாட்டு வியாபாரி/நடுவர் உற்பத்தியாளருக்குத் தான் விரும்பிய நிபந்தனைகளை விதித்து குறைந்த விலைகளைக் கொடுக்கக் கூடிய நிலையிலிருப்பார். இதனுல் சந்தைப் போட்டி உற்பத்தியாளர் மட்டத்திற்கு எடுத்துச் செல்லப்படும். அதிகரிக்கும் உற்பத்திச் செலவுக்கும் குறைந்த விலைக்கும் இடையில் சிக்கித் தவிக்கும் 85 சதவீதமான மீனவர்கள் தம் நிலைபற்றிக் குரல் எழுப்பக் கூடியவர்களாக இல்லை.

மறுபுறம், சுதந்திர இறக்குமதிக் கொள்கை கடைப்பிடிக்கப்பட்டால் அது ஏற்றுமதி செய்யும் நாடுகளுக்கு எமது வெளிநாட்டுச் செலாவணியை அள்ளிக் கொடுப்பதிலும், அந்நாடுகள் தம் கைத்தொழிலையும் வருமானத்தையும் விருத்தி செய்து கொள்வதற்கு உதவுவதிலுமே முடியும். சென்ற சில ஆண்டுகளாக மீனும் மீனுற்பத்திப் பொருட்களும் இறக்குமதி செய்வதற்காக வருடாந்தம் செலவிடப்பட்ட தொகைகள், பிறநாடுகளின் கடற்றெழிலை அபிவிருத்தி செய்வதற்கு வெளிநாட்டுச் செலாவணி வகையில் இலங்கையின் உதவு தொகை எவ்வாறு படிப்படியாக அதிகரித்தது என்பதைத் தெளிவாகக் காட்டுகிறது.

(33பக்கம் பார்க்க)

# இலங்கையில் இதயக்கலன் நோய்களின் பூர்வீகத் தடுப்புமுறைகள்


திலக் முனசிங்க

நாட்டில் நடந்தேறியுள்ள பல்வேறு விதமான சமூக-பொருளாதார மாற்றங்களின் விளைவாக சமீப தசாப்தங்களில் நோய் மாதிரிகள் பெருமளவுக்கு மாறிவிட்டன. இதைத் திருஷ்டாந்தப்படுத்தும் ஓர் உதாரணம் இருதய நோயாகும். இது மரணத்துக்கு ஒரு முக்கிய காரணமாக வெளித்தோன்றியுள்ளது. இதைப்பற்றிச் சுகாதாரக் கல்விப் பணியகத்தைச் சேர்ந்த டாக்டர் திலக் முனசிங்க இந்த ஆய்வுக் கட்டுரையில் ஆராய்கிறார்.

இலங்கையில் இதயக்கலன் நோய்களின் சம்பவிப்பு அதிகரித்து வருவதற்குப் பல்வேறு காரணங்கள் உண்டு. ஈ. சி. ஜி. எந்திரங்கள் போன்ற சாதனங்களின் உருவில் ரோக நிபுணர் வசதிகளும் சிறப்புத் தேர்ச்சி பெற்ற வைத்திய நிபுணர்களின் சேவைகளும் முன்பு கொழும்பு பெரியாஸ்பத்திரியில் மட்டுமே கிடைக்கக் கூடியனவாயிருந்தன. இப்பொழுது இவை மற்றும் மாகாண ஆஸ்பத்திரிகளுக்கும் விஸ்தரிக்கப்பட்டுள்ளன. இதன் பயனாக, இத்தகைய நோயாளிகளில் அதிகமானோர் நாட்டின் வெவ்வேறு பகுதிகளில் இப்பொழுது ரோக நிர்ணயம் செய்யப்பட்டுவருகிறார்கள். மருத்துவ சேவைகள் விரிவாக்கப்பட்டதுடன் சமூகத்தில் இந்த வியாதிகளின் குறிகளை அறிவது இயற்கையாகவே அதிகரித்துள்ளது. இதனால் ஆஸ்பத்திரிக் கவனிப்பை நாட மக்கள் தூண்டப்படுகிறார்கள். மறுபக்கத்தில், வேறு சில தொடர்பான காரணிகளையும் கண்டுபிடிக்கக் கூடியனவாயுள்ளன. இந்த நோய்களின் தொகுதி சம்பவிப்பதற்கும் அவற்றிற்கும் சம்பந்தம் இருக்கலாம். அவற்றின் செல்வாக்கு தனியாகவன்றிச் சேர்ந்தே இருப்பது அதிக அளவுக்குச் சாத்தியம். அவற்றுள் முக்கியமானவற்றில் சில சிகரெட் புகைத்தல், உணவுப் பழக்கங்கள், வாழ்க்கை முறைகளும் மனப்பாதிப்புமாகும். நாட்பட்ட கீல்வாத இதய நோய்க்கு இட்டுச்செல்லும் கடும் கீல்வாதக் காய்ச்சல் உண்டாவதற்கு மோசமான வீடமைப்பும் வாழும் நிலைமைகளும் கூட ஒரு முக்கியமான தூண்டற் காரணியாகத் தொடர்ந்து இருந்து வருகின்றன.

சுகாதார அமைச்சு திரட்டி வைத்திருக்கும் ஆஸ்பத்திரி நோயாளர் பற்றிய புள்ளி விவரங்களிலிருந்து அசாதாரண இரத்த அழுத்தமும் இசக்கிமிக் (உடலின் ஒரு பகுதியில் இரத்தம் போதாமை) இருதய நோய்களும் நோயால் துன்புறு நிலைகளும் அதிகரித்துக் கொண்டே வந்துள்ளனவென்பதைத் தெளிவாக எடுத்துக் காட்டுகின்றன.

**இசக்கிமிக் இருதய நோய்கள் நோயாளிகளை ஆஸ்பத்திரிக்கு அனுப்புவதும் ஆஸ்பத்திரி மரணங்களும்**



☐ ஓராயிரம்பேருக்கு நோயாளிகள் விகிதம்

■ ஓராயிரம் பேருக்கு மரண விகிதம்

ஆஸ்பத்திரியில் சேர்ந்து சிகிச்சை பெறுவதற்கும் ஆஸ்பத்திரி மரணங்களுக்கும் 10 முக்கிய காரணங்களைப் பட்டியலிட்டுக் காட்டும் அமைச்சின் வருடாந்தப் பிரசுரத்தில் தரப்பட்டுள்ள 1985ம் ஆண்டுக்கான புள்ளி விவரங்கள் இரத்தக் குறைபாட்டு இதயநோய்கள்தான் மரணத்துக்குப் பிரதான காரணமாயிருக்கின்றனவென்பதை எடுத்துக் காட்டுகின்றன. சகல ஆஸ்பத்திரி மரணங்களிலும் 9.6 சதவிகிதத்துக்கு இந்நோய்களே பொறுப்பாயிருக்கின்றன. 1970ம் ஆண்டிலிருந்து 1985 ம் ஆண்டு வரையுள்ள 15 வருடகாலத்தில் ஆஸ்பத்திரிக்கு நோயாளிகளை அனுப்புவதிலும் ஆஸ்பத்திரி மரணங்களிலும் காணப்படும் போக்குகள் இசக்கிமிக் (உடலின் ஒருபகுதியில் இரத்தம் போதாக் குறையாயிருக்கும் நிலை) இதய நோய்களின் கீழ்க்கண்ட அதிகரிப்பை எடுத்துக்காட்டுகின்றன:

## தற்போதைய நிலைமையும் தடுப்பதற்கான வாய்ப்பும்

நாட்டிலுள்ள பொதுவான இதயக்கலன் நோய்களை கீழ்க் கண்டவாறு தொகுதிப்படுத்தலாம்:

(1) கடும் கீல்வாதக் காய்ச்சல்
(2) நாட்பட்ட கீல்வாத இதய நோய்
(3) அதிபர இரத்தஅமுக்கமுள்ள இதயநோய்
(4) தன்னியல் அதிபர இரத்த அமுக்கம்
(5) மற்றும் அதிபர இரத்த அமுக்கநோய்கள்
(6) கடும் இதயத்தசை இன்பாற்றுநிலை
(7) மற்றும் இசக்கிமிக் இதய நோய்கள்

கீல்வாதக்காய்ச்சலின் சம்பவிப்பில் ஒரு குறிப்பிடத்தக்க வீழ்ச்சி அதாவது 1980ம் ஆண்டிலிருந்த 52.4/1,00,000 விருந்து 1986ம் ஆண்டில் 45.8/1,00,000க்கு-ஏற்பட்டுள்ளதாக அவதானிக்கப்பட்டுள்ளது.

கீல்வாத இதயநோயைத் தடுப்பது ஆரம்பகட்டத்திலேயே ரோக நிர்ணயம் செய்வதுடனும், கடும் கீல்வாதக் காய்ச்சலை சரியாகக் கையாளுவதோடும் தொடர்புள்ளதாகும். இந்த நிலைமையின் சம்பவிப்பில் மிகவும் குறிப்பிடத்தக்க குறைவு ஏற்பட்டுள்ளது. 1,00,000 பேருக்கான விகிதம் 1970ம் ஆண்டிலிருந்த 39.7 லிருந்து 1986ம் ஆண்டில் 27.2க்கு வீழ்ச்சியடைந்துள்ளது. இதற்குக் கீல்வாதக் காய்ச்சலின் சம்பவிப்பில் ஏற்பட்ட கூட்டு மொத்தக் குறைவு ஓரளவுக்கும், சுகாதாரப் பாரமரிப்புச் சேவைகள் விரிவடைந்ததும் பயன்படுத்தப்பட்டதும் ஓரளவுக்கும் காரணமாகும். நியாயமான அளவுக்கு நன்கு ஒழுங்கமைக்கப் பட்டுள்ள நோயாளர் பராமரிப்பும் தாய்–குழந்தை ஆரோக்கியத்துக்காக இல்லத்துக்குப் போய்ப்பார்க்கும் திட்டத்துடன் கூடிய சமூக ஆரோக்கிய சேவைகளும் கீல்வாதக்காய்ச்சலால் பீடிக்கப்பட்டுள்ள குழந்தைகளுக்கு அவசியமான தொடர்பராமரிப்பை வழங்குவதற்கு அதிகமாக உதவும். கீல்வாதக்காய்ச்சலுள்ள குழந்தைகள் கீல்வாத இதய நோய்க்கு ஆளாகாமல் தடுப்பதற்கு எவ்வளவோ அத்தியாவசியமான தொடர்ச்சியான நீண்டகால சிகிச்சையை உறுதிப்படுத்தலே இதன் நோக்கமாகும். கிடைக்கக் கூடியதாயுள்ள உடனல மூல வளங்களுடன் கீல்வாதக்காய்ச்சல், கீல்வாத இதயநோய் ஆகிய இரண்டையும் தடுப்பதற்கு நாட்டில் பெருமளவிலான வாய்ப்பு உண்டென்பது இவ்விதம் அவதானிக்கப்படுகிறது.

(அ) இவ்விரு நோய்களும் ஒப்பீட்டுரீதியாக அதிக அளவில் சம்பவித்தல் (ஆ) கீல்வாத இதய நோய்க்குச் சமூக ரீதியாகச் சிகிச்சையளிப்பதற்கு ஆகும் அதிக செலவு (இ) அவற்றைத் தடுப்பதற்குக் கிடைக்கக் கூடியதாயுள்ள உடனல மூலவளங்கள் ஆகியவற்றின் தற்போதைய அமைவில், நோய்த் தடுப்புக்குச் செயலூக்கமுள்ள ஒரு கொள்கையைப் பின்பற்றுதலே ஆகக்கூடிய பகுத்தறிவைக் காட்டும் நடவடிக்கை எனத் தோன்றுகிறது. குறிப்பாக, எமது பொருளாதாரத்தின் தற்போதைய நிலையில் இப்படித் தோன்றுகிறது. தற்போதைய வீடமைப்புத் திட்டம் இவ்விரு நோய்கள் மீதும் ஓர் அனுகூலமான தாக்கத்தை ஏற்படுத்துவது சாத்தியம்.

### அதிபர இரத்த அழுத்தமுள்ள இதய நோய்களும் தன்னியல் அதிபர இரத்த அழுத்தமும்

அதிபர இரத்த அழுத்தமுள்ள இதய நோய்கள், தன்னியல் அதிபர இரத்த அழுத்தம், மற்றும் அதிபர இரத்த அழுத்தமுள்ள நோய்கள் ஆகியவற்றைச் சேர்த்துநோக்குமிடத்து, 1970ம் ஆண்டுக்கும் 1980ம் ஆண்டுக்குமிடைப்பட்ட காலத்தில் இந்நோய்கள் கணிசமான அதிகரிப்பைக் காட்டியுள்ளன. 1,00,000 பேருக்கான விகிதம் 122.4 லிருந்து 187.7க்கு அதிகரித்து, 1985ம் ஆண்டில் 186.9 விகிதத்துடன் அடுத்த 5 வருடங்களில் தொடர்ந்து மாறுமல் அதே நிலையிலிருந்து வந்துள்ளது

1985ம் ஆண்டில் மொத்தம் 30,293 நோயாளிகளில் (29,585 பேர் ஆஸ்பத்திரியில் சிகிச்சைக்குப்பின் விடுவிக்கப்பட்டனர்; 708 பேர் ஆஸ்பத்திரியில் மரணம் அடைந்தவர்கள்) 31.2 சதவிகிதத்தினர் (9,437 நோயாளிகள்) அதிபர இரத்த அழுத்த நோய்களால் பாதிக்கப்பட்டவர்கள்; 45.4 சதவிகிதத்தினர் (1375 பேர்) தன்னியல் அதிபர இரத்த அழுத்தத்தினுலும், 23.5 சதவிகிதத்தினர் (7104 பேர்) மற்றும் அதிபர இரத்த அழுத்த நோய்களால் பீடிக்கப்பட்டவர்கள். இக்குழுவினரில் ஏற்பட்ட மரணங்களில் மிக உயர்வான சதவிகிதம் அதிபர இரத்த அழுத்த நோயால் பீடிக்கப்பட்டவர்களிடையேதான் காணப்பட்டது.

இதய நோய்க்கு ஆளாகாமல் அதிபர இரத்த அழுத்தமுள்ள இந்நோயாளிகளில் ஒரு பகுதினரையேனும் தடுப்பது சாத்தியம். ஆனுல், அதற்கு ஆஸ்பத்திரிச் சிகிச்சையிலிருந்து விடுவிக்கப்பட்டவர்களின் தொடர்ச்சியான பராமரிப்பில் அதிக கவனஞ் செலுத்துவதுடன் தனித்தனியாகவோ, குழு குழுவாகவோ நோயாளர்களுக்குக் கல்வியூட்டும் திட்டங்கள் அதிகமாக ஒழுங்கமைக்கப்படுதலும் அவசியமாகும். துரதிர்ஷ்டவசமாக, நோயாளிகளின் தற்போதைய் சாரக் (கிளினிக்)க் கையாளலில் இவ்விரு கூறுகளும் பெறவேண்டிய முக்கியத்துவத்தைப் பெறு

அட்டவணை-1

இதயக்கலன் நோய்களின் காரணமாக ஆஸ்பத்திரிச்சிகிச்சை பெற்றுச் சென்றோரும் மரணங்களும்

| நோயின் பெயர் | 1970 1,00,000 பேருக்கு தொகை | விகிதம் | 1980 1,00,000 பேருக்கு தொகை | விகிதம் | 1985 100,000 பேருக்கு தொகை | விகிதம் |
|---|---|---|---|---|---|---|
| கடும் கீல்வாதக் காய்ச்சல் | 4,556 | 36.4 | 7,229 | 52.4 | 7,432 | 45.8 |
| நாட்பட்ட கீல்வாத இதய நோய்கள் | 4,930 | 39.7 | 4,746 | 32.3 | 4,423 | 27.2 |
| அதிபர இரத்த அழுத்தமுள்ள இதயநோய் தன்னியல் அதிபர இரத்த அழுத்தம், மற்றும் அதிபர இரத்த அழுத்தமுள்ள நோய்கள் | 15,321 | 122.4 | 17,669 | 187,7 | 30,293 | 186.9 |
| கடும் இசக்கிமிக் இன்பாற்றுநிலை மற்றும் இசக்கிமிக் இதய நோய்கள் | 10,140 | 81.0 | 19,145 | 129.9 | 28,483 | 175.8 |

மூலம்; வைத்திய நிலையங்களின் பகுதி சுகாதார அமைச்சு.

வதாகத் தோன்றவில்லை. அதிபர இரத்த அழுத்தமுள்ள நோயாளிகளில் பெரும்பாலோர் ஆஸ்பத்திரிகளில் தங்கியிருக்கும் போதும் ஆஸ்பத்திரியிலிருந்து விடுவிக்கப்பட்டவுடன் அடுத்தும் சாரகங்கள் (பிணி ஆய் சாலைகள்) வாயிலாக ஓரளவு தொடர்ச்சியான பராமரிப்பை நிச்சயமாகப் பெறுகின்றனராயினும், காலக்கிரமத்தில் இந்தப் பராமரிப்பு நின்றுவிடுகிறது. விரைவிலோ அல்லது சற்றுப் பிந்தியோ நோயாளிகள் சாரகத்துக்கு ஒழுங்காக வருவது குறைந்து, சிகிச்சை நிறுத்தப்பட்டுவிடுகிறது. இந்நோயாளர்கள் அடிக்கடி மீண்டும் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்படும் சம்பவங்கள், இந்நோயாளர்களைக் கையாளும் விஷயம் நிறைவு பெறாததைப் பிரதிபலிக்கின்றன.

அதிபர இரத்த அழுத்தமுள்ள நோயாளர்களை நோயின் ஆரம்பகட்டங்களில் கண்டுபிடிப்பதற்காக, குடிமக்களில் இந்நோயால் பீடிக்கப்படக் கூடிய பிரிவினரைப் பரிசோதித்துப் பார்க்க எந்த முறைப்படியான முயற்சியும் இதுவரை செய்யப்படவில்லை. இப்போது உள்ள உடனலப் பராமரிப்பு அமைப்பில், நோயின் ஆரம்ப கட்டங்களில் அதிகமான நோயாளர்களைக் கண்டுபிடித்து, சிகிச்சையளிப்பது முற்றிலும் சாத்தியமென்றே தோன்றுகிறது. வெளிநோயாளர்களாகவும் உள்நோயாளர்களாகவும் வருடந்தோறும் எங்கள் மருத்துவ சாலைகளுக்குச் சிகிச்சைபெற வரும் நோயாளரின் மொத்தத் தொகை பெருந்தொகையாயிருக்கிறது. (1984ம் ஆண்டில் சுமார் 32 லட்சம் வெளிநோயாளர்களும் 25 இலட்சம் உள் நோயாளர்களும் சிகிச்சை பெற்றுள்ளனர் - வருடாந்த சுகாதார வெளியீடு - 1984, சுகாதார அமைச்சு). இந்த நோயாளர்களில் ஒரு விகிதத்தினரை, நோய் பற்றக் கூடிய வயதுத் தொகுதிகளைச் சேர்ந்தவர்களையேனும் அல்லது அவர்களுக்கிடையேயுள்ள நோய்வாய்ப்படக் கூடிய அறிகுறிகளைக் கொண்டுள்ளவர்களையேனும் இரத்த அழுத்த அளவீடுகளுக்கு உட்படுத்துவது சாத்தியமெனத் தோன்றுகிறது. அதிபர இரத்த அழுத்தமுள்ள நோயாளர்களை ஆரம்ப கட்டத்திலேயே கண்டு பிடித்து, தகுந்த நடவடிக்கை எடுக்க, வைத்தியப் பராமரிப்பு நிலையங்களில் பணியாற்றும் பதிவு செய்யப்பட்ட உதவி வைத்திய அதிகாரிகளுக்கும் வைத்தியப் பட்டதாரிகளுக்கும் ஊக்கமளிக்கலாம். தற்போது அமுல் செய்யப்பட்டு வரும் பிரதம சுகாதாரப் பராமரிப்புத் திட்டத்தில், 3000 பேருக்கு (ஏறக்குறைய 500 குடும்பங்கள்) குறைந்த சமாளிக்கத்தக்க மக்கள் தொகையின் தேவைகளைக் கவனிக்கும் பொதுச் சுகாதார மருத்துவிச்சி சமூகத்திலுள்ள இந்த மற்றப் பிரச்சினைகளை உள்ளடக்க, தனது நடவடிக்கைகளை விஸ்தரிக்கலாம். முறையான சோதனையும் சிகிச்சையும் தேவைப்படுவோருக்குக் கல்வியூட்டவும் ஆலோசனை கூறவும் ஆஸ்பத்திரியிலிருந்து சிகிச்சைக்குப்பின் விடுவிக்கப்படும் நோயாளிகளுக்குரிய தொடர்ச்சியான பராமரிப்பில் உதவி செய்யவும் அவரால் முடியும்.

### இசக்கிமிக் இதயநோய்

இசக்கிமிக் இதயநோய் காரணமாக நோய்வாய்ப்படும் நிலைமையும் ஏற்படும் மரண விகிதங்களும் பெருங்கவலையை உண்டாக்கி வருகின்றன. 1984ம் ஆண்டில் இரத்தோட்டத் தொகுதியில் ஏற்பட்ட நோய்களின் காரணமாக ஆஸ்பத்திரியில் ஏற்பட்ட 6,192 மரணங்களில் 38.3 சதவிகிதம் இசக்கிமிக் இதய நோயால் ஏற்பட்டவையாகும். (வருடாந்த சுகாதார வெளியீடு, இலங்கை 1984; சுகாதார அமைச்சு). இரத்தோட்டத் தொகுதியில் ஏற்பட்ட நோய்களுக்காக 500 ஆஸ்பத்திரிகளில் சிகிச்சையளிக்கப்பட்ட நோயாளிகளின் மொத்தத் தொகையில், (24.6 சதவிகிதம்) கால்வாசி இசக்கிமிக் இதய நோய்க்காகும். இந்நோயின் சம்பவிப்பு ஒப்பியல் ரீதியாக அதிக அளவிலிருந்தது மட்டுமல்லாமலும் மரணங்களில் ஒரு குறிப்பிடத்தக்க விகிதம் ஒப்பியல் ரீதியாக இளம் வயதினருக்கும் நடுத்தர வயதினருக்குமிடையே ஏற்பட்டுள்ளது.

பொதுவாக நாட்டில் உள்ள இசக்கிமிக் இதய நோயுடன் சேர்ந்த - உயிரின உற்பத்தி இயலுக்குப் புறம்பான - சாத்தியமான அபாயக் காரணிகள் வருமாறு (அ) புகைத்தல் (ஆ) அதிபர இரத்த அழுத்தம் (இ) உணவு (ஈ) உட்கார்ந்திருக்கும் நிலையிலேமே வாழ்க்கையை ஓட்டும் முறைகள் (உ) கொழுத்த நிலை (ஊ) அவசர நெருக்குதல்கள். இவற்றில் எந்தக் காரணிகள் பெரும் பங்கெடுக்கின்றனவென்பது தெரியவில்லை. அவை ஒன்றையொன்று பூர்த்தி செய்யும் வகையில் செயற்படுவது மிகவும் சாத்தியம்.

இசக்கிமிக் இதய நோய்க்குச் சிகிச்சையளிப்பது அதிக சிக்கலானது; அதிக பணச் செலவை உண்டாக்குவது; சில சமயங்களில் ஏமாற்றமுங்கூட அளிப்பது. மிக அதிக பணச் செலவில் கூட இத்தகைய வசதிகளை ஏற்படுத்த வேண்டிய அவசியத்திலிருந்து தப்பமுடியாது. ஏனென்றால், இந்நோயின் சம்பவிப்பு அதிகரிக்கின்றது. அதிக செலவிலான சாதனங்களுடன் கூடிய தீவிர இதயப் பராமரிப்புப் பிரிவுகள், முடியுருநாடியில் பக்கவாட்டுச் சத்திர சிகிச்சைச் சேவைகள், உயர் பயிற்சி பெற்ற தொழில் நுணுக்கர்களின் சேவைகள் போன்ற பூரணமான சத்திர சிகிச்சை நடைமுறைகள் முதலிய பலவற்றின் மீது முதலீடு செய்வதென்பது பல வளர்முக நாடுகளின் சக்திக்கு அப்பாற்பட்டது. ஆனால், இனங்காணப்பட்ட அபாயக் காரணிகள் சம்பந்தமாகப் பொருத்தமான தடுப்பு நடவடிக்கைகளை எடுத்துக் கொள்வது, சிக்கலில்லாத சுலபமான விஷயம் என்பது மட்டு

மன்றி அது செலவு குறைந்த மலிவான நடவடிக்கையுமாகும்; அத்துடன், வறிய நாடுகளின் வருவாய்க்கு உட்பட்டதுமாகும். எனவே, தற்போதைய அமைவில், வரையறுக்கப்பட்ட நிதி வளங்கள் சிக்கலான - அதிகவிலையுள்ள சிகிச்சை வசதிகளுக்குள் உறிஞ்சப்படுவதற்கு முன்பு, இசக்கிமிக் (உடலின் ஒரு பகுதியில் ஏற்படும் இரத்தப் பற்றாக்குறை) இதய நோய்களைத் தடுப்பதற்குரிய மிகச் சவிஸ்தாரமான திட்டமொன்றின் மீது இலங்கை நடவடிக்கை எடுக்கத் தொடங்குதல் அதிக பகுத்தறிவுள்ளதாயிருக்கும்.

**உணவு**

பொதுவாக மக்களின் பாரம்பரிய உணவுகளில் பிரதானமாக அரிசியும் (இதுவே முக்கிய உணவு), மரக்கறியும் மீனும் (இது உலர்த்தப்பட்டதாகவோ அல்லது புதிதாகப் பிடிக்கப்பட்டதாகவோ இருக்கலாம்) அடங்கியுள்ளன. நோய்க்காரணவியல் ரீதியாக, இந்தப் பாரம்பரிய உணவுகளுக்கும் இதயக்கலன் நோய்களுக்கும் சம்பந்தம் இல்லை. குறிப்பாகக் கிராமப் பகுதிகளிலுள்ள மக்களில் மிகப்பெரும்பாலோர் இறைச்சியாகவும் மற்றும் விலங்கு உற்பத்திப் பொருள்களாகவும் விலங்குக் கொழுப்பை மிகச் சிறிய அளவிலேயே உட்கொள்கின்றனர். எனினும், பெரும்பாலான மக்கள் தேங்காயை ஏதாவதொரு உருவத்தில் உட்கொள்கின்றார்கள். இது நாட்டின் மிகப் பெரும்பாலான பகுதிகளில் ஒரு சர்வசாதாரண உணவுப் பொருளாகப் பல்வேறு உருவங்களில் உபயோகிக்கப்படுகிறது. தேங்காய்ப் பூ மரக்கறிகளையும் மீனுணவையும் தயாரிப்பதில் தினந்தோறும் உபயோகிக்கப்படுகிறது. தேங்காயெண்ணெய் உணவைப் பொரிப்பதற்கும் பல பரம்பரை இனிப்புப் பண்டங்கள் முதலியனவற்றைத் தயாரிப்பதிலும் உபயோகிக்கப்படுகிறது. இறைச்சி வகைகளையும் முட்டைகள், பால் போன்ற மற்றும் மிருக உற்பத்திப் பொருள்களையும் உட்கொள்ளுதல், நகரப்பகுதிகளிலுள்ள பணக்காரக் குழுக்களிடையே பல்லாண்டுகளாகச் சற்று அதிகரித்துள்ளது. இறைச்சி வகைகளும் பொதுவாகத் தேங்காயிலிருந்து பிழியப்படும் பாலை அல்லது எண்ணெயை உபயோகித்துத் தயாரிக்கப்படுகின்றன.

இந்தக் காலத்தில் இலங்கைக்கு விஜயம் செய்த உல்லாசப் பிரயாணிகளின் தொகையை (1974ம் ஆண்டில் 85,011 உல்லாசப் பயணிகள் இலங்கைக்கு வந்தனர். 1980ம் ஆண்டில் இவர்களின் தொகை 3,21,780 ஆக அதிகரித்தது) க் கணக்கிலெடுக்காது விடுவோம். உற்பத்தி செய்யப்படும் இறைச்சியில் ஒரு குறிப்பிடத்தக்க விகிதம் இலங்கைக்கு வருவோராலும் நகரங்களிலுள்ள நடுத்தர வர்க்கத்தையும் மேல் வர்க்கத்தையும் சேர்ந்தவர்களாலும் உட்கொள்ளப்படுகிறது என்று ஒருவர் ஊகித்துக் கொண்டால், அப்பொழுது இசக்கிமிக் இதய நோயில் நோய்க்காரணியென்ற முறையில் மிருகக் கொழுப்பு (ஏதாவதிருந்திருந்தால்) நாட்டிலுள்ள சகல மக்கள் மீதும் ஏற்படுத்திய விளைவு அரும்பொட்டானதாகத் தான் உள்ளது. கிராம மக்களில் பெரும் விகிதத்தினர் இறைச்சியைக் கிரமமாகச் சாப்பிடுவதில்லை. நகரப் பகுதிகளில் இறைச்சியின் விலை ஒப்பியல் ரீதியாக உயர்வாக இருப்பதனால், ஏழைமக்கள் இறைச்சியை எந்தக் குறிப்பிடத்தக்க அளவிலும் சாப்பிடுவதில்லை. ஆதலால் இறைச்சியின் நுகர்வு நகரங்களில் உள்ள நடுத்தர வகுப்பினருக்கும் மேல் வகுப்பினருக்குமிடையே தான் செறிந்திருக்கலாம். நாட்டிலுள்ள இறைச்சியின் நுகர்வுக்கும் இசக்கிமிக் இதய நோய்க்குமிடையேயுள்ள தொடர்பு பற்றி எந்த முடிவுக்கும் வருவதற்கு முன்பு அதிக புள்ளிவிவரங்கள் தேவைப்படும். குறிப்பாக, குழந்தைகளுக்கிடையே புரத போஷாக்கின்மை இருந்து வருவதால், குடிமக்களில் இளம் பிரிவினர் விலங்கிலிருந்து உற்பத்தி செய்யப்படும் உணவை உட்கொள்வதவசியமாகும். தற்போது, மீன் இறைச்சி உணவுகளின் மீது ஏழை மக்களும் நடுத்தர வருமானமுள்ளவர்களும் உயர் வருமானமுள்ளவர்களும் செலவிடும் சதவிகிதப் பங்குகள் முறையே 3.4, 4.6, 6.8 ஆக உள்ளன. அறுதியிட்டுக் கூறுவதெனில், குறைவான வருமான மட்டங்களின் காரணமாக, ஏழைமக்கள் உண்மையில் உட்கொள்ளும் இறைச்சியின் அளவு வெகு குறைவாகவே இருக்கும். ஏனென்றால், அவர்களுடைய வருமானம் மிகக் குறைவாகும். ஆதலால், பெரும்பாலான மக்களின் போஷாக்கு மட்டங்களை எந்த மதிக்கத்தக்க அளவுக்கும் அதிகரிப்பதென்றால், மிருகப் புரத உற்பத்தியும் நுகர்வுமாக இரண்டும் மிகப் பெருமளவுக்கு அதிகரிக்கப்படவேண்டும். மிருகப் புரதங்களில் மீனே கிராமப்

அட்டவணை 2

| கொல்லப்பட்ட விலங்குகள் | 1970 | 1972 | 1974 | 1976 | 1978 | 1980 | 1982 | 1984 |
|---|---|---|---|---|---|---|---|---|
| பசு, எருமைமாடு | 238,000 | 244,000 | 249,300 | 222,400 | 189,030 | 178,000 | 183,000 | 237,000 |
| ஆடு, செம்மறியாடு | 130,000 | 114,000 | 138,000 | 133,000 | 127,000 | 136,000 | 163,000 | |
| பன்றி | 18,000 | 21,000 | 15,000 | 13,000 | 18,000 | 31,000 | 22,000 | |
| முட்டை உற்பத்தி | 431,315,000 | 582,722,000 | 406,243,000 | 385,352,000 | 380,240,000 | 544,787,000 | | |

புள்ளிவிவரப்பகுதி, இலங்கை மத்திய வங்கி.

பகுதிகளில் அதிக விருப்பத்துடன் உண்ணப்படுகிறது. குறிப்பாக, கிராம மக்கள் உலர்த்தப்பட்ட மீன்வகைகளையே (கருவாட்டு வகைகள்) விரும்பிச் சாப்பிடுகிறார்கள். 1979 ம் ஆண்டிலிருந்து 1984 ம் ஆண்டுவரை விற்கப்பட்ட மீன்களின் மொத்தத் தொகை ஓர் இடையறாத அதிகரிப்பைக் காட்டுகிறது.

இலங்கை ஒரு தீவு. சுற்றியுள்ள கடல் பகுதிகள் ஒப்பியல் ரீதியாக மீன்வளம் நிறைந்தவை. எனினும், மீன்களைச் சேகரிக்கத் தற்போது கையாளப்படும் முறைகள் மோசமாயிருப்பதால், பெறப்படும் மீன்களின் தொகை வெகு குறைவாயிருக்கிறது. இதன் விளைவாக, கோரிக்கை வழங்கலை மிஞ்சுவதாகத் தோன்றுகிறது; இதனால் மீன் விலைகள் தொடர்ந்து உயர்வாகவே இருந்து வருகின்றன. மீனைப் போதிய அளவில் வாங்கப் பலரின் வருவாய் இடந்தரவில்லை. அண்மைக் காலத்திலிருந்து நாட்டின் உட்பகுதிகளில் நன்னீர் மீன் வளர்ப்பு ஜனரஞ்சகமாகி வருகின்றது. கலாசார அடிப்படையில் கூட மீன் இறைச்சியை விட அதிகம் ஏற்றுக் கொள்ளத்தக்க ஓர் உணவாகும். நாட்டின் மிருகப் புரதத் தேவைகளை மீனிலிருந்து பூர்த்தி செய்ய முடியுமாயின், எதிர் காலத்தில் இறைச்சியின் மித மிஞ்சிய நுகர்வைத் தடுப்பதற்கான வழிகளில் ஒன்றாக அது பயன்படலாம். தக்க விலை நிர்ணயத்தின் வாயிலாகப் பெரும்பாலான மக்களின் வருவாய்க்குள் கொண்டு வரப்பட்டால், மிருகக் கொழுப்பை அதிகரித்த அளவில் நுகரும் உட்சிக்கல்களின்றியே நாட்டின் புரதத் தேவைகளை நிறைவு செய்யும் சக்தி மீனுக்கு உண்டு. இதன் மூலம் இசக்கிமிக் இதய நோய்க்கான அபாயக் காரணிகளில் ஒன்றை அகற்றிவிட முடியும். இத்தகைய வாதங்கள் ஒப்பீட்டளவில் நியாயமற்றதாகத் தோன்றலாம். எனினும், எதிர் காலத்தில் எழக் கூடிய நிலைமைகளைத் தவிர்க்க, முன்னரே திட்டமிடுவதெனில், உணவுப் பழக்கங்களில் தகுந்த போக்குகளை ஊக்குவிக்க இப்பொழுதே நடவடிக்கைகளை எடுக்கத் தொடங்குவது உசிதம் எனத் தோன்றுகிறது. இசக்கிமிக் இதய நோய்த்தடுப்பு முறையில் ஆதிகாலத்திலே இடம் பெற்ற முக்கியமான நடவடிக்கைகளில் ஒன்று என்னவெனில், மீன் உற்பத்தியை அதிகரிப்பதற்குச் செயலூக்கமுள்ள கொள்கையொன்றைப் பின்பற்றுவதாகும். அத்துடன், மிருகப் புரதத்தின் பிரதான மூலமாக இளம்வயதினரிடையே மீனின் நுகர்வை ஊக்குவிக்கும் விசேஷ நோக்கத்துடன் தகுந்த கல்வித் திட்டமொன்றை அவர்களுக்கென்று நிறைவேற்றுவதும் அவசியமாகும். இத்தகைய ஒரு நடவடிக்கை மிதமிஞ்சிய மிருகக் கொழுப்பை நுகர்வதினின்றும் மக்களைத் திசை திருப்ப உதவலாம். ஒப்பியல் ரீதியாகக் குறைந்த முதலீட்டுடன் இந்நோக்கத்தைச் சாதிக்க முடியும்.

## தகைப்பு

தற்கால வாழ்க்கையிலுள்ள அவசர நெருக்குதல்களுக்கும் இதய நோய்ச் சம்பவிப்புடன் தொடர்பு இருக்கக்கூடும். இது எந்த அளவுக்கு இருந்து வருகிறதென்பதும் இக் காரணி எவ்வாறு செயற்படுகிறதென்பதும் தெளிவாகத் தெரியவில்லை.

நகரப் பகுதிகளில் வேலை செய்வோரில் பெரும்பாலோர் இலிகிதர்களாகவும் கூலித் தொழிலாளர்களாகவுமிருக்கின்றனர். இவர்கள் தற்கால வாழ்க்கையின் அவசர நெருக்குதல்களுக்குக் கிராம விவசாயிகளை விட அதிகமாக உட்படக்கூடும். கைத்தொழில் துறையின் துரித மான விஸ்தரிப்புடன் தங்களுடைய இல்லங்களுக்கு வெளியே, தங்களுடைய குடும்பங்களை விட்டு வெகுதூரத்தில் நீண்ட நேரங்கள் வேலை செய்துவரும் பெண்களின் தொகை அதிகரித்து வருகிறது. கடந்த சில வருடங்களில வாழ்க்கைச் செலவுகள் உயர்ந்துள்ளதுடன் நாளாந்தத் தேவைகளைப் பூர்த்தி செய்யும் பிரச்சினைகளும் கடுமையாக அதிகரித்துள்ளன. ஒரு பக்கத்தில் வேலைத்தலத்தின் கோரிக்கைகளைச் சமாளிக்க முடியாமலும், மறுபக்கத்தில் தாயாகவும் இல்லத் தலைவியாகவும் பாரம்பரியக் கடமைகளை நிறைவேற்ற முடியாமலும் பெண்கள் பெருமளவு தகைப்புக்கு உள்ளாகலாம்.

இந்த மெய் வருத்தத்தையும் மனப் பதற்றத்தையும் உண்டாக்கும் இன்னொரு காரணி, பாடசாலை, வேலையில் சேருவதற்கு முன்புள்ள காலம், வேலை செய்யும் காலம் தொடர்பாகப் பல் லுருவங்களில் நிகழும் வாழ்க்கையின் நடவடிக்கைகளில் நிலவும் கடும்போட்டியாயிருப்பது சாத்தியம். சமூக அந்தஸ்தையும் வேலை வாய்ப்பையும் நிர்ணயிப்பதில் முறைமை சார் கல்வியும் கல்லூரித் தகைமைகளும் ஒரு முக்கியமான இடம் வகிக்கின்றன. தனி நபரை வாட்டிவதைக்கும் இந்தத் தகைப்பு பாடசாலை வாழ்க்கையின் ஆரம்ப கட்டத்திலேயே தொடங்கி விடுவதாகத் தோன்றுகிறது. பாடசாலைகளில் வருடாந்தம் பெயர் பதியப்படும் பெருந் தொகையான குழந்தைகளில் (1980 ம் ஆண்டில் 364,552 பேர்) உயர் வகுப்புக்களுக்குச் செல்லும் குழந்தைகளின் தொகை 6 ம் தரத்திலிருந்து படிப்படியாகக் குறையத் தொடங்கிவிடுகிறது. பொருளாதாரக் காரணங்கள் ஒரு புறமிருக்க, படிப்பு முடியுமுன்னர் அகாலமாகப் பாடசாலையை விட்டு விடும் நிகழ்வுகளில், பாடசாலையில் ஏற்படுத்தப்பட்ட செயற்பாட்டு மட்டம் ஒரு முக்கியமான இடம் வகிக்கின்றது. ஆரம்ப வகுப்புகளிலிருந்து போட்டி ஓரளவுக்கு இருந்து வருவதாகத் தோன்றுகிறது. குழந்தைகள் 9 ம் 10 ம் தர வகுப்புக்களை அடையும் போது, விஞ்ஞானம், கணிதம் முதலிய யாவரும் அதிகமாக விரும்பும் கல்வித்தாரைகளுக்கு அனுமதி பெற அவர்கள் முயல்கையில், பாடசாலையை விடும் நிகழ்வுகள் அதிக அளவில் இடம்பெறத்

தொடங்கிவிடுகின்றன. 10ம் தரப்படிப்பின் முடிவில் நடைபெறும் முதலாவது பகிரங்கப் பரீட்சையில் அவர்கள் செயற்பட்ட விதம் அவர்களுடைய எதிர்கால கல்லூரிவாழ்க்கையை நிர்ணயிக்கின்றது. முதலாவது தடையைத் தாண்டி 11ம் தரத்துக்கும் 12ம் தரத்துக்கும் போய், இறுதியில் பல்கலைக் கழகங்களுக்கு அனுமதி பெற முயலும் குழந்தைகளையே இத்தகைப்பு படுமோசமாகப் பாதிப்பதாகத் தோன்றுகிறது. மேலதிகமாகக் கற்கும் முயற்சியில் வழமையான பாடசாலை நேரங்களுக்குப் பின்பு தனியார் போதனாசாலைகளில் சேர்ந்து படிக்கும் பாடசாலைக் குழந்தைகளின் எண்ணிக்கை அதிகரித்துவருகிறது. இதன்விளைவாக அவர்களுடைய பொழுதுபோக்கு, விளையாட்டு நேரங்கள் கட்டுப்படுத்தப்படுகின்றன. பல்கலைக் கழகங்களிலுள்ள இடங்கள் அண்மையில் அதிகரிக்கப்பட்டுள்ள போதிலும், பல்கலைக் கழகங்களில் இடமளிக்கப்படக்கூடிய ஆகக் கூடிய மாணவர்களின் தொகை வரையறுக்கப்பட்டுள்ளது. (வருடாந்தம் ஏறக்குறைய 5,000 பேரைப் புதிதாக அனுமதிக்க முடியும்).

மருத்துவம், எந்திரவியல் போன்ற பல்கலைக் கழகங்களிலுள்ள அதிக பெருமைக்கும் கௌரவத்துக்குமுரிய தொழிற்றுறை பயிற்சி நெறிகளுக்கான அனுமதிகள் இன்னும் அதிகமாக வரையறுக்கப்பட்டுள்ளன. கல்வியில் நிலவும் மிகக் கடுமையான போட்டிகள் குழந்தைகளை அவர்களுடைய இளம்பருவத்திலிருந்தே தொடர்ச்சியான பல தகைப்புகளுக்கு உட்படுத்திவருவதாயிருக்கலாம். அல்லாமலும், குழந்தைகள் மீது பிரயோகிக்கப்படும் மறைமுகமான சமூகச் செல்வாக்கு, நல்லெண்ணத்துடன் பெற்றோர்களும் ஆசிரியர்களும் செய்யும் காரியங்கள் முதலியன உயர் செயற்பாட்டு மட்டங்களை நோக்கிக் குழந்தைகளை நேரடியாகப் பிடித்துத்தள்ளிக் கொண்டிருக்கலாம். இப்படிச் செய்வது கடினமாயிருப்பதைக் குழந்தைகள் காண்கின்றனர்.

(அடுத்த இதழில் முடியும்)

(முன் உள்ளட்டையின் தொடர்ச்சி)

செலவுக் கட்டுப்பாடு

"இதற்கிடையில் அரசாங்கச் செலவினங்களின் மீதான திறைசேரிக் கட்டுப்பாட்டை மேலும் கடுமையாக்குவதற்கு ஒரு முறையை அறிமுகப்படுத்தியுள்ளோம். அரசாங்கத்தின் பாரிய முதலீட்டுத் திட்டங்களின் தொடக்கத்தில் அரசாங்கச் செலவுக் கட்டுப்பாட்டின் சில அம்சங்கள் தளர்ந்திருந்தன. இதற்குக் காரணம் அத்தகைய திட்டங்களைச் செயல்படுத்துவதில் தாமதமோ தடங்கலோ ஏற்பாடாதிருக்க வேண்டுமென்பதாகும். மீண்டும் கண்டிப்பான செலவுக் கட்டுப்பாடுகள் செயல்படுத்தப்பட வேண்டுமெனக் கருதுகிறோம். 1986 முதல் இவ்வகையில் பல நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. ஓர் இரு கட்ட அங்கீகார முறையைக் கொண்டதும் திட்டங்களை இனங்கண்டு, தயாரித்து, அமுல் நடத்துவதற்குமான கண்டிப்பான நடைமுறைகளையும் வழிகாட்டுகைகளையும் அரசாங்கம் விதித்துள்ளது. திட்ட மதிப்பீடுகையில் அமைச்சுகள், திணைக்களங்களின் தொழினுட்பத்திறன் மேலும் பலப்படுத்தப்பட்டுள்ளது.

தேசிய முன்னுரிமைகள்

"அரசாங்கம் தேசிய முன்னுரிமைகள் தொகுதி ஒன்றையும் விதித்துள்ளது. இவற்றில் சமூக நலத்திட்டங்கள், தற்போதுள்ள உள்ளமைப்புச் சொத்துக்களைப் புனரமைத்தல், ஏற்றுமதி நோக்குடைய உயிர்த்துடிப்புள்ள தனியார்துறை ஒன்றின் வளர்ச்சிக்கு ஊக்கமளித்தல் என்பன அடங்கும். எதிர்காலத்தில் அரசாங்க முதலீட்டுத் திட்டமானது, இறுதியாக அவசியமான உள்ளமைப்பை ஏற்படுத்துவதையும், குடிசனங்களில் மிகவும் நலிவுள்ள நிலையிலுள்ளவர்களைப் பாதுகாப்பதையும் நோக்கமாகக் கொண்டிருக்கும்."

(27 பக்கத் தொடர்ச்சி)

இலங்கையிடமுள்ள படகுத் தொகுதி (1986) 10 - 11 தொன் மீன்பிடிப்படகுகள் 97, 3½ தொன் (வெளிமோட்டார்) 2755, வெளிமோட்டர்கள் 9674, இயந்திரம் பொருத்தப்படாத படகுகள் 14036 என்பவற்றைக் கொண்டது. மீன்பிடித் தொழிலுக்கு புதிய இயந்திரப் படகுகளையும் பிறசாதனங்களையும் வழங்கி அதன் தரத்தை உயர்த்தி விஸ்தரிக்கும் கொள்கையை அரசாங்கங்கள் மேற்கொண்டு வந்துள்ளன. சென்ற 30 ஆண்டுகளாக நடைமுறையில் இருந்து வரும் இக்கொள்கையின் பயனாக, மொத்த மீன்பிடிக் கலங்களின் நிலையில் வளர்ச்சி ஏற்பட்டுள்ளது. மீன்பிடிக்கலங்கள், சாதனங்கள் அதிகரிப்பதனாலும், புது மீன்பிடி முறைகளாலும் கரையோர வளங்களுக்கும் சூழலுக்கும் ஏற்படக்கூடிய பாதிப்புகள் ஆராயப்பட்டு சென்றகால கடற்றொழில் அபிவிருத்தித் திட்டங்களில் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளன. எனவே, பல்வேறு கொள்ளளவுகளையும் சாதனங்களையும் கொண்ட படகுகளை ஆழ்கடலிலும் கரையோரங்களிலும் மீன்பிடிப்பதற்காக வழங்குவதற்குத் தீர்மானிக்கப்பட்டது. மறுபுறம் இது சிறிய அளவிலான மீன்பிடி நடவடிக்கைகளுக்குப் பாதுகாப்பளித்தது. ஆனால், அதிகரித்த செயற்பாட்டுச் செலவு காரணமாக, ஆழ்கடல், கரையோரப் பிரதேச மீன்வளங்களைப் பயன்படுத்த எதிர்பார்க்கப்பட்ட இயந்திரம் பொருத்திய படகுத் தொகுதி இப்பொழுது கரையோரங்களில் மீன்பிடிக்கத் தொடங்கியதனால் போட்டி வலுவடைந்தது. மேலும் இதன் விளைவாக வெடிவைத்து மீன்பிடித்தல் போன்ற ஆபத்தான முறைகளும் கையாளப்படுகின்றன. இவர்கள் கரையோரச் சூழல், வளப்பாதுகாப்பு என்பவை பற்றி எவ்வித அக்கறையுமின்றி, இலாபம் பெறுவதிலேயே கண்ணுங் கருத்துமாயுள்ளனர். இது, ஆழ்கடலில் மீன்பிடிக்கச் செல்ல வசதியற்றவர்களான உள்ளூர் மீனவர்களுக்கென ஒதுக்கப்பட்ட பிரதேசங்களில் மீன்வளத்தைப் பெரிதும் குறைக்கச் செய்துள்ளது.

தலைமைத் தபாற் கந்தோரில் செய்திப் பத்திரிகையாகப் பதிவு செய்யப்பட்டது.

மக்கள் வங்கி ஒரு சமூகப்பணித் திட்டமாக "பொருளியல் நோக்கை" வெளியிடுகின்றது. பாரபட்சமற்ற பரிசீலனைகள், கருத்தாழமிக்க கலந்துரையாடல்கள் என்பன மூலம் பொருளாதாரத்திலும் பொருளாதார அபிவிருத்திப் படிமுறையிலும் ஆர்வத்தினை உண்டாக்கி அறிவினை வளர்ப்பதே எமது குறிக்கோளாகும். நாட்டின் மிக முக்கியமான சமூக, கலாசாரத் தேவைகள் குறித்து வங்கியின் வளங்கள் பயன்படுத்தப்படும் பல்வேறுபட்ட திட்டங்களில் இதுவும் ஒன்றாகும்.

மேலும், மக்கள் வங்கி, நாடெங்கணும் சிதறிக் காணப்படும் 200 க்கும் அதிகமான அதன் கிளைகள் மூலமும், சுமார் 550 கூட்டுறவுக் கிராமிய வங்கிகள் மூலமும், கடற்றொழில் வங்கிகள் மூலமும் விரிவான சகல வங்கிச் சேவைகளையும் வழங்கி வருகின்றது. உலகெங்கணுமிருக்கும் முகவர்கள், பிரதிநிதிகள் என்போரின் உதவியுடன் சர்வதேச வர்த்தகம், கொடுப்பனவுகள் என்பன குறித்த சகல அம்சங்களையும் வங்கி மேற்கொண்டு வருகின்றது.

பிரதி விலை ரூ. 3-50

வருட சந்தா ரூ. 40-00

# பொருளியல் நோக்கு

மக்கள் வங்கியின் ஆராய்ச்சிப் பகுதி வெளியீடு

283, கே. சிறில் சீ. பெரேரா மாவத்தை கொழும்பு-13ல் உள்ள இன்டர் நெஷனல் கிரபிக் மெகசின் லிமிடட் அச்சுயந்திரசாலையில் அச்சிடப்பட்டது.